வெளியீடு : 13-12-2003

Issued : 13-12-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 11, 2003 – தொகுதி 42 – எண் 2

**Friday the 11th April, 2003 – Volume 42 – No. 2**

*பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**sembly Secretariat, Chennai - 600 009**

V24,31'P03
184393

[Price Rs. 3.00

**11-4-2003**

1444/2004

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 255-289 |
| **2. தகவல் கோரல்—** | |
| அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் மற்றும் இராணிமேரி கல்லூரி இடமாற்றப் பிரச்சினை குறித்து உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 290-301 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும், வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம் | |
| (ஆ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில நுட்பவியல் துறை | 301-312<br>316-389 |
| (இ) கோரிக்கை எண் 32—சட்டத் துறை | |
| மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார். | 301,305,306<br>308-309,310<br>321-322.326<br>355,359-386 |
| திரு. ஜெக. வீரபாண்டியன் | 306-312 |
| திரு. பி.ஆர். சுந்தரம். | 317-327 |
| திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் | 328-335 |
| திருமதி வி. சிவகாமி | 335-346 |
| திரு. எம்.ஏ. ஹக்கீம் | 346-358 |

பக்கங்கள்

4. **விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—**

திருக்கோயில்களில் அன்னதானத் திட்ட விரிவாக்கம் மற்றும் ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்து. 312-316

5. **அறிவிப்பு—**

தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் 389

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 390

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 28, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி."*

ஒருபக்கம் சாய்ந்துவிடாமல் நாணயமான தராசு முள்போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

## 1. வினாக்கள் – விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 241, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். சிறைமீண்ட செம்மல்கள் யாரையும் காணோமே! (குறுக்கீடு) திரு. டி. மணிக்கு மிகுந்த வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றி, வணக்கம்.

**241—**

**புறவழிச்சாலை**

**•9847–திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 11

(அ) பட்டுக்கோட்டை நகரில் அதிக போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 242. திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைச்சர்.

**242—**

**காவிரி**

***15966–திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையின் வழியே பாயும் காவிரி ஆற்றுப் பகுதியை ஆழப்படுத்தி சுத்தப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசிடம் திட்டம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் அழகைப்பற்றி தங்களைவிட நான் ஒன்றும்

18/895
சென்னை-600 008



2003 ஏப்ரல் 11]

புதிதாகச் சொல்லப் போவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் இன்றைய சூழ்நிலையில் மயிலாடுதுறையில் காவிரி, சென்னையின் கூவத்தை நினைவுபடுத்துவதைப் போல சாக்கடையாகத் தேங்கிக் கிடக்கிறது. பல்வேறு இடங்களில் மண் மேடிட்டு நீரோட்டமே தடைபடும் நிலை இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் துலா உற்சவ தினத்திலே இலட்சக்கணக்கான பக்தர்கள் மயிலாடுதுறையில், காவிரியாற்றிலே புனித நீராடுவது வழக்கம். சென்ற ஆண்டு காவிரியில் நீர் இல்லாததால் மாசுபட்ட தண்ணீரிலே பக்தர்கள் நீராட முடியாமல் மிகப் பெரிய சங்கடம் ஏற்பட்டது. வரும் ஆண்டிலாவது நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு தமிழக அரசு, மயிலாடுதுறை துலா கட்டத்தையாவது தூய்மைப்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையின் வழியே பாயும் காவிரியாற்றை ஆழப்படுத்தவும், சுத்தப்படுத்தவும் பொதுப் பணித் துறையில் தற்போது திட்டம் ஏதுமில்லை. ஆனால் மயிலாடுதுறை நகரப் பகுதியிலிருந்து வரும் சாக்கடை நீர் காவிரி ஆற்றில் கலந்து ஆற்று நீரை மாசுபடுத்துவதைத் தடுக்கும்பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டுத் திட்டத்தில் 9 கழிவு நீர் ஏற்றும் விசைப் பம்புகளை நிறுவி அதன்மூலம் வெளியேற்றப்படும் கழிவுநீரை மயிலாடுதுறை நகரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்திலுள்ள ஆறுபாதி என்ற கிராமத்திற்குக் கொண்டு சென்று புல் வளர்க்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், மயிலாடுதுறை கோட்ட சாகத்திலுள்ள காவிரியாற்றுப் பாசனத்திலுள்ள 247 பி.சி.டி. பிரிவு வாய்க்காலில் விவசாயத் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் அரசாணை எண் 222, பொதுப் பணித் துறை, நாள் 27-6-2002-ன்படி ரூ.158.50 இலட்சம் செலவில் தூர் வாரும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, தற்போது அரசாணை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ன்படி வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் மேலும் 134 பிசிடி கிளை வாய்க்காலில் ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகளை 31-5-2003-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், காவிரி டெல்டாப் பகுதியிலுள்ள ஆறுகளையும், பாசன வாய்க்கால்களையும் சீரமைக்கும்பொருட்டு ரூ.160 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, உலக வங்கி நிதியுதவி

கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. [2003 ஏப்ரல் 11
காவிரி நீர் தகராறு சம்பந்தமான வழக்கு காவிரி நடுவர் நீதிமன்றத்தில் இருபபதால் உலக வங்கி நிதி வழங்குவதில் தாமதம் காட்டுகிறது. காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைத்தவுடன் உலக வங்கியின் நிதியுதவி பெற்று திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். துலாக் கட்டம் என்பது பக்தர்கள் நீராடுவதற்கு மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்டது. ஆனால் அதன் கட்டுப்பாடு பொதுப் பணித் துறையில் இருப்பதால் அதை மட்டுமாவது வரும் நிதியாண்டில் கொஞ்சம் அழகுபடுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அந்தப் படித்துறையினைத் தூய்மைப்படுத்தும் பணி வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கு ஏற்ப எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் காவிரியில் மண் எடுத்த காரணத்தால், மிகவும் பள்ளமாக இருக்கிறது. விவசாயத்திற்குத் தண்ணீரே வருவதில்லை. காவிரியில் ஐப்பசி மாதத்தில் குடமுழுக்கு விழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நீராடுகின்றார்கள். ஆகவே பக்தர்கள் குளிப்பதற்கு வசதியாக காவிரியில் சாக்கடை நீர் சேர்வதைத் தடுத்து நிறுத்தி பக்தர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சந்தானம், காவிரிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? *(சிரிப்பு)*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருணைநதி"

என்று குறிப்பிட்டார்கள். அந்த வைகை நதி பெரும்பாலும் சீமைக் கருவேலியால் ஆக்கிரமிக்கப்பட்டு அந்த நதி இருக்கின்ற இடமே தெரியாத அளவிற்கு தற்போது இருக்கிறது. எனவே தமிழகத்தில் இருக்கின்ற காவிரி மட்டுமல்ல, வைகை போன்ற நதிகளையும் சீரமைப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, வைகை நதியின் மையப் பகுதியில், அதாவது நகருக்குள் ஓடுகின்ற வைகைப் பகுதியில் தற்போது பணிகள் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் வைகை நதி தீரங்கள் அனைத்தையும் சீரமைப்பதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சந்தானம், வைகை சீரமைபபுத் திட்டம் என்ற அந்தக் குழுவிற்கு நான்தான் தலைவர். என்னிடம் தனியாக வாருங்கள்; பேசுவோம். *(சிரிப்பு)*

வினா எண் *243*, திரு. ஆஸ்டின், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**243—**

## சட்டமன்றத் தொகுதிகள்

**•4730 திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி, தொகுதிகளின் எண்ணிக்கையைக் கூட்ட தமிழக அரசு தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 11

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்பொழுது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை ஆணையம் 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்யும். மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து, சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதால், சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகளை மாற்றி தொகுதிகள் எண்ணிக்கையைக் கூட்ட தமிழக அரசு தேர்தல் ஆணையத்திடம் கோர இயலாது.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலே பல தொகுதிகள் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்டதாகவும், பல தொகுதிகள் இரண்டு இலட்சத்திற்கும் குறைவான வாக்காளர்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. அதைப்போல பல தொகுதிகளுடைய எல்லை என்பது 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அதிகமாகவும், பல தொகுதிகள் 10 கிலோ மீட்டருக்கும் குறைவான சுற்றளவைக் கொண்டதாகவும் இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. பல ஊராட்சி ஒன்றியங்களிலே ஒரு பகுதி ஒரு சட்டமன்றத் தொகுதியின் கீழும், இன்னொரு பகுதி இன்னொரு சட்டமன்றத் தொகுதியின் கீழும் வருகிறது. அதைவிட மேலாக சில ஊராட்சிப் பகுதிகளும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதி ஒரு சட்டமன்றத் தொகுதியின் கீழும், இன்னொரு பகுதி வேறொரு சட்டமன்றத் தொகுதியின் கீழும் வருகிறது. எனவே தேர்தலிலே போட்டியிடக் கூடிய வேட்பாளர்களுக்கும் சரி, வெற்றிபெற்ற பிறகு வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினருக்கும் சரி, அரசு நிர்வாகத்திற்கும் கூட பல்வேறு சிரமங்கள் இதனால் ஏற்படுகின்றன. எனவே இந்த வேறுபாடுகளைத் தவிர்க்கும்பொருட்டு அனைத்துத் தொகுதிகளும் ஒரே சீரான வாக்காளர்களையும், ஒரே சீரான பரப்பளவையும் கொண்டதாக அமையும் வகையிலே தமிழக அரசே அதனுடைய பரப்பளவை மாற்றியமைத்தும் எண்ணிக்கையினை அதிகரித்தும் ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசு அறிவித்துள்ள அந்த எல்லை மறுவரையறை ஆணையத்திடம் ஒப்படைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 21-2-2002 ஆம் தேதியன்று மைய அரசு எடுத்த முடிவின் அடிப்படையில், தற்போது இருக்கின்ற நாடாளுமன்றத் தொகுதி ஒட்டுமொத்த எண்ணிக்கை 39-ஐ 2026 ஆம் ஆண்டு வரை மாற்ற முடியாது. அதுபோலவே Legislative Assembly-சட்டமன்றத்தினுடைய தொகுதி 234 என்பதையும் 2026 ஆம் ஆண்டு வரை மாற்ற முடியாது. அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வாக்காளர்களை சமமாக ஒவ்வொரு தொகுதியும் உள்ளடக்கி இருக்க வேண்டுமென்ற நோக்கோடு, மாநிலம் ஒரு எல்லையாக எடுத்து மாநிலத்திலுள்ள மொத்த வாக்காளர்கள் மக்கள்தொகையை அந்த 234-ல் வகுத்து அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் என்ன மக்கள்தொகை இருக்கிறார்கள் என்ற கணக்கையும் எடுத்து, மாவட்டத்தில் எத்தனை சட்டமன்றத் தொகுதிகள் இருக்கிறதோ, அதையும் கணக்கில் எடுத்து, சட்டமன்றத் தொகுதிகளுடைய எண்ணிக்கை அதிகமாகாமல், அதே நேரத்தில் வாக்காளர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரைக்கும் பக்கத்திலே (இருக்கின்ற சட்டமன்றத் தொகுதிக்கு) அதிகமான வாக்காளர்கள் இருக்கின்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து குறைவான வாக்காளர்கள் இருக்கின்ற சட்டமன்றத் தொகுதிக்கு அவர்கள் மாற்றப்படுவார்கள். அப்படி மாற்றப்படுகிறபோது மக்களுக்கும் பாதிப்பு இல்லாமல், பஞ்சாயத்து ஒன்றியம், நகரம் இவற்றிற்கும் அதிகப்படியான பாதிப்பு இல்லாமல், பக்கம் பக்கமாக இருக்கிற பகுதிகளோடு இணைக்கக்கூடிய அளவிற்குக் கிட்டத்தட்ட சரிசமமாக வாக்காளர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் அமையும் நோக்கோடு இதை மாற்றியமைக்க வேண்டும் என்று De-limitation Commission முடிவு செய்திருக்கிறது. அதற்கான ஒரு கூட்டம்கூட வருகிற 17 ஆம் தேதி டெல்லியிலே நடக்கவிருக்கிறது. Associate members என்ற முறையிலே தமிழக அரசின் சார்பிலும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிலே பங்கேற்க இருக்கிறார்கள். தமிழக அரசினுடைய எண்ணத்தை, மக்கள் பிரதிநிதிகளுடைய எண்ணத்தை அந்தக் கூட்டத்தில் அந்த Associate members எடுத்துரைப்பார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து அதில் பரிசீலிக்கப்படும். அவை நிறைவேறும் என்று அரசு நம்புகிறது.

முற்பகல் 10-10

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல,

மத்திய அரசு அமைத்துள்ள இந்த De-limitation Commission-ல் தமிழகத்திலிருந்து எத்தனை சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? இந்த உறுப்பினர்களை நியமனம் செய்யக்கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கிறது? அதைப்போல இந்த ஆணையம் என்பது அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று இந்த எல்லைகளை நிர்ணயம் செய்வது குறித்த ஆய்வினை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்தின் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை மைய தேர்தல் ஆணையம் நியமிக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் தமிழகத்திலிருந்து ஐவர் (குறுக்கீடு) அந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 39 நாடாளுமன்றப் பகுதிகளும், 234 சட்டமன்றப் பகுதிகளும் இதில் உள்ளடக்கியதாக இருக்கும். ஆனாலும்கூட தாழ்த்தப்பட்ட தொகுதியைப் பொறுத்தவரைக்கும் தொகுதிகளுடைய எண்ணிக்கை மாறும். அதைப்போலவே Scheduled Tribe பழங்குடியின மக்களுடைய தொகுதிகளைப் பொறுத்தவரைக்கும் தொகுதிகளுடைய எண்ணிக்கை மாறும். 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகையினுடைய கணக்கெடுப்பில் இதை முடிவு செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் முடிவு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழகத்திலே ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை 1 கோடியே 7 இலட்சத்து 12 ஆயிரத்து 266 பேர் இருக்கிறார்கள். அதாவது 19.18 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை 1991-வது Census-படி 1972-வது Census-ஐ விட அதிகமாக இருக்கிற காரணத்தால் இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் தாழ்த்தபபட்ட மக்களுக்கு அதிகம் கிடைக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் அதேநேரத்திலே Schedule Tribe பழங்குடியின மக்களுடைய எண்ணிக்கை வெறுமனே 5 இலட்சத்து 74 ஆயிரத்து 194 மட்டுமே என குறைந்திருக்கிற காரணத்தால் 1972-ஐவிட அவர்களது கணக்கெடுப்பின்படி 3-ஆக இருக்கிற பழங்குடியின மக்களுக்காக ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி இரண்டாகக் குறையக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது தவறு. கணக்கெடுப்புகூட தவறு. அதை மாற்றியமைக்க வேண்டும், மூன்றே இருக்க வேண்டும்





என்று தமிழகத்தினுடைய பழங்குடி மக்களுடைய சார்பில் அந்தக் கருத்தை அந்த De-limitation Commission-க்கு எடுத்துக் கூறுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். 2001 ஆம் ஆண்டினுடைய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சட்டமன்றங்களின் அந்தத் தொகுதிகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. இவை குறித்து 17 ஆம் தேதி டெல்லியிலே பேசி முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 244 திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**244—**

**கும்பாபிஷேகம்**

***20229—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓராண்டு காலத்திற்குள் கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோயில், அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் திருவிதாங்கூர் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டு பல நூறு ஆண்டுகள் பழமையுள்ளதும், பத்மநாபபுரம் அரண்மனை அருகிலுள்ள மிகச்

சிறப்புமிக்க கோயிலுமாகும். கேரளா பகுதியில் இருந்தும்கூட தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கோயில் பல ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தாமலும், இந்தக் கோயில் குளங்கள் தூர் வாராமலும் மிகப் பழுதடைந்து காணபபடுகிறது. தமிழகத்தில் அனைத்துக் கோயில்களிலும் ஒரு கால பூசை நடத்தி அன்னதானம் போன்ற சிறப்புத் திட்டங்கள் நடத்துகின்ற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தக் கோயிலுக்கும் கும்பாபிஷேகம் நடத்தி, கோயில் குளத்தைத் தூர் வாருவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், சிறப்புமிக்க அந்தத் திருக்கோயில் பத்மநாபபுரம் அரண்மனைக்கு அருகில் இருந்துவருவதால் அந்தக் கோயிலினுடைய பெருமையை சிறப்புப்படுத்த, அந்தக் கோயிலினுடைய குளத்தை தூர் வாரி, அந்தக் கோயிலில் ஒரு தங்கக் கொடிமரம் நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. உடனடியாக அரசு அந்தக் கொடிமரத்தை நிறுத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட வேலிமலை அருள்மிகு குமாரசுவாமி திருக்கோயில் ஒரு மேஜர் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்கு கேரள மாநிலத்திலிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும், பக்தர்கள் வருகை புரிந்து தரிசனம் செய்து வருகிறார்கள். இத்திருக்கோயிலின் செம்பு கொடிமரம் பழுதடைந்துள்ளதாலும், கும்பாபிஷேகம் செய்து பல ஆண்டுகள் ஆனதாலும் திருப்பணி வேலைகள் செய்ய ரூ. 34 இலட்சம் செலவில் மொத்தம் 12 பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. முன்பு அங்கிருந்த செம்பு கம்பிவடத்தை மாற்றி இப்போது தங்க முலாம் பூசிய கொடிமரம் ஏற்பாடு செய்வதற்கு திருப்பணி நிதியாக ரூ.8,70,371 வங்கியில் முதலீடு செயயப்பட்டுள்ளது. முதல் கட்டமாக பழுதடைந்த கொடிமரத்தை மாற்றி, புதியதாக கொடிமரம் நிறுத்தும்பொருட்டு வனத் துறையிலிருந்து 50 சதவீதம் மானிய விலையில் தேக்கு மரம் வாங்கப்பட்டு, மரம் size செய்யப்பட்டு பதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தங்கக் கொடிமரப்



பணிக்கு தமிழ்நாடு பூம்புகார் கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகத்தில் விலைப்புள்ளி பெற்று, தக்க அனுமதி பெற்று, தங்கக் கொடிமரம் திருப்பணி விரைவில் தொடங்கப்படும். மேற்படி திருப்பணிக்கு, திருப்பணிக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யும் முதல்நிலைக் கூட்டம் துணை ஆணையர் செயல் அலுவலர் தலைமையில் 2-4-2003 அன்று நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயில் உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ.17,96,324 ஆகும். இத்திருக்கோயிலுக்கு 1 ஏக்கர் 13 சென்ட் நிலமும் உள்ளது. மானாவாரி என்று சொல்லக்கூடிய 79 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பாறை உள்ளது. தங்கத்தேர் செய்வதற்காக, தங்கக் கொடிமரம் செய்வதற்காக ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாய் அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற குளங்களைத் தூர் வாருவதற்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களிலே இருக்கின்ற அத்தனை குளங்களும் தூர் வாரப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். வருமாண்டு இந்தக் குளங்களும் தூர் வாரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாவி.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியிலுள்ள மருதகாளியம்மன் கோயிலிலுள்ள குளத்தைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலேயிருக்கின்ற அனைத்துக் குளங்களையும் தூர் வாருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் வருகின்ற ஆண்டுகளில் தூர் வாரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 245, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 11

**245—**

## கோயில் திருப்பணி

**•20967—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், மேல்புவனகிரியிலுள்ள வேதபுரீஸ்வரர் திருக்கோயிலை திருப்பணி செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலில் திருப்பணித் திட்டம், மேல்புவனகிரியிலுள்ள திருப்பணி மன்றத்தின் மூலமும், கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.25 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டும் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மேல்புவனகிரி வெள்ளாற்றங்கரையில் அமைந்துள்ள சுமார் 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த வேதபுரீஸ்வரர் திருக்கோயில் சுமார் 45 ஆண்டுகளாக பாழ்பட்டுள்ளது. இத்திருக்கோயில் கிருஷ்ணதேவராயர் ஆண்ட காலத்தில் கட்டப்பட்டதாக கல்வெட்டு கூறுகிறது. இத்திருக்கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு சூரசம்ஹாரம் செய்வதற்காக 8 ஏக்கர் நிலமும், அன்னாபிஷேகம் செய்வதற்காக 2½ ஏக்கர் நிலமும், மாசி மக திருவிழாவுக்கு புவனகிரி அருகே உள்ள கிள்ளை கடற்கரைக்குச் சென்று வருவதற்காக அப்பகுதியில் 10 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம், இத்திருக்கோயிலுக்கு 20½ ஏக்கர் நிலம் உள்ளது. அப்படியிருந்தும் சுமார் 45 ஆண்டுகளாக



2003 ஏப்ரல் 11]
மிகவும் பாழ்பட்டுள்ள இத்திருக்கோயிலைப் புதுப்பித்து, திருப்பணியைச் செய்து முடிக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம்,
மேல்புவனகிரி அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டியலைச்
சேராத திருக்கோயில். சிதம்பரம் நகரில் அருள்மிகு தில்லை காளியம்மன்
திருக்கோயில் செயல் அலுவலர் இத்திருக்கோயிலின் தக்காராக
நியமிக்கப்பட்டு நிருவாகம் பார்த்து வருகிறார். இத்திருக்கோயிலின்
ஒன்பது திருப்பணி வேலைகள் மேல்புவனகிரி இறைப்பணி மன்றத்தின்
மூலமாக, உபயமாக ரூ.1,99,500 மதிப்பில் நடைபெற்று வருகின்றன.
விரைவில் இப்பணிகள் அனைத்தும் முடிந்து குடமுழுக்கு செய்யப்பட
உள்ளது. எனவே இத்திருக்கோயிலில் திருப்பணிகள் செய்யும் திட்டம்
நடைபெற்று வருகிறது. இங்கே உறுப்பினர் பேசுகின்றபோது 20 ஏக்கருக்குக்
குறைவாக இல்லாமல் இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால்
கணக்கிலே இந்தத் திருக்கோயிலுக்குச் சொத்து, நன்செய் நிலம் 1 ஏக்கர்
38 செண்ட் நிலம்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை யார் யார்
வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ அது
உடனடியாகக் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப்
பிறகு இந்த ஆலயத்திற்குச் சேர்க்கப்படும் என்பதை இந்த நேரத்திலே
அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு மிக்க நன்றி.
அமைச்சருடைய பதிலுரையில் இந்தத் திருக்கோயிலுக்கு ஒரு
ஏக்கர் 38 செண்ட் நன்செய் நிலம் மட்டுமே உள்ளதாகக்
கூறினார்கள். அத்திருக்கோயில் 8 ஏக்கர் நிலம் பொன்னுசாமி
அறக்கட்டளை, அதாவது பெருமாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த
சண்முகம் என்பவர் இடத்திலும், நடராஜ முதலியார் சந்ததியினர்,
அதே பெருமாத்தூர் கிராமத்திலே இருக்கின்றவர் மூலமாக 2½
ஏக்கர் நிலமும், 10 ஏக்கர் கிள்ளை தியாகராஜன் அவர்களிடத்திலும்
இந்தக் கோயிலுடைய சொத்துக்கள் இதுநாள் வரை இருந்து
வருகின்றன. இத்தனை ஏக்கர் நிலம் இந்தத் திருக்கோயிலுக்கு
இருந்தும், மேற்கண்ட நபர்கள் அந்தக் கோயிலுக்காக எந்தவிதப்
பணிகளும் செய்யாமல் இத்திருக்கோயில் பாழடைந்த நிலையில்

இருக்கின்ற இச்சூழ்நிலையில் அந்தப் பகுதிவாழ் மக்கள் ஓய்வுபெற்ற பேராசிரியர் முத்துக்கண்ணு அவர்களுடைய தலைமையில் அப்பகுதியிலே பொதுமக்களிடமிருந்து ரூ.2½ லட்சம் நன்கொடையாக வசூல் செய்து சுவாமி மண்டபம், அம்பாள் மண்டபம், உடையார் மண்டபம், பிள்ளையார் சன்னதி, கிணறு, சுவர் ஆகியவற்றைக் கட்டியிருக்கிறார்கள். மேலும், இத்திருக்கோயிலைக் கட்டி முடிப்பதற்கு தோராய மதிப்பீடாக சுமார் 7 லட்சம் ரூபாய் செலவாகும் என்று நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. நலிவடைந்த பாழ்பட்ட கோயில்களை அரசு எடுத்து திருப்பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்தக் கோயிலையும் அந்தத் திட்டத்திலே எடுத்து, திருப்பணிகள் செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 3 நபர்களுடைய பெயர்களைச் சொல்லி நிறைய நிலங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நன்செய் நிலம் 1 ஏக்கர் 38 சென்ட்டில் இந்த ஆலயத்திற்கு 3 மூட்டை நெல்லை மட்டும்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்பது கண்டறியப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கே அந்த நிலத்திலிருந்து வசூல் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நடைபெற்று வருகின்ற திருப்பணி விவரங்கள் உபயதாரர்கள் மூலம் சுவாமி சன்னதி, வினாயகர் சன்னதி, சண்டிகேஸ்வரர் சன்னதி, அலங்கார மண்டபம், அம்மன் சன்னதி, சுப்ரமணியர் சன்னதி, நவக்கிரஹ சன்னதி, சாந்தி மண்டபம், நந்தி மண்டபம், திருமதில், கிராமப்புற திருப்பணி திட்டத்தின்கீழ் இப்போது சுவாமி சன்னதி முன் மண்டபம் கட்டுதல் அன்பர்களால் அவர்கள் கொடுக்கின்ற நன்கொடைகள் மூலம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மீண்டும் அரசு மூலம் என்ன என்ன பணிகள் செய்ய வேண்டுமோ, அவை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வருகின்ற ஆண்டுகளில் செய்யப்படும் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்புவனகிரியில் உள்ள வேதபுரீஸ்வரர் திருக்கோயிலானது, எந்தவிதமான வருமானமும் இல்லாத திருக்கோயில் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் எடுத்துக் கூறினார்கள்.





அப்படியென்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உன்னத திட்டமான ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் இந்தக் கோயிலும் சேர்க்கப்பட்டுள்ளதா? மேலும், வருமானமே இல்லாத இந்தக் கோயிலுக்கு உண்டான நிலபுலன்கள் 20 ஏக்கர் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருந்தார்கள். அப்படி வருமானமே இல்லாத இந்தத் திருக்கோயில் பயன்பெறுகின்ற வகையிலே அந்த நிலங்களை உரியவர்களிடமிருந்து மீட்டு, அவற்றை விற்று அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தை fixed deposit செய்து அதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து மாதா மாதம் அந்தக் கோயிலினுடைய அன்றாட செலவுகளுக்கும் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமே இன்னமும் யாரிடம் இருக்கிறது என்பது இங்கே உள்ள கோப்புகளிலே இல்லை. அதை வசதி படைத்தவர்கள் யார் யார் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அதன்பின் அந்த நிலங்களை எடுத்து, அங்கே வருகின்ற வருவாயை வைத்து ஆலயங்களுக்கு பூஜைகள் செய்வதற்கும், திருப்பணிகள் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25,000 ரூபாய் ஒரு ஆலயத்திற்கு, நலிவுற்ற ஆலயத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கின்ற அந்த அடிப்படையில், வசதியில்லாத அந்த ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒருகால பூஜைகூட செய்யப்படாமல் இருக்கின்ற ஆலயங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த ஆலயங்களுக்கு ஒரு கால பூஜை செய்வதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 246, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**246—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**•1920—திரு. சி. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் மற்றும் ஓரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், திருநல்லூர் மற்றும் ஓரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் கிராமங்களில் செயல்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியத்தில் முறைப்படுத்தப்பட்ட ஒன்றிய நவீன மருந்தகங்கள் மூன்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு மருத்துவமனைக்கு, அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு ஆகின்ற செலவு ஒரு மாதத்திற்கு 33,000 ரூபாய் ஆகும். அந்த மருத்துவமனைக்கு மருந்து வாங்குவதற்கு 10,000 ரூபாய் மட்டும்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 10,000 ரூபாயில் ஓர் ஆண்டுக்கு அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்குச் சரியான நிலை இல்லாத காரணத்தாலும், அந்த ஒன்றியத்தில் மூன்று மருத்துவமனைகள் இருக்கின்றபோது, ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 12,20,000 ரூபாய் செலவு ஆகிறது. அந்தப் பகுதியினுடைய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அந்த ஒன்றியத்திலே பொது நிதியும் கிடையாது. சிறிய ஒன்றியமாக, 30 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒன்றியப் பகுதியாக இருக்கிறது. அந்தக் காரணத்தினாலும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்களுடைய வளர்ச்சிக்காகவும், அந்த ஒன்றியத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, நிதியைப் பெறுவதற்கு வழிவகை செய்கின்ற முகத்தான், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்தகால ஆட்சியிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தி, ஆரம்ப சுகாதார நிலையமாக





உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்து, எங்களுக்குச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இதுபோன்ற மருந்தகங்கள் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், எப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பற்றாக்குறையின் காரணமாக அந்த மருத்துவமனைகளை நடத்துவதற்கு முடியவில்லையோ அதே நிதித் தட்டுப்பாடுதான் இந்தத் துறைக்கும் இருந்து வருகிறது. ஏற்கெனவே 200-க்கு மேற்பட்ட இதுபோன்ற ஒன்றிய மருந்தகங்கள் சுகாதாரத் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அந்த மருத்துவமனைகள் இன்னும் அதே நிலையில், எந்த விரிவாக்கமும் செய்யப்படாமல் இருந்து வருகின்றன. அதற்குக் காரணம் நிதிப்பற்றாக்குறைதான். எனவே அப்படி மருந்தகங்களை எங்களுடைய துறை எடுத்துக்கொள்கிறபோது, அதிலே இருக்கின்ற டாக்டர்கள், பணியாளர்கள் ஆகியோரையும் சேர்த்துத்தான் நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக கூடுதல் பணியிடங்களை உருவாக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதுதான் எடுத்துக்கொள்ள முடியாமைக்குக் காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இதுபோன்ற மருந்தகங்களை இந்தத் துறை எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தக்க முடிவுகளை எடுப்பதற்கு எங்களுடைய துறை தயாராக இருக்கிறது. இல்லையென்றால், புதிதாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முடிந்தவுடன் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கிறபோது இந்த மருந்தகங்கள் இருக்கிற இடங்களிலே புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகிற அந்தக் கால கட்டத்திலே இந்த மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு எங்களுடைய துறை நிச்சயமாக முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து தருவோம்

சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நன்றிக்கு நன்றி. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் செயல்படுகின்ற அந்த மருந்தகங்களுக்கு நிதித் தட்டுப்பாடு இருப்பது போல், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் இருப்பதால் உயர்த்த முடியவில்லை என்ற பதிலைக் கூறியிருக்கின்றார்கள். என்றாலும் பொதுமக்களின் நலன் கருதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களும் D.P.H. அவர்களுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளனர். அவ்வாறு அனுப்பப்பட்டுள்ள கருத்துருக்களில் என்னுடைய தொகுதியில் அவியூர் ஊராட்சியில் இயங்குகின்ற ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கிற கொள்கை முடிவோ, செயல்குறிப்போ இல்லாத காரணத்தினாலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இந்த ஆண்டு ஏற்படுத்த இயலவில்லை. அப்படிப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 247, திரு. சோ. இராசேந்திரன், அவையிலே இல்லை. ஆகவே வினா எண் 248 எடுத்துக்கொள்ளப்படுகிறது.



வினா எண் 248, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**248—**

**மாணவர் விடுதிகள்**

**•3709—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிகளில் மாணவர் சேர்க்கையைப் பொருளாதார அடிப்படையில் செயல்படுதத அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் மாணவர் சேர்க்கை பொருளாதார அடிப்படையில்தான் செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் சேர்க்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த அளவிற்குத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களிலேயும்கூட வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற, அதாவது ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வரக்கூடிய குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விடுதிகளில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்படும் என்று சொன்னேன். 50,000 ரூபாய் ஆண்டு வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்கள்தான் இந்த பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதேபோல்,

உறுப்பினர் கேட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு அந்த அடிப்படையிலே முன்னுரிமை வரும் என்று நம்புகிறேன். ரூபாய் 50,000 ஆண்டு வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்கள் எல்லாம் சேர்க்கப்படுவார்கள் என்றால் அதிலே இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் எல்லாம் வந்து விடுகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துதான், அதிலே மாணவர்கள் வருகின்ற தூரத்தையும் அவர்கள் பயிலுகின்ற கல்வியின் தரத்தையும் அனுசரித்து, அதன் அடிப்படையிலே இடம் வழங்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளித்தார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் 50,000 ரூபாய் ஆண்டு வருமானம் என்பதால் ஓரளவுக்கு வசதி படைத்தவர்கள் வந்துவிடுகிறார்கள். நான் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புவது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள், பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் கிட்டத்தட்ட 80 விழுக்காடு இருக்கிறார்கள். அந்த 80 விழுக்காடுக்குள் உள்ள குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படை என்று சொன்னால் அதிலே வருகின்ற மனுக்களை பரிசீலனை செய்து இப்பொழுது 40 இடங்கள் என்று வருகின்றபொழுது அந்த 40 இடங்களுக்கு, 50 இடங்களுக்கு மனு பெற்று 40 இடங்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வருகின்ற மாணவர்கள் இருந்தால், அவர்களுக்கே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது 1993-லே ரூபாய் 15,000தான் ஆண்டு வருமானமாக வைத்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை உயர்த்தி அந்த ஆண்டு வருமானத்தை ரூபாய் 50,000 ஆக ஆக்கிவிட்டார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த below poverty line என்று சொல்கின்ற அந்த நிலையில் உள்ளவர்களுக்கு, ஓரளவு முன்னுரிமை கொடுத்து





எப்படிச் செய்வது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களைக் கலந்து இந்த அரசு சிந்திக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு. ப. அரசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**249—**

## கூட்டுறவு நூற்பாலை

**•23414—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில சம்பள உயர்வு குறித்த பேச்சுவார்த்தையைத் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சம்பள உயர்வு குறித்துப் பேசுவதற்கு தொழில் தகராறு எதுவும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத் துறையை அணுகவும் இல்லை. அரசிடம் இது தொடர்பான எந்தப் பிரச்னையும் நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் 4-3-2003 அன்று புதுக்கோட்டை மாவட்ட நூற்பாலையினுடைய தனி அலுவலருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் 11-12-1998 ஆம் தேதிய இருதரப்பு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளவாறு 1-1-2000 முதல் தொழிலாளர்களுக்கு பிற கூட்டுறவு நூற்பாலைகளிலே கொடுக்கப்படும் சம்பளத்தை வழங்குமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று

[2003 ஏப்ரல் 11

அறிவுறுத்தி கடிதம் அனுப்பியிருக்கிறார். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன என்று சொன்னால், இப்படி ஓர் உத்தரவு உங்கள் துறையிலேயிருந்து புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் தனி அலுவலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 18(1) settlement இதற்குப் போடப்பட்டிருக்கிறது. அதாவது நிர்வாகமும் தொழிலாளர்களும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் 1-1-1999 முதல் 31-12-2001 வரை 3 ஆண்டு காலத்திற்கு ஓர் ஒப்பந்தம் அதிலே போடப்பட்டிருக்கிறது. இப்போது அந்த ஒப்பந்தம் முடிந்ததற்குப் பிறகு சம்பள உயர்வு குறித்த பேச்சுவார்த்தையை அவர்கள் தொடர்ந்து நடத்த வேண்டும். அப்படி எந்தத் தாவாவும் எங்களுக்கு, நம்முடைய அரசுக்கு தொழிலாளர்களின் சார்பிலே வரவில்லை. இருந்தாலும் அரசு இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களை அழைத்துப் பேசி, சம்பள உயர்வு அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல திருச்சிராப்பள்ளி தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்திலே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அதிலே இரண்டு தரப்பு, தொழிலாளர் தரப்பு, நிர்வாகத் தரப்பு ஆகிய இரண்டு பேரும் கலந்துகொண்டு 500 ரூபாய் கூடுதலாக சம்பளம் தருகிறோம் என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அதை அமல்படுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, settlement எதுவும் நடைபெறவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை அப்படி நடந்திருக்கிறது. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார். அது தொடர்பான



2003 ஏப்ரல் 11]

தொடர் நடவடிக்கையை அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**250—**

## சேமிப்புக் கிடங்கு

***15184—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் வேளாண் விளைபொருள் சேமிப்புக் கிடங்கு கட்டித்தர அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ. சிவபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தினுடைய பரப்பளவில் இரண்டாவது பெரிய தொகுதியாக விளங்கும் ஒட்டப்பிடாரம் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும், விவசாயப் பெருமக்கள் அதிகமாக வாழும் பகுதியாகும். வானம் பார்த்த பூமியை நம்பி வாழ்கின்ற மக்கள் ஆவர். விவசாயத்தைத் தவிர மற்ற எந்தத் தொழிலும் அந்தப் பகுதியிலே இல்லாத ஒரு சூழ்நிலை நடைபெற்று வருகிறது. மழை பெய்த காலங்களில் பயிரிடும் வத்தல், பருத்தி, நவதானியங்கள், இவற்றுக்கு ஏற்ற விலை வரும் வரை அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அங்கே உள்ள மக்களுடைய வீடுகள் வசதியாக இல்லை. ஆகவே அவற்றைப் பாதுகாப்பாக வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்யத் தகுந்த சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அரசு வரும் நிதியாண்டிலாவது ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கடம்பூர்.

கழுகுமலை ஆகிய இரண்டு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. கடம்பூர், ஒட்டப்பிடாரத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஒட்டப்பிடாரம் பகுதியில், குறிப்பாக நெல் 227 எக்டேர் பரப்பிலும், உளுந்து 7,774 எக்டேர் பரப்பிலும், மிளகாய் 2,452 எக்டேர் பரப்பிலும், மிகக் குறைந்த அளவிலேயே அந்தப் பகுதியிலே சாகுபடி செய்யப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கக்கூடிய விளைபொருட்கள் அறுவடை காலங்களிலேயே விற்பனை ஆகிவிடுகின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே வரக்கூடிய உணவுப் பொருட்களுடைய வரத்தை வைத்துப் பார்க்கிறபோது புதிதாக சேமிப்புக் கிடங்கு கட்டுகிற வாய்ப்பு குறைவாக உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் கயத்தாறு, ஒட்டப்பிடாரம் என இரண்டு ஒன்றியங்கள் உள்ளன. ஒட்டப்பிடாரம் ஒன்றியம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. ஆகையினால் அங்கு அவர்கள் அந்தப் பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு வீடுகளிலே எந்தவித வசதியும் இல்லை. ஆகையினால் வரும் நிதியாண்டிலாவது அதைப் பரிசீலனை செய்து கிடங்கு அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு. லா. சந்தானம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**251—**

**ஊட்டச் சத்துணவு மையம்**

**•20914—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், அல்லிக்குண்டம் ஊட்டச் சத்துணவு மையம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?





**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, அல்லிக்குண்டம் ஊராட்சி, பெருமாள் கோவில்பட்டியில் புதிதாக குழந்தைகளுக்கு என ஊட்டச்சத்து மையம் ஏற்படுத்தித் தரும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினமேகூட அமைச்சர் அவர்கள் உங்களுடைய வினா வருகிறது என்று சொன்னார்கள். நான்கூட நமக்குக் கிடைக்கும் என்கின்ற ஆவலோடு இருந்தேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லை என்கின்ற பதிலை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், உசிலம்பட்டி பகுதி மிகுந்த பின்தங்கிய பகுதி. மிகவும் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்தப் பகுதியிலே ஊட்டச்சத்து என்பது அந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகளுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தப் பகுதிக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பகுதியிலே ஊட்டச்சத்து மையத்தை அரசு அமைத்துத் தரும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வினா நான் கொடுத்தது. எனவே அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தப் பின்தங்கிய பகுதிக்கு இந்த ஊட்டச்சத்து மையத்தை அமைத்துத் தருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச்சத்து மையங்கள் அதிக அளவில் தொடங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமான அளவிலே மனுக்களை சமூக நலத் துறைக்குத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல உசிலம்பட்டி வட்டாரம் என்பது பெண் சிசுக்கொலை நடைபெறுகின்ற பகுதி என்று நம்முடைய அரசுக்கு வந்திருக்கின்ற தகவல்களை அறிந்து மாண்புமிகு அம்மா அவர்கள் தொட்டில் குழந்தை திட்டத்தைக் கொண்டுவருகிறபோதே, உசிலம்பட்டி வட்டாரத்திலே ஒரு வரவேற்பு மையத்தைக்கூட தொடங்கச் செய்தார்கள் என்பது அறிந்ததுதான். ஆகவேதான் உசிலம்பட்டி வட்டாரத்தில் மட்டும் 71 ஊட்டச்சத்து மையங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. அதிலே, இந்த பள்ளிகொண்டம் பஞ்சாயத்திலே உள்ள பெருமாள்கோவில்பட்டியில் 1982 ஆம் ஆண்டு

[2003 ஏப்ரல் 11

முதல் சமுதாய ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திலே 16 குழந்தைகள், 4 கர்ப்பிணி தாய்மார்கள், 6 பாலூட்டும் தாய்மார்கள், ஆக மொத்தம் 26 பயனாளிகள் ஊட்டச்சத்து உணவை தினந்தோறும் பெற்று வருகிறார்கள். ஆனால் மத்திய அரசு நமக்கு நிதி வழங்குகின்றபோது, கொடுத்திருக்கின்ற விதிமுறைகளின்படி ஒரு ஊட்டச்சத்து மையம் தொடங்க வேண்டுமென்றால், ஆயிரம் மக்கள் தொகையும், இரண்டு மையங்களுக்கு இடையே 1½ கிலோ மீட்டர் தூரமும் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு நமக்கு விதிகளை விதித்து இருக்கின்றது. அதனுடைய அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற, பெருமாள்கோவில்பட்டி ஊராட்சியிலே 885 ஜனத்தொகை இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசின் விதிகளின்படி தற்பொழுது ஊட்டச்சத்து மையம் தொடங்குவதற்கு உரிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறுகின்றபோது ஆயிரம் ஜனத்தொகை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது 885 ஜனத்தொகை இருக்கின்றது என்பதை அவர்களே குறிப்பிட்டார்கள். இது பழைய ஜனத்தொகை கணக்கெடுப்புப் பிரகாரம் நடந்தது. இன்றைக்கு இருக்கின்ற நிலையில் அது ஆயிரத்தைத் தாண்டுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. மேலும் 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலே இருந்தால் அமைக்கலாம் என்று சொன்னார்கள். நான் சொல்கின்ற இந்தக் கிராமம் ஏறக்குறைய தற்பொழுது ஊட்டச்சத்து மையம் உள்ள இடத்திற்கும், இதற்கும் 2 கிலோ மீட்டர் தூரமே இருக்கின்ற காரணத்தினால் அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் குறிப்பிலே, பழைய கணக்கு இடம் பெற்றிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு புதிய கணக்கு எடுத்து அதன்படி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

முறபகல் 10-45

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டிப் பகுதியில் குழந்தைகள் ஊட்டச்சத்து மையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர்



2003 ஏப்ரல் 11]

அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மதுரை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். அதுவும், உசிலம்பட்டித் தொகுதி, என்னுடைய மேலூர் தொகுதி, பேரவைத் தலைவர் அவர்களுடைய திருமங்கலம் தொகுதி எல்லாம் ஏழை கூலித் தொழிலாளர்கள் வசிக்கின்ற தொகுதிகள். அவர்கள் கூலி வேலைக்குப் போகின்றபோது தங்களுடைய குழந்தைகளை அந்த ஊட்டச்சத்து மையத்திலேதான் விட்டுவிட்டுச் செல்ல வேண்டும். ஆகையால் நிறைய இடங்களிலே புதிதாக ஊட்டச்சத்து மையங்கள் அமைப்பதற்கு-மதுரை மாவட்டத்தில் இந்த 3 தொகுதிகளிலும் புதிய ஊட்டச்சத்து மையங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மதுரை மாவட்டத்திலேயிருந்து வந்தவள்தான். ஆகவே அந்த மாவட்டத்தைப்பற்றி எனக்கும் தெரியும் என்கிற காரணத்தால் நிச்சயமாக அதிகமான ஊட்டச்சத்து மையங்களைத் தொடங்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252. திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 253, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**253—**

## பேருந்து வசதி

***7012—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து சுமுதீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகன்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்ல பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்ல பொதுமக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே பகுதி பகுதியான பேருந்து வசதி உள்ளதால், கோரிக்கைத் தடத்தில் புதிதாக பேருந்து வழித்தடம் ஏற்படுத்த வேண்டிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம் வழியாக தென்காசிக்கு பேருந்து மிகவும் அவசியமாகிறது. பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து இவ்வழித் தடத்தில் பேருந்து உடனடியாக இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகியவை திருநெல்வேலி—அத்தியூத்து-சுரண்டை மற்றும் திருநெல்வேலி-அத்தியூத்து-தென்காசி ஆகிய இரு பிரதான சாலைகளுக்கிடையே உட்புறமாக அமைந்துள்ள குக்கிராமங்கள் ஆகும். மிகக் குறைந்த வீடுகளும், மிகக் குறைந்த மக்கள்தொகையையும் கொண்ட இக்குக்கிராமங்களுக்கு திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலையிலுள்ள பாவூர்சத்திரத்துடன் தொடர்புபடுத்தி ஏற்கெனவே இரு தனியார் சிற்றுந்துகள் வாயிலாக 30 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், அந்தப் பகுதியிலே ஏற்கெனவே மாண்புமிகு நமது உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் அடைக்கலம்பட்டினம் என்ற இடத்தில் L.S.S.. பேருந்துகளை எல்லாம் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தச் சாலையிலே அடைக்கலம்பட்டினம் கிராமத்தில் அனைத்து L.S.S. பேருந்துகளும் நின்று செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அந்தப் பகுதி மக்கள் L.S.S. பேருந்துகளையும் பயன்படுத்தி பயனடையலாம். மேலும், இந்தச் சிற்றுந்துகளின் மூலமாக 30 சுற்றுக்கள் இயக்கப்படுவதால் அந்த வசதியையும் அந்தப் பகுதி மக்கள்



2003 ஏப்ரல் 11]

பெற்றுக்கொள்ளலாம். எனவே, மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகிய கிராமங்கள் போக்குவரத்து வசதியைப் பெறுவதற்கு ஏற்கெனவே இருக்கிற L.S.S. பேருந்துகளை நிறுத்துவதன் மூலமாகவும் சிற்றுந்துகள் மூலமாகவும் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் இந்த வசதியே போதுமானது என்று கருதி, புதியதாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக புதிய பேருந்துகள் விடுவதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி, முத்துகிருஷ்ணப்பேரி, கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி ஆகிய கிராமத்தைச் சேர்ந்த மக்கள், திருநெல்வேலி அல்லது தென்காசி செல்ல வேண்டுமென்றால், சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆலங்குளத்திற்கோ அல்லது பாவூர்சத்திரத்திற்கோ சென்று பஸ் ஏற வேண்டிய சூழ்நிலை இருந்தது. இப்போது அம்மா அவர்களின் அரசு அடைக்கலப்பட்டினத்தில் L.S.S. பஸ்களை நின்று செல்ல உத்தரவிட்டுள்ளதால் இந்தக் கிராமத்து மக்கள் போதிய பஸ் வசதி பெற்றுள்ளார்கள். ஆகவே இந்தக் கிராமத்து மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் தென்காசியிலிருந்து தடம் எண் 7 அம்மாப்பேரி, பட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக ஜி.கே. புதூர் வந்துகொண்டிருந்தது. அந்தப் பேருந்து தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தக் கிராமப்புறங்களில் சுமார் 7,000 மக்கள் தொகைக்கு மேல் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தென்காசி, திருநெல்வேலி செல்ல வேண்டுமென்றால் சுமார் 8, 9 கிலோ மீட்டர் தூரம் வந்துதான் பஸ் ஏற வேண்டும். இந்தப் பேருந்து ஜி.கே. புதூரிலிருந்து கழுநீர்குளம், மேலபட்டமுடையார்புரம், நாகல்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்லும் பேருந்து. ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு அந்தப் பேருந்தை மீண்டும் இயக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களில் 2 தனியார் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஓடிக்கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியானால், அந்த விவரங்களை அவர் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே Point-to-Point என்ற பேருந்து இயக்கப்பட்டு வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 254, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வினா எண் 255, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**255—**

### ஆற்று மணல்

***8067—திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றுப்படுகைகளிலிருந்து ஆற்று மணல் அனுமதியின்றிக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2003 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றுப்படுகையிலிருந்து கனிமவள ஆற்று மணல் அனுமதியின்றிக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு திடீர் கண்காணிப்பு முதலிய தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் ஆற்றுக்குச் செல்லும் வண்டிப்பாதையில் கற்கள் நடப்பட்டு கள்ளத்தனமாக மணல் எடுக்கச் செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், அமைச்சருக்கும் நன்றி. மாண்புமிகு அம்மாவிடம் போன முறை நேரில் கொடுத்ததன் காரணமாக என்னுடைய தொகுதிக்கு ரூபாய் 20 கோடியே 68 இலட்சங்களை வாரி வழங்கியுள்ளீர்கள். அதற்காக 20 கோடியே 68 இலட்சம் நன்றியைத் தங்களுடைய பாதத்தில் சமர்ப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) கூப்பிட்டக் குரலுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்ததற்குத் தகுந்த மாதிரி தான் நன்றி சொல்வீர்களா? கொஞ்சம் அதிகமாகவே சொல்லலாமே! (சிரிப்பு)

**திருமதி வி. சிவகாமி:** வருவேன் என்பான் கீதையிலே கண்ணன், பார்த்தவர் பார்வைக்குத் தெரிவேன் என்றான் பாரதத்தில் கண்ணன் என்று அம்மா என்னுடைய தொகுதிவாழ் மக்களுடைய குறைகளைத் தீர்க்க இந்த அருமையான திட்டத்தை வழங்கிய தங்களுக்கு என்றும் நன்றியுள்ளவளாக இருப்பேன் என்பதைக் கூறிக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் எனக்குப் பேச வாய்ப்புத் தரமாட்டார் பேரவைத் தலைவர். எனவே உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பாலத்தை மட்டும் அம்மா அவர்களிடம் கேட்டிருக்கிறேன். இணைப்புப் பாலம். அதை மட்டும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தப் பதிலை உரைத்த அமைச்சருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 256, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 11

**256—**

**மலிவு விலையில் சாப்பாடு**

**•8707—திரு. சி. சிவசாமி :** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓட்டல்களில் மலிவு விலையில் தரமான சாப்பாடு வழங்கும் புதிய திட்டம் கொண்டுவரப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஹோட்டல்களில் மலிவு விலையில் தரமான சாப்பாடு வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்து உணவு விடுதிகளிலும் ஒரு சாப்பாடு 15 ரூபாய், 18 ரூபாய், 20 ரூபாய், 25 ரூபாய், 50 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. எனவே வேலைக்குச் செல்கின்ற ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் கருதி, அனைத்து உணவு விடுதிகளிலும் ஒரு சாப்பாட்டிற்கு—ஒரு பொரியல், ஒரு ஊறுகாய், ஒரு அப்பளம், சாம்பார், ரசம், சாப்பாடு உட்பட, குறிப்பிட்ட எடை அளவுள்ள சாப்பாடடை, 10 ரூபாய் அல்லது அதற்கும் குறைவான விலையில் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கோவில்களில் பக்தர்களுக்கு அன்னதானம் தந்த அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஏழை விவசாயிகளுக்காக மதிய உணவு தந்த ஆட்சியில், பள்ளிக் குழந்தைகளுக்காக சத்துணவு தந்த ஆட்சியில், ஏழைத் தொழிலாளர்களுக்காக அனைத்து உணவு விடுதிகளிலும் 10 ரூபாய்க்கு உட்பட்ட, குறைந்த விலையில், உணவு வழங்க, மலிவு விலையில்



2003 ஏப்ரல் 11]

உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதிகளில் உணவுப் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்த, விலைக் கட்டுப்பாடு ஆணையம் போன்ற அமைப்பு ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கம், உணவுப் பொருட்களின் உற்பத்தியில் ஏற்படும் செலவிற்கேற்ப, விலையில் மாற்றங்கள் செய்து வருகின்றது. என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரிசிக்கு விதித்திட்ட வரியினைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே, ஹோட்டல்களில் ரூபாய் 50 இலட்சம் வரை turn-over செய்யப்படுகிறபோது, வரியே இல்லையென்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், நம்முடைய உறுப்பினர் சொல்லியதற்கிணங்க, என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 257, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**257—**

**குடிநீர்**

**•10436—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தினைச் சேர்ந்த முல்லையூர் கிராமம், கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு அரியலூர், செந்துறை, வேப்பூர் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள ஆய்வு செய்யப்பட்டு, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்மிகு பேரவைத் தலைவர்:** திரு. குரு, இருக்கையில் இல்லை.

வினா எண் 258, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**258—**

**பாதாளச் சாக்கடை**

**•35136—திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் தொகுதி, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த பேரூராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை. ஆகையால் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை



அறிக்கையில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்குத் தரமான குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், சாலை மேம்படுத்துதல் போன்ற திட்டங்களுக்கு ரூபாய் 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திருநகர் பேரூராட்சி சுமார் 15,500 வாக்காளர்களைக் கொண்ட பகுதியாகும். கழிவு நீர் அகற்றுவதற்குச் சரியான திட்டம் இல்லாததால் நிலத்தடி நீர் மாசுபடுகின்றது. தொற்று நோய் பாவும் நிலை ஏற்படுகின்றது. மேலும், அரசு சொல்லக்கூடிய நிதியை ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கட்டுவதற்குத் தயாராக உள்ளார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 200 கோடி ரூபாய் நிதியொதுக்கத்தில் திருநகர் பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தினையும் எடுத்துக்கொள்ள அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, தாயுள்ளம் கொண்ட அம்மாவின் பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு குறைந்தபட்சம், ரூ.2 கோடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 20 சதவீதம் அந்தப் பேரூராட்சியினுடைய பொதுமக்கள் பங்களிப்பாகத் தருவதற்கு முன்வந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி நிதிநிலைமை இச்செலவினத்தை ஏற்கும் நிலையில் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், தமிழக அரசால் நிதியொதுக்கீடு செய்ய இயலாத நிலையில் தற்போது நகர்ப்புற பேரூராட்சியிலிருந்து 100 சதவீத பங்களிப்புத் தொகையும் முழுமையாக, பயனாளிகள் வாயிலாகக் கொடுத்தால் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2003 ஏப்ரல் 11

*முற்பகல் 11-00*

## 2. தகவல் கோரல்

### அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் மற்றும் இராணிமேரி கல்லூரி இடமாற்றப் பிரச்சினை குறித்து உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் அரசு ஊழியர்கள் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தார்கள். தலைமைச் செயலகம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., இதில் என்ன கேட்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. சொல்கிறேன். நீங்கள்தான் சொன்னீர்கள், பேசலாம் என்று சொன்னீர்கள். அதுதான் பேச வருகிறேன். என்ன என்பதைச் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விதியிலே (குறுக்கீடு) என்ன விதியிலே சொல்கிறீர்கள்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்ன விதியிலே வேண்டுமானாலும் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால், ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளுங்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால், சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளுங்கள். நேற்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால்....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு அசாதாரணமான சூழ்நிலையிலே சட்டசபையிலே தாராளமாகப் பேசலாம். இது நேரம் இல்லாத நேரம். இந்த நேரத்திலே நான் பேசுகின்றேன்.

நான் ஏற்கெனவே உங்களிடத்திலே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே...



2003 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது என்னுடைய அறைக்கு வந்து நீங்கள் பேசி....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அறையிலே நாங்கள் பேசி இருக்கிறோம். நேற்று நீங்கள் சொன்னீர்கள். எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நேற்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. நிச்சயமாக நீங்கள் உள்ளே வந்தால் எழுப்ப அனுமதிப்பேன் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் என்னுடைய அறைக்கு வந்து பேசி அதை முடிவு செய்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதை எடுத்துக் கொள்ளலாம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. இன்றைக்கு நீங்கள் கேள்வி நேரத்திற்கே வரவில்லை, என்னுடைய அறைக்கும் வரவில்லை. திடீரென்று வந்திருக்கிறீர்கள். நான் சொல்வது, அரசியலிலே நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தரப் பகைவர்களும் இல்லை. நிரந்தர நன்மைகள் மட்டும்தான் உண்டு (குறுக்கீடு) நிரந்தர நன்மைகள் மட்டும்தான் உண்டு. சட்டமன்றத்திற்கு என்று நிரந்தர விதிகள் உண்டு. நிரந்தர மரபுகள் உண்டு. அரசியல் காரணத்திற்காக சட்டமன்றத்தின் விதிகளை நீங்கள் பலியாக்கக்கூடாது. நீங்கள் மூத்த உறுப்பினர். நீங்கள் அவையினுடைய விதிகளுக்கும் மரபுகளுக்கும் உரிய மரியாதையைத் தர வேண்டும். நீங்கள் கேள்வி நேரத்திற்கே இங்கே வந்திருக்கலாம். என்னுடைய அறைக்கு வந்திருக்கலாம். பேசி இருக்கலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கேள்வி நேரத்தின்போதே வந்துவிட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் குறிப்பிடுவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, hit and run என்பதைப்போல, வந்து குழப்பம் விளைவித்துவிட்டு ஓடுவது என்பது சரியல்ல. சரி. இப்போது என்னவென்று கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் நேற்றைய தினம் வேலைநிறுத்தம் செய்தார்கள். தலைமைச் செயலகம் செயலற்றுக் கிடந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. எஸ்.ஆர்.பி., என்ன பிரச்சினை என்று ஏதாவது சொல்லிக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னால் ஒரே வார்த்தையிலே பிரச்சினையைச் சொல்ல முடியாது. எனக்குக் குறள் எழுதத் தெரியாது. நான் வள்ளுவன் இல்லை, குறள் எழுதுவதற்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன பிரச்சினை? இதிலே என்ன அரசிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள்? என்ன பதிலை எதிர்பார்க்கிறீர்கள்? புரியவில்லை எனக்கு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஒரு வார்த்தையிலே சொல்ல முடியாது. பிரச்சினையைத்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட சொற்பொழிவாற்றுவதற்கு வாய்ப்புக் கிடையாது. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இதிலே நீண்ட சொற்பொழிவாற்றுவதற்கு வாய்ப்புக் கிடையாது. அரசு ஊழியர்கள் தொடர்பான பிரச்சினையில் அரசினுடைய பதிலை எதிர்பார்க்க விரும்புகிறேன் என்று நீங்கள் கேட்டால் அது வேறு. அங்கே செயலற்றுக் கிடந்தது, இங்கே செயலற்றுக் கிடந்தது என்றால், எல்லா இடத்திலும் செயல் நடந்தது. சட்டமன்றம் உட்பட எல்லா இடத்திலும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு அசாதாரண சூழ்நிலை இருந்ததால் நான் சொல்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான அசாதாரணமான சூழ்நிலையும் இப்பொழுது தமிழ்நாட்டில் நிலவவில்லை. எல்லாமே சாதாரணமாக, அமைதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது உங்களுடைய கருத்து. எங்களைப் பொறுத்தவரையில் நேற்றையதினம் ஒரு அசாதாரணமான சூழ்நிலை நிலவியது. அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம். அதைப்போல மாணவர்கள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பு. சட்டத்தை (குறுக்கீடு) ஆம்.



அதுதான் உயர் நீதிமன்றமே சொல்லிவிட்டதே. அப்புறம் என்னைப் பார்த்து ஏன் சிரிக்கிறீர்கள்? உயர் நீதிமன்றமே சிரிக்கிறதே. அதுதான் உயர் நீதிமன்றமே சிரிக்கிறதே. நம்மைப் பார்த்து உயர் நீதிமன்றமே சிரிக்கிற அளவுக்கு நாம் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன கேட்க வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைப்பற்றிப் பேச வேண்டாமா? ஒரு வார்த்தையிலே பேச வேண்டுமென்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வார்த்தையிலே சொல்ல வேண்டுமென்பது இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் சொல்ல வருகிறேன். சொல்லவே விடாமல் என்னைத் தடுத்தால், கேட்க வேண்டும் என்றால் எப்படிக் கேட்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள், கேளுங்கள். என்ன பிரச்சினை என்று கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசியல்வாதிகள் உள்ளே நுழையக்கூடாது என்றுதான் உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சொல்லாததைச் சொல்லாதீர்கள். அதுமட்டுமல்ல. எம்.எல்.ஏ.-க்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். யார் கைது செய்யப்பட்டார்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பது முக்கியமில்லை. சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கென்று சில தனி உரிமைகள் உண்டு. நான் இந்த அவையிலே பேசினால் வெளியிலே யாரும் என்னைக் கேள்வி கேட்க முடியாது. ஏன் பேசினாய் என்று கேட்க முடியாது. யாரும் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது. அதைப்போல சில உரிமைகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக உண்டு. சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு அரசு அலுவலகத்திற்குச் செல்வார்களேயானால், அவர்களை அலுவலர்கள் எழுந்து நின்று வரவேற்க வேண்டும். அவர்களை இருக்கையில் அமரச் செய்துவிட்டுத் தாங்கள் அமர வேண்டும் என்று அரசு ஆணையே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகளுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டியவன்தான். ஆனால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வெளியிலே முறைகேடாக நடந்துகொண்டால் அதற்கு நான் என்ன செய்வது? வெளியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் கொலை செய்து.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வருகிறேன், வருகிறேன். அதற்கும் நான் வருகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிரத்யேக உரிமைகள் இருக்கின்றன என்று சொன்னால், அந்த உரிமைகள் சட்டமன்றத்திற்கு உள்ளேதான் இருக்கின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்திற்கு உள்ளே என்ன பேசினாலும் அதைப்பற்றி வெளியே யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால் ஒரு மகளிர் கல்லூரிக்குள், அந்தக் கல்லூரி முதல்வர், தலைவரின் அனுமதி இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளே சென்று, அங்கே படித்துக்கொண்டிருக்கும் மாணவிகளைப் போராடுவதற்குத் தூண்டுவதும், அவர்களைப் படிக்க விடாமல் அவர்களின் கவனத்தைத் திசை திருப்புவதும், அங்கே ஒரு கொந்தளிப்பைத் தூண்டுவதும் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் நிச்சயமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதைப் பற்றி இங்கே மாண்புமிகு எஸ்.ஆர்.பி. பிரச்சினை எழுப்புகிறார். எதனால் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்? சில சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஸ்டாலின், திரு. தண்டாரம்பட்டு வேலு, திரு. பொன்முடி, திரு. ஜெ. அன்பழகன், இன்னொருவர் திரு. உசேன் ஆகிய 5 தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்களுடன் சில தி.மு.க.-வைச் சேர்ந்த இன்னும் சில நபர்களும் அத்துமீறி, அனுமதியின்றி இராணி மேரி கல்லூரி வாசலில் நின்று கொண்டிருந்த காவலாளியைத் தள்ளிவிட்டு, 'உன்னை ஒழித்துக் கட்டி விடுவோம்' என்றெல்லாம் மிரட்டி, உள்ளே சென்று, அமைதியாகப் படித்துக்கொண்டிருந்த மாணவிகளைப் படிக்கவிடாமல், அவர்களை ஒன்று திரட்டி, அவர்களிடம் 'நீங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுங்கள்; நாங்கள் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்கிறோம்; நாங்கள் உங்களுக்கு ஆதரவாக



போராட்டத்தை இருப்போம்; யாருக்காகவும் பயந்து நீங்கள் விட்டுவிடாதீர்கள்; முதலமைச்சர் இந்தப் பக்கம் சென்றால் அவருடைய வாகனத்தை வழிமறியுங்கள்; அமைச்சர்கள் இந்தப் பக்கம் சென்றால் அவர்களுடைய வாகனங்களை வழிமறியுங்கள்; தொடர்ந்து போராடுங்கள்' என்றெல்லாம் பேசி, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் மாணவியர்களைத் தூண்டுகிறார்கள் என்று சொன்னால், அது criminal trespass ஆகும். இன்னும் சில section-களின்கீழ் அது குற்றமாகும். அதற்காகத்தான் காவல் துறையினர் அந்தக் கல்லூரியின் Principal கொடுத்த புகாரின்பேரில் வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். ஆகவே இதிலே எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகம்தான மாணவிகளைப் படிக்கவிடாமல் செய்தது என்று உயர் நீதிமன்றமே கண்டனம் தெரிவித்திருக்கிறது. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினைபற்றி விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிமணியன்:** இல்லை, இல்லை. தீர்ப்பு சொல்லியாகிவிட்டது. ஆணை பிறப்பித்தாகிவிட்டது. விவாதிக்கலாம். ஆணை பிறப்பித்தாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., நானே சொல்கிறேன். திரு. பழனிசாமி அவர்களேகூட இராணி மேரி கல்லூரிக்குப் போனார்; திரு. நன்மாறன், இராணி மேரி கல்லூரிக்குப் போனார். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** திரு. சோ. பாலகிருஷ்ணனும் போனாரே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணனும் போனார். போனவர்கள் வெளியிலே நின்றுகொண்டிருந்தார்கள். வாயில் ஓரத்திலே, வெளியிலே நின்றுகொண்டு மாணவிகளுக்கு ஆதரவைத் தெரிவித்துவிட்டு வந்தார்கள்; உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, திரு. எஸ்.ஆர்.பி. போன்ற, திரு. ஸ்டாலின் போன்ற அரசியல்வாதிகள் இராணி மேரி கல்லூரிக்குள் நுழையக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார் என்பதை நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு இடத்திற்குச் செல்லக்கூடாது என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. யாராக இருந்தாலும், உரிமை கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. இந்த வார்த்தையை சட்டமன்றத்திற்குள் பேசுவதால், அவர் Contempt of Court—குற்றத்திலேயிருந்து தப்பிக்கிறார். நேற்று இந்த வார்த்தைகளைச் சொன்னவர், இந்த உத்தரவைப் போட்டவர் உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி. தலைமை நீதிபதி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்; அரசியல்வாதிகளோ, அந்தக் கல்லூரியோடு தொடர்பில்லாதவர்களோ கல்லூரி வளாகத்திற்குள் நுழையக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலகம் ரொம்ப பழுதடைந்திருக்கிறது; தலைமைச் செயலகத்திலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பழனிசாமி, இதிலே விவாதம் எல்லாம் கிடையாது. விவாதம் எல்லாம் கிடையாது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நான் விவாதம் செய்யவில்லை. தலைமைச் செயலகம்...(குறுக்கீடுகள்) எங்களைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துமீறி இராணி மேரி கல்லூரிக்குள் நுழைந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்தேன். இப்போது பேசிய மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கல்லூரிக்குள் செல்லக்கூடாது என்று சொல்வற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்கிறார். அப்படியானால் உயர் நீதிமன்றத்தின்



தலைமை நீதிபதிக்கே அந்த அதிகாரம் இல்லை என்று சொல்கிறாரா திரு. எஸ்.ஆர்.பி.? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை. மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரும் போகக்கூடாது; சட்டமன்ற உறுப்பினர்கள போகக்கூடாது என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சொல்லியிருக்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No. It is being torn out of context.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பத்திரிகைகளைப் பார்க்க வேண்டும். உயர் நீதிமன்றத்தின் ஆணையை வாங்கி அவர் படிக்க வேண்டும். நேற்று தலைமை நீதிபதி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாணவிகள், ஆசிரியர்கள், கல்லூரி ஊழியர்கள் தவிர, அந்தக் கல்லூரியோடு தொடர்பில்லாத எந்த வெளி நபரும் கல்லூரிக்குள் நுழையக்கூடாது என்று தெளிவாக, திட்டவட்டமாக உத்தரவிட்டிருக்கிறார். மாணவியரின் பெற்றோர்கள் உள்ளே செல்ல வேண்டுமென்றால்கூட அவர்கள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டுதான் செல்ல வேண்டும் என்று தலைமை நீதிபதி கூறியிருக்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியே இருந்தாலும்கூட, அந்த உத்தரவுகள் நேற்றுதான் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. 3 நாட்களுக்கு முன்னால் பிறப்பிக்கப்படவில்லை. (குறுக்கீடு) ஏப்ரல் 7-ஆம் தேதி, 8-ஆம் தேதி—3 நாட்களுக்கு முன்பாகவே பிறப்பிக்கப்படவில்லை.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) இதை ஒத்திவைப்புப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவில்லை. இதில் விவாதம் ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களின் தகவலுக்காக நேற்று உயர் நீதிமன்றத்தில் Chief Justice சொன்னதை இங்கே வாசிக்கிறேன். "No other person except the students, teachers, non-teaching staff and parents shall be permitted to enter into the College campus. Parents or guardians of those students identified by them or already recognised by the College authorities shall alone be allowed to meet the students on prior permission from the College authorities."

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்தத் தீர்ப்பு நேற்றுதான் வழங்கப்பட்டது. அதற்கு முன்பு M.L.A. போகக்கூடாது என்று எந்தத் தீர்ப்பும் கிடையாது. பிரச்சினை ஏற்படுகிறபோது அப்பிரச்சினை நடக்கிற இடத்திலே M.L.A.-க்கள் தாராளமாகச் செல்லலாம்...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதத்திற்கு இடமில்லை. இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படவில்லை. விவாதத்திற்கு இடம் கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர்.பி. இப்போது எழுப்பிய பிரச்சினைக்கும் நான் பதில் கூறுகிறேன். திரு. ஸ்டாலினும், அவருடன் இன்னும் சில தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும், தி.மு. கழகத்தைச் சேர்ந்த நபர்களும் கடந்த 8 ஆம் தேதியன்று இராணி மேரி கல்லூரிக்குள் நுழைந்தார்கள். அன்றையதினம் ஏற்கெனவே இராணி மேரி கல்லூரிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த அறிவிப்பையும் மீறிச் சில மாணவியர்—மாணவிகளில் ஒரு பிரிவினர்—போராட்டம் நடத்துகிறோம் என்று போராட்டம் நடத்துவதற்காகவே அந்தக் கல்லூரி வளாகத்திற்குள் இருந்தார்கள். அத்தகைய ஒரு அசாதாரண சூழ்நிலையில் கல்லூரி பிரின்சிபாலின் அனுமதியில்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளே நுழைந்தது, மாணவிகளைப் போராடத் தூண்டியது சட்டவிரோதமான செயல்தான். அது Criminal Trespass-தான். ஆகவே காவல் துறையினர் எடுத்துள்ள நடவடிக்கை சரியானதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** அரசாங்கம் கைது செய்வதை நிறுத்த வேண்டும் என்பதுதான் மாணவிகள் போராட்டமே தவிர, போராட்டத்தை மாணவிகளிடம் யாரும் தூண்டவேயில்லை.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன சொல்ல வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வெளியே நின்றது தவறு, அவர்கள் செல்வதை நிறுத்தக்கூடாது, அந்த வளாகத்தை மூடக்கூடாது என்று உயர் நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதம் ஒன்றும் கிடையாது. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளே நுழைந்தது பற்றி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணி மேரி கல்லூரி விவகாரம், அது சம்பந்தப்பட்ட வழக்கு இன்னும் முடியவில்லை. It is sub-judice. இன்றைக்கும் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே அது தொடர்பாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவர முடியாது. அதைப்போலவே அரசு ஊழியர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் அதுவும் இப்போது sub-judice தான். அதற்காகவும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவரமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அரசு ஊழியர்கள் பிரச்சினையோ இராணி மேரி கல்லூரி பிரச்சினையோ எதையும் பேசுவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. என்ன, சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை. நேற்றையதினம் நான் பேசிக்கொண்டிருக்கும்போது இடைமறித்து அவை முன்னவர் அவர்கள் பேசினார். நீங்கள் தீர்மானம் கொண்டுவரச் சொன்னீர்கள். தீர்மானம் தாராளமாகக் கொண்டு வரலாம். அவர் பேசினாரே எந்த விதியின்கீழ் பேசினார்? பேசியது மட்டுமல்ல. காழ்ப்புணர்ச்சி என்று சொன்னார், திட்டமிட்ட சதி என்று சொன்னார், சூழ்ச்சி என்று சொன்னார். இப்படியெல்லாம் குற்றம் சொல்லலாமா அவர்? எந்த விதியில் இடம் கொடுத்திருக்கிறார்கள் அவருக்கு? எந்த விதியில் அவருக்கு இப்படியெல்லாம் பேச இடமிருக்கிறது?

[2003 ஏப்ரல் 11

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் மட்டும் பேசவில்லை. இன்றைக்குத் தமிழக மக்களே இதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தச் சட்டமன்றத்தில் தினந்தோறும் நடப்பதைத் தமிழக மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். முன்பெல்லாம் பத்திரிகைகளில் மட்டும்தான் செய்திகள் வரும். தமிழ்நாட்டில் அதிகப்படியானோர் பத்திரிகைகளைப் படிப்பதில்லை; அன்றும் படிப்பதில்லை, இன்றும் படிப்பதில்லை. ஆனால் தொலைக்காட்சியை எல்லோரும் பார்க்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து மக்கள் பிரச்சினைகளைப்பற்றி இங்கே பேசி விவாதித்து, தங்கள் தொகுதி மக்களுக்குத் தேவையான அரசாங்க உதவிகளை இங்கே கேட்டு, அத்தகைய ஜனநாயகக் கடமையை ஆற்றுவதை விட்டுவிட்டு, தினந்தோறும் இந்த அவைக்கு வந்து ரகளை செய்வதையும், இந்த அவையை நடைபெற விடாமல் இடையூறு செய்வதையும் தினந்தோறும் எல்லா விதிகளையும் காற்றிலே பறக்க விட்டுவிட்டு இங்கே அராஜகமான முறையில் நடந்துகொள்வதையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இப்படித் தங்கள் கடமையை மறந்து, பொறுப்பை மறந்து, பொறுப்புக்கெட்டத்தனமாக இப்படி நடந்துகொண்டிருக்கிறார்களே என்று மக்கள் உங்களை வெறுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)*

*(முற்பகல் 11-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. உங்களுடைய கேள்விகளுக்கான, பிரச்சினைகளுக்கான பதிலை முதலமைச்சர் சொல்லிவிட்டார். இனிமேல் இதிலே விவாதிப்பதற்கு இடம் கிடையாது.

[இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.]



2003 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதெல்லாம் ஒன்றும் இல்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 30-தகவல் தொழில்நுட்பவியல் துறை

### (இ) கோரிக்கை எண் 32-சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3, நீதி நிருவாகம். மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 3-ன்கீழ் வருவாயக் கணக்கில் ரூ.144,47,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். திரு. ஐ. கணேசன் (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Submission, please. பொறுப்புக்கெட்டத்தனமாக என்று மாண்புமிகு முதலமைச்சர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் சட்டமன்ற மரபை மீறிய வார்த்தை கிடையாது. பொறுப்பற்றதனம் என்பது ஒன்றும் சட்டமன்ற மரபை மீறிய வார்த்தை அல்ல.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறோம். எதிர்க்கட்சிகள் பொறுப்புடன்தான் செயலபடுகிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாங்கள் பொறுப்பற்ற முறையில் இருக்கவில்லை. எதிர்க்கட்சிகள்...

[2003 ஏப்ரல் 11

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகக் கடமையை...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல்.

169 திரு. ஐ. கணேசன்

806 டாக்டர் ஆர். கோவிந்தசாமி

2235 திரு. அ.இரா. மலையப்பசாமி

2354 திரு. ஆர். கிருஷ்ணன்

2406 திரு. க. முருகவேல் ராஜன்

2779 திரு. மு. கார்த்தி

2881 திரு. கி. பாரிமோகன்

3359 திருமதி காசாம்பு பூமாலை

3566 திரு. டி.கே. இராஜா

3928 திரு. ஜி.கே. மணி

582 திரு. என். நன்மாறன்

953 திரு. டி. மணி

1590 திரு. கே.சி. கருணாகரன்

6932 திரு. கே. மகேந்திரன்

654 திரு. ஜி. பழனிசாமி

3862 திரு. ஏ.எஸ். கண்ணன்

1115 திரு. எ.வ. வேலு

2950 திரு. என்.ஏ.எம். உசேன்

3839 திரு. ப. ரங்கநாதன்

மேற்கண்ட உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானத்தை மொழியவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1167, திரு. லா. சந்தானம், (குறுக்கிடுகள்) திரு. சந்தானம், வெட்டுத் தீர்மானத்தை மொழியுங்கள்.



2003 ஏப்ரல் 11]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,47,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

2214 திரு. சு. சிவராஜ்

2673 திரு. எச்.எம். ராஜு

4225 திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்

1794 திருமதி எஸ். மகேஸ்வரி

2377 திரு. துரை. கி. சரவணன்

மேற்கண்ட உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானத்தை மொழியவில்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2930, திரு. ப. அரசன். (குறுக்கீடுகள்) திரு. அரசன், வெட்டுத் தீர்மானத்தை மொழியுங்கள்

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி நகரில் சார்பு நீதிமன்றம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,47,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

1734 திரு. எம். நடராஜன்

3713 திருமதி டி. யசோதா

1827 திரு. டி. சுதர்சனம்

3736 திரு. ஆர். சக்கரபாணி

3259 திரு. கோ. இரவிராஜ்

437 திரு. கோவை தங்கம்

1979 திரு. எம். ராம்குமார்

282 திரு. சி. ஞானசேகரன்

488 திரு. கா. கந்தசாமி

684 திரு. தி. வேல் முருகன்

1226 செல்வி க. பாலபாரதி

1379 திரு. கே.வி. முரளிதரன்

1439 திரு. கே. ஆறுமுகம்

1895 திரு. மே.ப. காமராஜ்

மேற்கண்ட உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானத்தை மொழியவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குப் பதில் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். பதில் சொல்ல சந்தர்ப்பம் கொடுங்கள். Speaker Sir, எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

*(இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

### (ஆ) கோரிக்கை எண் 30-தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30, தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 30-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,36,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1165, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,36,89,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2928, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதுக்கோட்டையில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,36,89,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 32-சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32, சட்டத் துறை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 32-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,07,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1163, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,07,76,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், தகவல் தொழில்நுட்பவியல் துறை, சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அரசன் அவர்களுக்கு இலாப தினம் என்று ஜோதிடம் சொன்னார்கள். அதேபோல, இன்றைக்கு எனக்கு ஏதோவிதமான

@ 391 முதல் 445 வரையிலான பக்கங்களில் இணைப்பு I, II மற்றும் III—ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



அதிர்ஷ்டம் என்றுதான் நான் கருதுகிறேன். கொஞ்சம் கூடுதலாக நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொண்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேசப் பணித்த தங்களுக்கும், அவையினருக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நீதி நிருவாகமே ஒரு நாட்டின் உறுதியான தூண்" என்று ஜார்ஜ் வாஷிங்டன் கூறிய கருத்தையும், "உண்மை செயல்படும் நிலையே நீதி" என்று பெஞ்சமின் டிஸ்ரேலி கூறியதையும், வழக்குத் தொடுக்கின்ற பொது மக்களுக்கு விரைவான நீதி கிடைக்கவேண்டுமென்ற இலக்கினை எய்தும் பொருட்டு, அதற்குத் தேவையான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் பிற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற அரசின் உறுதிப்பாட்டையே முன்னுரையாகக் கொண்டு கொள்கை விளக்கக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்ப, 2003-2004 ஆம் நிதி ஆண்டிலே, ரூ. 170.68 கோடிக்கு நிதியை உயர்த்தி இருப்பதை நான் வரவேற்கிறேன். சென்னை உயர் நீதிமன்றத்திலே, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம்.(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே இருந்து புறப்பட்டுப் போனவர்கள் லாபியிலேயே நிருபர்களுக்குப் பேட்டியளித்துக்கொண்டு, அங்கேயே Press Conference நடத்திக்கொண்டிருப்பதைப் போல ஒரு தகவல் வருகின்றது. அது உண்மையாக இருக்குமேயானால், அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைக் காவலர்கள் உடனடியாக, அப்படி நடைபெறுமானால், எதிர்க்கட்சித் தலைவர்களை அங்கேயிருந்து வெளியேற்ற வேண்டுமென்று நான் ஆணையிடுகிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தை கணினிமயமாக்குவது வரவேற்கத் தகுந்தது. இந்த வசதி மாவட்ட அளவிலே மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வரை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதேபோல, பத்திரிகையாளர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரிகை நிருபர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவையிலிருந்து வெளியேறிய, வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது பேட்டியளித்தால் சட்டமன்ற வளாகத்திற்குள்ளே, அவர்களுடைய

பேட்டிகள் எதையும் பதிவு செய்யக்கூடாது. அப்படிப் பதிவு செய்யக்கூடிய பத்திரிகை நிருபர்கள், பிறகு இங்கே உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள். அந்த அளவிற்கு நிலைமை வரும் என்பதை இப்போது எச்சரிக்கையாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து அந்த முறையிலே ஈடுபட வேண்டாம்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாஜிஸ்ட்ரேட் கோர்ட் சப்-கோர்ட் வரை விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருமைக்குரிய சென்னை உயர் நீதிமன்றத்திலே அனைத்து நீதிமன்றங்களிலும், மற்ற நீதிபதிகள் முன் என்ன வழக்கு நடைபெறுகிறது என்பதைக் கண்டறிவதற்கு ஏற்ப 'Case indication display' உடனே அமைத்துத் தர வேண்டும். இது உயர் நீதிமன்ற வழக்குரைஞர்களுக்குப் பயன்படுவதோடு, அவரை நம்பியிருக்கின்ற கட்சிக்காரர்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம்கூட நீண்டநாட்களாக இதைக் கோரிக்கையாக வைத்திருக்கிறது. இதனை நடப்பு நிதியாண்டிலேயே சற்று கூடுதல் நிதி ஒதுக்கி நிறைவேற்ற வேண்டும். இது நம் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ள 'Speedy and effective justice' என்ற நோக்கத்தை நிறைவேற்ற உதவும் என்று நான் கருதுகிறேன்.

வழக்குகள் தாமதமாவதற்கு மிக முக்கிய காரணம் 'judgement copy'-யினுடைய நகல்கள். அதேபோன்று தீர்ப்பு நகல்களோடு குற்றப்பத்திரிகை நகல்கள் தயாரிப்பதிலே ஏற்படுகின்ற காலதாமதம்தான், மிக முக்கிய காரணமாக இருக்கிறது. உதாரணமாக, சாதாரண 325, 123 வழக்கில்கூட 10 குற்றவாளிகள் இருந்தால் அந்த 10 பேருக்கும் தனித்தனியாக type செய்து 15 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையின் நகல்களை மாஜிஸ்ட்ரேட் வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குற்றப்பத்திரிகை original copy ஒன்றை மட்டும் காவல் துறை தயாரிக்கிறது. ஆனால் 15 நகல்களை type செய்து வழங்க வேண்டிய சுமை நீதிமன்றத்திற்கு ஒரு பணிச் சுமையாக இருக்கிறது. பெரும்பாலும், நீதிமன்றங்களில் போதுமான அளவிற்கு Typist-கள் இல்லாத ஒரு சூழ்நிலையிலே இந்தக் காலதாமதம் பல மாதங்கள் வரை வழக்குகள் தேங்குவதும்..

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதுமான அளவிற்கு ஊழியர்கள் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது



தவறான கருத்து. கடந்த காலத்திலே எவ்வளவு வெற்றிடங்கள் என்று கேட்டு அரசுக்குத் தெரிவிக்கப்படாத ஒரு சூழ்நிலையில், வெற்றிடங்கள் தற்போது தெரிவிக்கப்பட்டு, ஏ.எம். சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையிலே சில துறைகளில் மிகுதியாகக் காணப்படுகின்ற ஊழியர்கள் நீதித் துறைக்கு Redeployment செய்யப்படுவார்கள் என்கின்ற தகவல் உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல நீதிமன்றங்களிலே, மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் எல்லாம்கூட, இப்படிப்பட்ட சங்கடங்களினால் ஊழியர்கள் இரவு 8 மணி, 9 மணி வரை பணியாற்றுகிறார்கள். charge ஆகையினால் இந்த காலதாமதத்தைத் தடுக்கின்ற முகத்தான். sheet கொடுப்பதற்காகவாவது, இந்தக் குற்றப்பத்திரிகைகளை—அதன் நகல்கள், தீர்ப்பின் நகல்கள் கொடுப்பதற்காகவாவது ஒரு Xerox Machine வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-25

அதுபோல, முன்சீப் கோர்ட்டுக்கும், சப்-கோர்ட்டுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும். தற்போதுள்ள நிதிச் சுமையை எங்களால் உணர முடிகிறது. ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் 'Xerox Machine' வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அஞ்சல் துறையிலே பணியாற்றுகிற E.D. Packer-களைப் போல, அட்டக் கூலிகளாக ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்குப் பணியாற்றுவதற்கு ஏராளமான பட்டதாரிகள் தயாராக இருக்கிறார்கள். அந்தந்த ஊரிலே கொடுத்தால், ஆயிரம் ரூபாய்க்கு வருவதற்குக்கூட அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், எல்லா நீதிமன்றங்களுக்கும் தலா ஒரு Xerox Machine வழங்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. இதற்கு நிதிச் சுமை அனுமதிக்காதபட்சத்தில், அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலே இருந்துகூட ஒதுக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுக் குறிப்பு தந்தால், மயிலாடுதுறை நீதிமன்றங்களுக்கு எனது நிதியிலே இருந்துகூட கொடுக்கலாம். இதை எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம், எல்லா உறுப்பினர்களுக்கும் ஏதாவதொரு நீதிமன்றத்தோடு தொடர்பு இருக்கிறது.

மேலும், கட்டட வசதி என்று சொல்கிறபோது, சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் புதிதாக அஞ்சலகம், நூலக வசதி, கணினி வசதி போன்ற பல வசதிகளை நமது அரசு இந்த நிதியாண்டிலேயே செய்யவிருப்பதாக இந்தக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. ஆனால் நம் தலைநகரிலே பல மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலே இப்படிப்பட்ட வசதிகள் அவசியம் தேவை. பல கட்டடங்கள் பழுதுபட்ட நிலையிலே இருக்கின்றன. Egmore மாஜிஸ்ட்ரேட் கோர்ட், சைதாப்பேட்டை கோர்ட், George Town கோர்ட்டுகளிலே எல்லாம்கூட கட்டட வசதி சரியாக இல்லை; நேற்றுகூட, நான் Egmore கோர்ட்டிலே ஒரு வழக்கறிஞரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அவர் சொன்னார், 'எதிரிலே இருக்கிற வெள்ளைக்காரன் காலத்திலே பயன்படுத்தப்பட்ட ஒரு குதிரை இலாயத்திலே, இப்போது Economic Offence பொருளாதாரக் குற்றப் பிரிவு வழக்கு நடந்துகொண்டிருக்கிறது' என்று. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, அந்தமாதிரி கட்டடங்களுக்கு புதிய கட்டட வசதியை நமது அரசு விரைவாக செய்துதர வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Constitution of Courts-கோர்ட்டுகளை அமைப்பது, Construction of New Courts, Court buildings-புதிய நீதிமன்றத்திற்கான கட்டடங்களை அமைப்பது, Maintenance of Courts-கட்டப்பட்ட அந்த நீதிமன்றங்களைப் பராமரிப்பது பொறுத்து ஒட்டுமொத்தமாக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், மாவட்டத் தலைநகரங்களிலுள்ள நீதிமன்றக் கட்டடங்களும், அரசுக் கட்டடங்கள்தான். எனவே அவற்றைப் பராமரிக்க வேண்டுமென்ற வகையில், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலுள்ள அத்தனை அரசுத் துறைக் கட்டடங்களுக்கும், ஹட்கோ மூலமாக 110 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஹட்கோ நிதியுதவி செய்கின்ற சூழ்நிலையில், அரசுக் கட்டடமாக இருக்கின்ற நம்முடைய மாவட்டத் தலைநகரங்களிலே இருக்கின்ற கட்டடங்களும் நிச்சயமாக repair செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மதுரையிலே, உயர் நீதிமன்றக் கிளை அமைத்திட அரசு எடுத்திடும்



நடவடிக்கைகள் அத்தனையும் வரவேற்கத் தகுந்தது. எனது மயிலாடுதுறை தொகுதியில் அடங்கிய நாகை மாவட்ட நீதித் துறை, சென்னை உயர் நீதிமன்றத்தோடு இருக்க வேண்டுமென எல்லா வழக்கறிஞர்களும் சட்டத் துறையினரும் விரும்புகிறார்கள். காரணம், கிழக்குக் கடற்கரை சாலை, சென்னைக்கும், நாகைக்கும் உள்ள பயண நேரத்தை வெகுவாக குறைக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட வசதிகளை, நாகை மாவட்ட வழக்கறிஞர்களும், பணியாற்றுகிற ஊழியர்களும். மக்களும் விரும்புகிறார்கள். அதற்கேற்ப, தாங்கள் வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பாமர மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய தொழிலாளர் நல நீதிமன்றங்கள், Circuit முறையிலே, தாலுகா அளவில் தனது அமர்வுகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, நுகர்வோர் நீதிமன்றங்களும், Circuit முறையிலே அந்தந்த மாவட்டத்திலே, மாவட்டத் தலைநகரங்களிலேயும் இருக்கின்ற இந்த அமர்வுகள், ஒரு தாலுகா மட்டத்திலே வந்தால்தான், சாதாரண பாமர மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும்; நீதித் துறை வழியாக ஒரு விழிப்புணர்ச்சியை அவர்களுக்கு உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நாகப்பட்டினத்திலே உள்ள Consumer நீதிமன்றம் வாரத்தில் இரு முறை, மயிலாடுதுறையில் செயல்பட வேண்டும். அதுபோல, தொழிலாளர் நல நீதிமன்றமும், வாரத்தில் இரு முறை மயிலாடுதுறையில் செயல்பட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற, எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற திரு. அரசன் அவர்களும், அறந்தாங்கியிலே ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல, தேன்கனிக்கோட்டையிலே சட்டமன்ற உறுப்பினர் திரு. முரளிதரன் அவர்கள், அங்கேயுள்ள சப்-கோர்ட் பழுதடைந்து, இடிந்திருக்கிற காரணத்தால், அங்கே ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையால் நமது அரசு, விரைவில் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

எனது தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்; கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு Bed dam கட்டுவதாக திட்டம் இருந்தது. அதை நீண்டகாலமாக ஒத்திப் போடுகின்ற சூழ்நிலை

இருந்துகொண்டிருக்கின்றது. நிலத்தடி நீர்மட்டம் குறைகின்ற காரணத்தாலும், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மயிலாடுதுறை நகருக்கு மட்டுமல்லாமல், வேதாரண்யம் வரை செல்லுகின்ற காரணத்தாலும், அங்கே Bed dam கட்டினால்தான் நீர்ப்பிடிப்பு நிரந்தரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆகையால், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மயிலாடுதுறை தொகுதியில் சி.புலியூர், ஓமாம் புலியூர் அருகே ஒரு Bed dam கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோல், வேகமாக நீதி வழங்க வேண்டுமென்று, speedy justice கிடைக்க வேண்டுமென்று விரைவான நடவடிக்கை எடுக்கின்ற தமிழக அரசைப் பாராட்டி, இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

### திருக்கோயில்களில் அன்னதானத் திட்ட விரிவாக்கம் மற்றும் ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவையில் 9-3-2002 அன்று, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் "அன்னதானத் திட்டம்" என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோயில்களில்



23-3-2002 அன்று, இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. சென்னை மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 23-3-2002 அன்று பகல் 12-15 மணி அளவில், பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் "அன்னதானத் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை நான் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டத்தின்படி நாள்தோறும் இந்தத் திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே இத்திட்டத்தினை தமிழ்நாட்டிலுள்ள மற்ற திருக்கோயில்களிலும் செயல்படுத்த வேண்டும் என பல கோரிக்கைகள் வந்தன.

எனவே இரண்டாவது கட்டமாக, மேலும் 63 திருக்கோயில்களில், 15-8-2002 அன்று முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடர்ந்து இந்த அன்னதானத் திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது. மேலும் பல திருக்கோயில்களில் இந்தத் திட்டத்ினை ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள்கள் வந்தன.

எனவே மூன்றாவது கட்டமாக, பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாளான 15-9-2002 அன்று முதல், தமிழகத்தில் மேலும் 18 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது. இத்துடன் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோயில்களின் மொத்த எண்ணிக்கை 144 ஆக உயர்ந்துள்ளது.

23-1-2003 அன்று சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது, தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் அன்னதானத் திட்டத்தை மேலும் பல திருக்கோயில்களுக்கும் படிப்படியாக நீட்டிக்க இந்த அரசு திட்டமிட்டு வருகிறது என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், இத்திட்டம் நான்காவது கட்டமாக, பட்டியலில் உள்ளபடி 18 திருக்கோயில்களில் தமிழ்ப் புத்தாண்டு தினமான 14-4-2003 ஆம் தேதி அன்று (மேசையைத் தட்டும் ஒலி) தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற செய்தியை, இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத்துடன் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோயில்களின் மொத்த எண்ணிக்கை 162 ஆக உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

14-1-2003-லிருந்து அன்னதானத் திட்டம் நான்காவது கட்டமாக செயல்படுத்தப்படவுள்ள திருக்கோயில்களின் விவரம் வருமாறு:

சென்னை மாவட்டத்தில் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில், நுங்கம்பாக்கம்; அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில், கே.கே. நகர், சென்னை-78.

திருச்சி மாவட்டத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமாரவயலூர்; அருள்மிகு உத்தமர் திருக்கோயில், பிச்சாண்டார்கோவில்.

பெரம்பலூர் மாவட்டத்தில் அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், பெரம்பலூர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் அருள்மிகு நீலகண்ட பிள்ளையார் திருக்கோயில், ஏந்தல், பேராவூரணி வட்டம்; அருள்மிகு சூரியநாராயணப் பெருமாள் திருக்கோயில், சூரியனார்கோயில், திருவிடைமருதூர் வட்டம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம்; அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர், தரங்கம்பாடி வட்டம்.

முற்பகல் 11-35

அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில்.

தேனி மாவட்டத்தில் அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோயில், தேவதானப்பட்டி.

சிவகங்கை மாவட்டத்தில் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், மீனாட்சிபுரம், காரைக்குடி நகர்.

விருதுநகர் மாவட்டத்தில் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், மடவார்வளாகம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோயில் (கன்னியாகுமரி தேவஸ்தானம்); அருள்மிகு இசக்கியம்மன் திருக்கோயில், முப்பந்தல்.



ஈரோடு மாவட்டத்தில் அருள்மிகு செல்லீஸ்வரர் வகையறா திருக்கோயில், அந்தியூர்.

கோவை மாவட்டத்தில் அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோயில், சூலக்கல்.

சேலம் மாவட்டத்தில் அருள்மிகு காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோயில், இணைப்பு அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில்.

அன்னதானத் திட்டத்தை அமல்படுத்தத் தேவைப்படும் நிதி நன்கொடையாளர்களிடம் இருந்து திரட்டப்படுகிறது. அன்னதானத் திட்டத்திற்காக நிதி அளிக்க விரும்புவோர் வசதிக்காக 111 திருக்கோயில்களில் தனியாக உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. 14-1-2003 ஆம் தேதி அன்று அன்னதானத் திட்டம் தொடங்கப்பட உள்ள மேலும் 13 திருக்கோயில்களில் இத்திட்டத்திற்காக தனியாக உண்டியல்கள் வைக்கப்படும். உண்டியல் காணிக்கை தவிர இறையன்பர்கள், செல்வந்தர்கள், பெரியோர்கள் மற்றும் தொண்டுள்ளம் கொண்ட பொதுமக்கள், இத்திட்டத்திற்காக தாராளமாக காசோலை, வரைவோலை மற்றும் ரொக்கமாக நன்கொடை வழங்குகின்றனர். மேலும், அன்னதானத் திட்டத்திற்கு அரிசி, உளுந்து மற்றும் காய்கறிகள் போன்ற பொருட்களாகவும் நன்கொடைகள் பெறப்படுகின்றன.

தவிர, இந்த அன்னதானத் திட்டத்திற்கு உதவிட விரும்புவோர், தாங்கள் விரும்பும் திருக்கோயிலுக்கு தலா 15,000 ரூபாய் செலுத்தி, கட்டளைகளை Endowment-களை ஏற்படுத்தலாம். அந்தக் கட்டளைகளிலிருந்து பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கட்டளைதாரர் விரும்பும் நாளன்று குறைந்தபட்சம் 100 நபர்களுக்கு அன்னதானம் செய்ய அந்தந்தத் திருக்கோயில் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அன்னதான பொது வைப்பு நிதிக்கு நிதி வசதியுள்ள 8 திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் நிதி மாற்றம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு அனுமதி வழங்கி, அரசாணை (நிலை) எண் 253, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 12-11-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி அன்னதானத் திட்ட பொது வைப்பு நிதி, நிரந்தர வைப்பு நிதியில் முதலீடு செய்யப்பட்டு, அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஏப்ரல் 11

அன்னதானத் திட்டத்தில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும், 9-3-2002 அன்று மேதகு தமிழக ஆளுநர் உரையில் இத்தகைய கோயில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக முதற்கட்டமாக தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகின்ற 63 திருக்கோயில்களில் 24-3-2002 ஞாயிற்றுக்கிழமை அன்று வகுப்புகளும் தொடங்கி வைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தேன். அவ்வாறு இந்த வகுப்புகள் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலோ நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆன்மிகப் பயிற்சி வகுப்புகளை உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் சமய சொற்பொழிவாளர்கள் நடத்துகிறார்கள். இரண்டாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் மேலும் 63 திருக்கோயில்களிலும் மற்றும் மூன்றாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 18 திருக்கோயில்களிலும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு மணி நேர வகுப்புகள் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலும் அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலும் நடத்தப்படுகின்றன. நான்காவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 18 திருக்கோயில்களிலும் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிப் பாடங்கள் ஞாயிறுதோறும் குழந்தைகளுக்கு நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்**—தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 30-தகவல் தொழில்நுட்பவியல் துறை**—தொடர்ச்சி

**(இ) கோரிக்கை எண் 32-சட்டத் துறை**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.**



2003 ஏப்ரல் 11]

*முற்பகல் 11-40*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான, நாங்கள் நேசிக்கின்ற, எங்கள் உள்ளங்களில் வைத்துப் பூசிக்கின்ற அன்னையே, நீதி தேவதையின் தலைமகளாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

அரசமைப்புச் சட்டத்தின் தூண்களாக விளங்குகின்ற நீதி, நிர்வாகம் மற்றும் சட்டத் துறை மூன்றும் ஜனநாயகத்தின் முக்கிய தூண்கள் என்றாலும், எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள்தான் அதிகாரம் படைத்த பிரிவினராக விளங்கி வருகிறார்கள். அத்தகைய மக்கள் மத்தியிலே நிரந்தர புகழுடன் திகழும் நீதி தேவதையாக, அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்துச் செல்லும் தலைமை, தைரியம், வலிமை, உறுதி கொண்ட ஒரே தலைவி எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டத்தைப்பற்றி பல தலைவர்கள் பல்வேறு கருத்துகளைக் கூறி இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் மாநிலங்களவையில் சட்டத்தினைப்பற்றி ஓர் அற்புதமான விளக்கத்தைக் கூறியுள்ளார்கள்.

"We should bear in mind. Be conscious that any progressive law should suit and accommodate the changing and growing needs of the common man and contemporary society or otherwise the law will be outmoded. After all law is only a means to achieve justice and not an end in itself" என்று அன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

நான் இந்தச் சட்டத்தினைப் பொறுத்தவரையில், முதல் முதலாக POTA சட்டத்திலே ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். திரு. கருணாநிதி, முரசொலி மாறனைக் காப்பாற்றுவதற்காகவே பாராளுமன்றத்தில் POTA சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் தடை செய்ய மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற POTA சட்டத்தை தமிழ்நாட்டிலே பயன்படுத்தினால் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார், கருணாநிதி. எதிலுமே இரட்டை வேடம் போடும் கருணாநிதி இதிலும் தன்னுடைய சுயரூபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அன்றைக்கு கள்ளத் தோணியில் இலங்கை சென்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்த வை.கோ.வை எதற்காகக் கைது செய்தார்கள்? வை.கோ. விடுதலைப் புலிகளைப்பற்றி என்ன பேசினார்?

முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியைக் கொலை செய்த தேச விரோத சக்திகள் என்று தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை அன்றும் ஆதரித்தேன், இன்றும் ஆதரிக்கின்றேன், என்றும் ஆதரிப்பேன் என்று பகிரங்கமாக மேடையில் பேசியதால்தான் வை.கோ.வைக் கைது செய்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையில் விடுதலைப் புலிகளை ஆதரித்தால் 7 ஆண்டு சிறை என்ன, 70 ஆண்டு சிறை செல்லவும் தயார் என்று பேசியவர்கள் எல்லாம் இன்று அடங்கிப் போயுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, சென்னையிலே, பட்டப்பகலிலே, பத்மநாபா உள்பட 16 பேர்களைப் படுகொலை செய்த விடுதலைப் புலிகளைத் தப்பவிட்டு, வேடிக்கை பார்த்தவர்தான் கருணாநிதி. ஆனால் என் உயிரே போனாலும் தமிழகத்தில் தீவிரவாதமும் பயங்கரவாதமும், தலைதூக்க இம்மியளவுகூட அனுமதிக்க மாட்டேன் என்று சூளுரைத்து தன் உயிரைத்துச்சமென மதித்து இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளை தமிழகத்தில் இருந்து விரட்டியடித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

இப்படி பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் அடியோடு ஒழித்து, அவர்களின் கொலைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு 'Z' பிரிவு என்ற கறுப்புப் பூனை பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. ஆனால் பயங்கரவாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் துணை போனது மட்டுமல்லாமல் நாட்டுப்பற்று இல்லாத தி.மு.க. தலைவருக்கு எதற்கு 'Z' பிரிவு பாதுகாப்பு என்று நாட்டு மக்கள் இன்றைக்கு கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்பற்று என்றால் என்ன என்று கேட்பார் திரு கருணாநிதி. முந்தைய பிரதமர் திரு வி.பி. சிங் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலிருந்து இந்திய அமைதிப் படை சென்னை துறைமுகத்திற்குத் திரும்பியபோது நான் வரவேற்கச் செல்லமாட்டேன் என்று பொறுப்பற்ற முறையில் சொன்னவர்தான்



கருணாநிதி. ஆனால் எங்கள் அம்மா அவர்கள் நாட்டுப் பற்றுடையவர் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அதிலே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருப்பது (B.S.F.) Border Security Force என்று சொல்லப்படும் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை. இந்தப் படையில் இடம் பெற்றுள்ள இராணுவ வீரர்களுக்கு விசேஷமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அந்தப் பயிற்சி அளிக்கின்ற மையம் மத்தியப் பிரதேசத்தில் மட்டும்தான் செயல்படுகின்றது. இந்திய நாடெங்கும் பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்துவரும் நிலையில் கூடுதலாக ஒரு எல்லைப் பாதுகாப்புப் படை பயிற்சி மையம் தொடங்க வேண்டும் என்று மத்திய அரசு முடிவெடுத்தது. அதற்காக தனி இடம் கோரி பல மாநில அரசுகளுக்குக் கடிதம் அனுப்பியது. எந்த மாநிலமும் பதில் அனுப்பாத சூழ்நிலையில் அந்தக் கடிதம் வந்த உடனேயே தமிழகத்தில் கோவைக்கு அருகே அவினாசி தாலுகா தெக்கலூரில் 71.40 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராகத் திகழ்ந்து கொண்டு இருக்கிறார் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப பழமையான சட்டங்களைத் திருத்தவும், ஒத்துவராத சட்டங்களை நீக்கவும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் மாநில சட்ட ஆணையத்தை நிறுவியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 11-45

அதேபோல சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்த தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்தவரும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிற மாணவ சமுதாயத்தை சட்டத் துறையின் பக்கம் இழுப்பதற்காக சட்டக் கல்வியிலும் போற்றுதலுக்குரிய பல மாற்றங்களை அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள்.

அதேபோல, பி.ஏ.பி.எல். படிப்பிற்கு ஹானர்ஸ் பிரிவை முதன் முதலாக தமிழகத்தில் தொடங்கியவர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்தைப் பொறுத்தவரையில் காலத்திற்கேற்ற மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் புதிய சட்டங்களை இயற்றுவதிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் அவரேதான். உதாரணத்திற்கு ஒன்றுதான் அவர் கொண்டுவந்த கட்டாய மதமாற்ற தடைச் சட்டம். அந்தச் சட்டத்திற்கு எதிராக சதி வலை பின்னிய எதிர்க்கட்சிகள் மக்களைக் குழப்பி ஆதாயம் தேட நினைத்தனர். அதற்கு மக்கள் சரியான சவுக்கடி கொடுத்த இடம்தான் சாத்தான்குளம். அந்த இடைத் தேர்தலிலே எதிர்க்கட்சிகளுக்கு ஆயுதமாக இருந்த இந்த மதமாற்ற தடைச் சட்டம் அவர்களையே வீழ்த்தியது.

நீண்ட நெடுங்காலமாக பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று இழுபறியில் இருந்துவந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் தீர்வு கண்ட ஒரே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நீதி நிருவாகம். பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அரசியலிலிருந்து ஒழிக்க வேண்டும் என்ற ஓர் அம்சக் கொள்கையிலே கருணாநிதி செயல்பட்டார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது பொய் வழக்குப் போட்டார். அந்த வழக்கை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைத்தார். புரட்சித் தலைவி அம்மா அவர்களை சிறையிலே அடைத்தார். சித்ரவதை செய்தார்.

இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்பற்றி திரு. கருணாநிதி, திரு. மு.க. ஸ்டாலின், அன்றைய சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா ஆகியோர் தாங்களே நீதிபதிகளாக நினைத்துக்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இரண்டு ஆண்டு ஜெயில் தண்டனை கிடைக்கும்; இனி அவர் தேர்தலிலே நிற்க முடியாது என்று தாங்களே நீதிபதிகளாக மாறி தீர்ப்பளித்தார்கள். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்தனை பொய் வழக்குகளையும் தவிடு பொடிகளாக்கி, தான் சொக்கத் தங்கம் என நிரூபித்து, இழந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியை மீட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவியாக இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.



சட்டத்தையும், நீதியையும் மதிப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தனக்கு எதிராக தீர்ப்பு வந்தபோதுகூட அவர் நீதிபதிகளை விமர்சித்ததில்லை. நீதிமன்றங்களைக் கண்டித்ததில்லை. தீர்ப்பைக் கேட்டு முடங்கிவிடவில்லை. மாறாக இன்முகம் கொண்டு அதை வரவேற்றார். இறுதியில் தர்மம் வெல்லும் என்று கூறினார். அதன்படி தனக்கு எதிராக வந்த வழக்குகளில் வெற்றி கண்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை விடுதலை செய்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது அந்த நீதிபதியை விமர்சித்தவர் கருணாநிதி. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நீதிபதி திரு. தங்கராசைப்பற்றி மிகக் கேவலமான முறையில் 'இது வழங்கப்பட்ட தீர்ப்பா அல்லது வாங்கப்பட்ட தீர்ப்பா' என்று போஸ்டர் அடித்து ஒட்டியவர்தான் இந்த கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகள்மீது அடக்குமுறையை ஏவிவிட்டு, அவர்கள்மீது தாக்குதல் நடத்தியவர் கருணாநிதி. பாதிக்கப்பட்டவர்களுக்கு 31 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்க மாநில மனித உரிமை ஆணையம் போட்ட உத்தரவைக் காற்றிலே பறக்க விட்டவர் கருணாநிதி. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அந்த ஆணையத்தின் உத்தரவை மதித்து, தேயிலை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுத்தவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் நாள் மாநிலங்களவையில் மதுரை நகரில் ஓர் உயர் நீதிமன்றக் கிளை அமைக்க வேண்டுமென்று அன்றைக்கே கோரிக்கை வைத்தார்கள். . . .

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிடும்போது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை எந்த அளவுக்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொய் வழக்குகள் புனையப்பட்டு, எந்த அளவுக்கு, எந்த ஒரு தலைவருக்கும் இல்லாத வகையில் அவமானப்படுத்தினார்கள்; எந்த அளவுக்கு அரசாங்க நிர்வாக

இயந்திரங்கள் எல்லாம் முடுக்கிவிடப்பட்டன என்கின்ற அந்தத் தன்மையைச் சொன்னார்கள். ஏறக்குறைய 5 கோடி ரூபாய்க்கு மேலே மக்களுடைய வரிப் பணம், மக்கள் உழைத்துச் சம்பாதித்துக் கொடுக்கின்ற ஒவ்வொரு ரூபாய் வரிப் பணம், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அழிக்க நினைத்தார்கள், பழி வாங்குவதற்குத் துடித்தார்கள். ஆனால் 'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்' என்கின்ற அடிப்படையிலே அரசியல் எதிரிகளைப் பழி வாங்குவதற்கு மக்களுடைய வரிப் பணத்திலிருந்து 55 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து இருக்கிறார்கள். அதிலே சிலவற்றை நான் இந்த இடத்திலே குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளிநாடுகளுக்குச் சென்று விசாரணை என்ற பெயரிலே திரு. கருணாநிதி அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியதில் மட்டும் கிட்டத்தட்ட ரூ.21,38,991. அதேபோன்று மக்களுடைய வரிப் பணம் திரு. கருணாநிதிக்கு வேண்டிய வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லும்போது, ரூ.3,37,48,563 மக்களுடைய வரிப் பணம் வீணடிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பு கூறியுள்ளது. இராணி மேரி கல்லூரியில் அரசியல்வாதிகள் உள்ளே நுழையக் கூடாது என்று கூறியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களும் சொன்னார்கள். அதனால் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் நேற்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை விமர்சனம் செய்து இன்றைக்குக்கூட சட்டமன்றத்தில் பேசி வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள். இவர்களெல்லாம் நீதியை மதிப்பதேயில்லை என்பதற்கு இது ஒன்றே சாட்சி. இவர்களெல்லாம் அம்மா அவர்கள் முன்னால் நின்று, நேருக்கு நேராகப் பேசத் தெம்பின்றி, திராணியின்றி, கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இவர்களில் ஒரு கட்சியினர் உள்ளே வருவதில்லை; ஒரு கட்சியினர் உள்ளே வந்தாலும், வெளியே சென்று விடுகிறார்கள். அம்மா அவர்கள் சொன்னமாதிரி இன்றைக்கு நாட்டு மக்களெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்தபடியாக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபொழுது, 1984 ஏப்ரல் 25 ஆம் நாள் மாநிலங்களவையில், மதுரை மாநகரத்தில் உயர் நீதிமன்றக் கிளை அமைக்க வேண்டுமென்று அன்றைக்கே கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலே இப்பொழுது மதுரை உயர் நீதிமன்றக் கிளை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்திருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல தமிழகத்தின் தென்கோடியில் உள்ள ஏழை தமிழ் மக்கள் நீதி கேட்டு டெல்லி செல்ல வேண்டிய அவல நிலையைப் போக்க, சென்னையிலே உச்ச நீதிமன்றக் கிளை அமைக்க மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தபோது, டெல்லி செங்கோட்டையில் குரல் கொடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2000-2001-ல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீதித் துறைக்காக ரூ.146.36 கோடி நிதியை மட்டும் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல் ஆண்டிலேயே ரூ.170.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தாழ்த்தி வழங்கப்படுகிற நீதி, மறுக்கப்படுகிற நீதி என்று சொல்வார்கள். ஏழை எளிய மக்களுக்கு நீதி விரைவில் கிடைக்க, விரைவு நீதிமன்றத்தை அமைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வழக்குகளை விரைவில் முடிப்பதற்கு நீதிமன்றங்களெல்லாம் கணினிமயமாக்கப்படும் என்று முடிவு எடுத்து, அதற்கான நிதியை ஒதுக்கித் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அடுத்தபடியாக, பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரித்து நீதி வழங்க வேண்டுமென்ற வகையிலே பெண்களுக்காக இரண்டு நீதிமன்றங்களை கோவையிலும், சென்னையிலும் அமைத்து செயல்படுத்தியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாவட்ட பெண் நீதிபதிகளைப் பொறுத்தவரையில், மாவட்ட நீதிபதி நியமனத்தில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு இல்லாத சூழ்நிலையில், பெண்களும் மாவட்ட நீதிபதிகளாக வர வேண்டுமென்ற உயர்ந்த உள்ளத்தோடு காலிப் பணியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களை நியமிப்பதற்கு வழிவகை செய்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்படுகிற பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் சென்னை, கோவை, மதுரை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் குடும்ப நீதிமன்றங்கள் அமைத்து இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாகும். இப்படி சட்டம் மற்றும் நீதித் துறை நிருவாகத்தில் பல்வேறு சிறப்புமிகு திட்டங்களைக் கொண்டுவந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிற அம்மா அவர்களை இன்றைக்கு நாடே பாராட்டிக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, தகவல் தொழில்நுட்பம். விஞ்ஞானத் தொழில் நுட்பம் எப்போது குக்கிராமங்களில், குடிசையில் வாழும் ஏழையின் கதவைத் தட்டுகிறதோ, அப்போதுதான் ஒரு நாட்டின் உண்மையான முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியும். அந்தப் பாதையை நோக்கித்தான் அம்மா அவர்களின் பயணம், தகவல் தொழில்நுட்பத் துறையில் தொடர்கிறது. வளர்ந்துவரும் விஞ்ஞான யுகத்திற்கேற்ப, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் தன்னுடைய முத்திரையை இன்றைக்குப் பதித்திருக்கிறார்கள்.

தகவல் தொழில்நுட்பத்தில் 2002-2003-ல் மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத், ஆந்திரா ஆகிய மாநிலங்களைவிட, முதல் மாநிலமாக தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தை உயர்த்திக் காட்டிய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-55

தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு வரிகளிலிருந்து விலக்கு, ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 100 சதவீத விற்பனை வரி விலக்கு, தடையில்லா மின்சாரம், இவற்றையெல்லாம் வழங்கி தகவல் தொழில்நுட்பத்தை வளர்ச்சியடையச் செய்தவர் டாக்டர் புரட்சித்



தலைவி அம்மா அவர்கள். அதேபோல உயர் தொழில்நுட்பப் பூங்கா Cornell பல்கலைக் கழகத்துடன் இணைந்து ரூபாய் 65 கோடி செலவில் நிறுவப் பாடுபட்டவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டவர்களைத் தகவல் தொழில்நுட்பத் துறை முதலீட்டிற்கு தமிழகத்தை நோக்கி ஈர்க்கக்கூடிய அளவிற்கு அடையாறிலுள்ள மத்திய கைலாஷ் என்ற இடத்திலிருந்து மகாபலிபுரம் வரையில் 70 கோடி ரூபாய் செலவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்காக நவீன உலகத் தரம் வாய்ந்த பெருவழிச் சாலையை உருவாக்க நடவடிக்கை எடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் ரூபாய் 400 கோடி முதலீட்டில் சிங்கப்பூர் அரசாங்கத்தின் கூட்டோடு சேர்ந்து மற்றொரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழக அரசும் அண்ணா பல்கலைக்கழகமும் உலகிலேயே பெரும் தொழில்நுட்ப நிறுவனமான Sun Microsystems என்ற அமைப்புடன் கூட்டு சேர்ந்து இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழகத்தை On-line மாநிலமாக மாற்ற முயற்சி செய்து வருபவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தகவல் தொழில்நுட்பத்தையும் internet மூலம் உலகச் செய்தியை கிராமத்திலுள்ள படிக்காத மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் தாய்மொழியாம் தமிழில் internet வசதியைச் செய்து காட்டிய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை வசதிகள் நகரங்களுக்குள்ளும், ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று சேரவும், அதன்மூலம் primary sector என்று சொல்லப்படும் விவசாயத் துறை மூலமாக கிராமப்புற பொருளாதாரம் வளர்ச்சி அடையவும், சிறு குறு தொழில்களின் வளர்ச்சி மூலம் வேலைவாய்ப்புகள் பெருகவும் வழிவகுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மேலும் e-Governance நிர்வாக முறை திட்டத்தை இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழகத்திற்குக் கொண்டுவந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. கைதிகளின் விசாரணைக்கும் Video Conference முறையைக் கொண்டுவந்து சாதனை படைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்

மேற்கொண்ட தீவிர நடவடிக்கையினால் மென்பொருள் உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் ரூபாய் இரண்டாயிரம் கோடி அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதி அதிகரித்திருப்பது அம்மா அவர்களுடைய சாதனைக்கு ஒரு சான்றாகும். மாண்புமிகு அம்மா. . .

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் இரண்டாயிரம் கோடி அல்ல. ரூபாய் 5,203 கோடி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மன்னிக்கவும். அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அம்மா அவர்களுடைய திறனை நான் குறைவாக மதிப்பிட்டதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில், தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில் அதி வேகமாக முன்னேறி வருகிறது. அமெரிக்க நிறுவனத்தைச் சார்ந்த பேராசிரியர் Nicholas Negro Ponte என்பவர் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய நிறுவனம் தமிழ்நாட்டிற்கு தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்புத் தருவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணமான புரட்சித் தலைவி அம்மா அவர்களை, பெரிய பெரிய அமெரிக்க நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு அமெரிக்கா வர அவர்களை அழைத்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறையில் இவ்வளவு சாதனைகளைப் படைப்பது என்பது ஒரு அறிவார்ந்த முதலமைச்சரால்தான் முடியும். அந்த அறிவார்ந்த முதலமைச்சர்தான் எங்கள் அம்மா டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் இமயம் என டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு உயர்ந்து நிற்கின்றார். அந்த இமயத்தை எறும்புக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து தகர்க்க நினைக்கின்றன. அந்தக் கூட்டம் அழிவது உறுதி. எங்கள் அம்மாவைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், மின்னலை விழுங்கி மின்சாரத்தைக் கொப்பளித்தவர் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள் ஒன்றிரண்டை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழகத்தில் 19 மாவட்டங்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்று பல கோடி ரூபாய் அளித்து பல இலட்சம் பயனாளிகளுக்கு நல்ல உதவிகளைச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். கூடியவிரைவிலே எங்களுடைய நாமக்கல் மாவட்டத்திற்கு வர இருக்கிறார்கள். பல கோடி ரூபாயைத் தாய்வீட்டு சீதனமாகக் கொண்டுவர இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களே, எங்களுடைய தொகுதியிலே பல ஆண்டுகளாக நிறைவேற்றாத திட்டங்களில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, பட்டினம் போன்ற பகுதிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராசிபுரம் பகுதி நெரிசல் மிகுந்த பகுதி. ஆகவே புதிய புறவழிச் சாலை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்போடு வேண்டுகின்றேன். ராசிபுரம் நகரத்திலே ஏரிக் கரையிலுள்ள 82 ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர் நிலப் பரப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

ராசிபுரம் தொகுதியில் ஆண்டனூர் Gate-ல் புதிய புறக்காவல் நிலையம் ஒன்றை அமைக்க அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே புறவழிச்சாலை இருக்கிறது. இல்லையா சுந்தரம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை. புறவழிச்சாலை இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றும் சரி, இன்றும் சரி, என்றென்றும் அம்மாவின் கோட்டையாக விளங்கும் ராசிபுரம் ராசியானபுரமாகத் திகழ முகராசி கொண்ட எங்கள் மகராசி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அம்மா அவர்களின் பாதம் பணிந்து இவ்வளவு நேரம் பேச அனுமதித்த அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2003 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை, நீதி நிருவாகம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேரவையில் நான் தேர்ந்தெடுக்கப்படவும் சேரன்மகாதேவி தொகுதி மக்களின் நலனைக் காக்க, அவர்களுக்குப் பணிபுரிய வாய்ப்பளித்த தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று இந்தியாவில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Iron Lady of India என்று அழைக்கப்படும் இந்தியாவின் இரும்புப் பெண்மணியாக விளங்குகின்றவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று காலை இங்கே விவாதம் நடைபெறும்போது மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியாமலும், எதிர்கொள்ள முடியாமலும் — அவர்கள் கூறியதுபோல் உயர் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது — நீங்கள் சட்டமன்றத்தில் பேசுவதால்தான் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாமலும், எதிர்க்கட்சியினர் திறன் இல்லாமல் இன்று வெளியே சென்றிருக்கிறார்கள். இன்றையதினம் திடமான மன உறுதியோடும், சுய சிந்தனையோடும், சொல் மற்றும் செயல் திறனோடும், புரட்சியின் அடையாளமாகவும் இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மக்கள் மன்றம் என்ற சட்டப் பேரவையில் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் புலமையோடு எதிர்க்கட்சிகளுக்குப் பதிலடி கொடுத்துக்கொண்டிருக்கும் தலைவி நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள், இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மகளிருக்கான நீதிமன்றங்களை—அவர்கள் மீதான வழக்குகளை விசாரிப்பதற்காக— ஏற்படுத்திய ஒரே தலைவி நம்முடைய மாண்புமிகு



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும். பெண்களுக்கு எல்லா முன்னுரிமைகளும் கொடுத்து பெண் இனக் காவலாராக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நீதித் துறையைப் பொறுத்தவரையில், கடந்த தி.மு.க. ஆட்சியில் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்கும், குறிப்பாக புரட்சித் தலைவி அம்மாவின்மீது உண்மைக்குப் புறம்பான வழக்குகளைத் தொடுப்பதற்கும் அதைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்றையதினம் நீதிமன்றங்களை ஏழையெளிய மக்கள் அணுகி நீதி பெற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு ஏழைகளுக்குக் குரல் கொடுத்து வாதாடும் ஏழைகளின் வழக்காடும் அறிஞர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், இங்கே மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுமார் 12,066 வழக்குகள் இப்போது பைசல் செய்யப்பட்டு இருக்கின்றன. ஏழையெளிய மக்களுக்கு விரைவாகத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 49 விரைவு நீதிமன்றங்களை அமைத்த பெருமை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன். இதர மாநிலங்களில் உள்ள நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரத்தைப் பொறுத்தவரையில், உத்தரப்பிரதேசம் 10,73,234 சிவில் வழக்குகளும், 24,31,929 கிரிமினல் வழக்குகளும், அதே போன்று மகாராஷ்டிரா மாநிலத்தில் 9,27,296 சிவில் வழக்குகளும், 21,85,648 கிரிமினல் வழக்குகளும், குஜராத் மாநிலத்தில் 7,19,166 சிவில் வழக்குகளும், 25,24,734 கிரிமினல் வழக்குகளும் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் சீரிய முயற்சியால் இன்றைக்கு தமிழகத்தில் 5,93,073 சிவில் வழக்குகளும், 2,67,601 கிரிமினல் வழக்குகள் மட்டுமே நிலுவையில் இருக்கின்றன என்று சொன்னால், அவர்களது திறமைதான் இதற்குக் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

இன்று விரைவு நீதிமன்றங்களில் உள்ள கைதிகளுக்கு ஒவ்வொரு மாநில அரசும் ஒரு நாளைக்கு 55 ரூபாய் செலவிடுகின்றது. அந்த வகையில் ஒவ்வொரு மாநில அரசும் இந்தியா முழுவதும் 400 கோடி ரூபாயைச் செலவழிக்கின்றது. இந்தியாவில் பிப்ரவரி 2003 ஆம் ஆண்டு வரை 1,308 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் 991 நீதிமன்றங்கள் இதுவரை தீர்ப்பை வழங்கியிருக்கின்றன.

அதேபோன்று, உயர் நீதிமன்றத்தை கணினிமயமாக்கி இன்று இந்தியாவில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்குவேன் என்று சபதமிட்ட நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு உயர் நீதிமன்றத்தில் கணினிமயமாக்கி வழக்குகளைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்ததன்பேரில் அங்கேயும் வழக்குகள் உடனே முடிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கும் நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன். குஜராத்-அலகாபாத் நீதிமன்றத்தில் 1,49,587 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அதேபோன்று, 7,60,054 கிரிமினல் வழக்குகள். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவின் சீரிய முயற்சியால் இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் 33,258 சிவில் வழக்குகள் மற்றும் 3,14,562 கிரிமினல் வழக்குகள் மட்டுமே நிலுவையில் இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முயற்சிதான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. நம்முடைய தென் மாவட்டங்களிலுள்ள பொது மக்களின் நலனைக். கருதி, இன்றையதினம் மதுரையில் உயர் நீதிமன்றத்தை அமைத்து, இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களின் கோரிக்கைகளையும், அவர்களின் நலனைக் கருதியும் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.44.21 கோடி ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தென் மாவட்ட மக்கள் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் தெரிவித்ததுபோல, உச்ச நீதிமன்றக் கிளையை இங்கே சென்னையில்



அமைத்துத் தருவதற்காக குரல் கொடுத்த ஒரே தலைவி இந்தியாவில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி தண்ணீரை உச்ச நீதிமன்றத்தின் மூலமாகப் பெற்றுத் தந்த வீராங்கனை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அந்த உச்ச நீதிமன்றத்தையே தென் நாட்டு மக்களுடைய நலனுக்காக கொண்டுவருவதற்கும் சக்தி படைத்த தலைவி நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், அது அம்மாவினுடைய ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். கணினி குற்றங்களைத் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் Cyber Detection Cell என்ற ஒரு Cell-ஐ அமைத்தார்கள் to detect the crimes which are committed with the aid of the technology, the Computer Technology. அந்த வகையில் Cyber Detection Cell மூலமாக சுமார் 4 மாதங்களுக்கு முன்பு B.S.N.L. நிறுவனத்தில் டெலிபோன்களைச் செய்து சுமார் 3½ கோடி நஷ்டத்தை ஏற்படுத்தியவர்களை அம்மாவின் உத்தரவின்பேரில் உடனடியாக கைது செய்து கணினிமயமான குற்றங்களையும் தடுத்த பெருமையும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலே உள்ள சென்னை City Civil நீதிமன்றங்களை கணினிமயமாக்க ரூ.2.44 கோடி அளவிற்கு திட்டத்தை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே City Civil மற்றும் உயர் நீதிமன்ற வளாகத்தில் கடந்த ஆட்சியில் சரியான கழிப்பறைகளைச் செய்து கொடுக்கவில்லை. நல்ல சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் மகளிருக்காக சுகாதார நிலையங்களை அமைக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த புரட்சியால் மகளிர் சுகாதார நிலையங்களை தமிழகம்

முழுவதும் அமைத்ததுபோலவே உயர் நீதிமன்றத்தில் கழிப்பறைகளை அமைத்துக்கொடுத்தால் நம்முடைய வழக்கறிஞர் பெருமக்கள் அம்மா அவர்களுக்கு பெரும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள் என்பதை என்னுடைய பணிவான கோரிக்கையாக வைக்கிறேன்.

அதேபோன்று, இன்று வழக்குகளை உடனடியாக முடிப்பதற்கு grouping of cases என்றும், ஒரே point-ல் தீர்ப்பு கொடுத்தால் உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் அடிப்படையில் அவற்றை grouping செய்து மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் காலியிடங்களை நிரப்பும்போது அந்த வழக்குகள் உடனடியாக முடியுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில், இந்தியா முழுவதும் உள்ள நீதிபதிகளின் காலியிடங்கள் 547. நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்கள் 134 என்பதைத் தெரிவித்து, நீதிபதிகள் நியமனத்தால் வழக்குகளும் விரைவில் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் உயர் நீதிமன்ற வளாகத்திற்கு ஒரு நூலகத்தை சுமார் 1.52 கோடி ரூபாய் செலவில் கொடுத்து இருக்கிறார்கள். இதற்கு வழக்கறிஞர் சமுதாயம் பெரிதும் நன்றிக் கடனுக்கு உள்ளாவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய வழக்கறிஞர்கள் சங்கத்தினர்கூட மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்கும் புத்தகங்களை வாங்குவதற்கு 2 லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தால் அந்த வழக்கறிஞர் பெருமக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் நீதித் துறைக்காக இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக, ஏழையெளிய மக்களுக்கு தமிழகத்தில் எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரும் செய்யாத ஒரு சாதனையைச் செய்திருக்கிறார்கள். ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும், மக்களுக்காக இலவச சட்ட முகாம்களை ஆட்சியில் இல்லாதபோதுகூட நடத்திய ஒரே தலைவி நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், தான் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களின் நலனே பெரிது என்று கருதுபவர்தான் ஒரு நல்ல அரசியல் தலைவர். மக்கள் பணியாற்றுபவர் என்பதை எடுத்துக்காட்டும் வகையிலும், இந்தியாவுக்கே எடுத்துக்காட்டும் வகையில் திறனோடும், மக்களின்



நலனே தன்னுடைய நலன் என்று கருதி இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை இந்தியாவே பாராட்டிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களை Iron Lady of India என்று குறிப்பிட்டேன். இன்று இரும்புப் பெண்மணியாக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். இரும்புக் கரம் கொண்டு தீவிரவாதத்தையும், தவறு புரிபவர்களையும் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் நடந்த முறைகேடுகளின் விளைவாகத்தான் நிதி நெருக்கடி ஏற்பட்டது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அந்த வகையில் கடந்த காலத்தில் சேலம் மாவட்டத்தில், சேலம் மாநகராட்சியில் ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதில் சுமார் ரூ.3½ கோடி முறைகேடு நடைபெற்று — அந்த முறைகேட்டைச் செய்தவர், சேலம் மாநகராட்சியிலுள்ள முன்னாள் மாநகர மேயர்-அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இன்றையதினம் வரை அவர்கள்மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் மீது உண்மைக்குப் புறம்பான வழக்குகளைத் தொடுத்தவர்கள் தண்டிக்கப்பட்டு, அவர்கள் சிறைக்குச் செல்ல வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதைப்போன்றுதான் கால்நடைத் துறையிலும் ஒரு முறைகேடு நடைபெற்றது. வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்றுதான் கொப்பரைத் தேங்காயிலே ஒரு மாபெரும் முறைகேடு நடைபெற்றிருக்கிறது. ஆகவே கடந்த கால ஆட்சியில், நீதித் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது, உண்மைக்குப் புறம்பான வழக்குகளைத் தொடுத்து புரட்சித் தலைவியை தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டவர்கள்மீது வழக்குகளைத் தொடுத்து, அவர்களுக்கு தண்டனை கொடுத்து சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள பெருமக்கள், விவசாயப் பெருமக்கள் சுமார் 12,500 ஏக்கர் அளவிற்கு கௌடியன் கால்வாய் என்ற கால்வாய் மூலமாக பாசன வசதி பெற்று

பயன்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்காக அந்தக் கால்வாயில் தண்ணீர் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 1 ஆம் தேதி அன்று திறக்கப்படும். இந்த ஆண்டுகூட, என்னுடைய தாழ்மையான கோரிக்கையை மாண்புமிகு அம்மாவிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன், ஜூன் மாதம் 1ஆம் தேதி அன்று கெனடியன் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டால் சேரன்மகாதேவி தொகுதி மக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள் என்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அதேபோன்று, சுமார் 20 ஆண்டுகளாக சேரன்மகாதேவி காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. சேரன்மகாதேவி காவல் நிலையத்திற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக.

அதேபோன்று, சேரன்மகாதேவி தொகுதியில் கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே உள்ள நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உயர் நீதிமன்றம் கருத்துரு அனுப்பியிருக்கிறது என்று தெரிவித்தார்கள். நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய முயற்சியால் மைய அரசிடம் ரூ.140 கோடியை, நீதி நிருவாகக் கட்டடங்கள், நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்காக பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆகவே இந்த ஆண்டு அந்த நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தாழ்மையான கோரிக்கையை வைக்கிறேன்.

அதேபோன்று வழக்கறிஞர்களின் கோரிக்கையாக, நம்முடைய உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள், City Civil Court வழக்கறிஞர்கள், அனைத்து வழக்கறிஞர்கள் சங்கங்கள் சார்பாக மாண்புமிகு அம்மாவிடம் ஓரிரு கோரிக்கைகளை வைத்து விடைபெறலாம் என்று எண்ணுகிறேன்.

உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு, அங்கே கழிப்பறை வசதிகள் செய்து தருவதுபற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டேன். சென்றமுறை உயர் நீதிமன்றத்தில் வாதாடும்போது ஒரு வழக்கறிஞர் மாரடைப்பால் காலமானார். காலமான அவரை அனுப்பிவைக்க ஆம்புலன்ஸ் வாகனம் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆகவே என்னுடைய தாழ்மையான



கோரிக்கையாக உயர் நீதிமன்றத்திற்கு ஆம்புலன்ஸ் ஒன்றைக் கொடுத்தால் அங்கே உள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, மாண்புமிகு அம்மா அவர்களே, You are the Iron Leader of India என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். There is no match for you in Indian Politics. உங்களுக்கு நிகரான எந்த ஒரு அரசியல் தலைவரும் இன்று இந்தியாவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) You are the Architect of the number one State in the whole of India. உங்கள் அளவிற்கு ஒரு மாநிலத்தை முன்னேற்றுவதற்கும், அதற்காக மனதை, வாழ்க்கையை, கடினத்தை ஏற்படுத்துபவர் வேறுஎவரும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். You have the intellectual knowledge and courage to combat with any opposition. உங்களை எதிர்கொள்ள காலியாக இருக்கும் நிலைமைதான். இன்று மட்டுமல்ல என்றுமே என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) You are the Amma of the whole State for the sacrifice made by you for the welfare of the people. மக்களுக்காக தியாகம் செய்து, மக்களுக்காகவே பொதுப் பணியில் இருக்கும் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வி. சிவகாமி.

**•திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு இந்த நேரத்தை எனக்குக் கொடுத்தமைக்கு என் வாழ்நாள் எல்லாம் நன்றிக் கடனாக இருப்பேன், என் இதய தெய்வம் அம்மாவுக்கும் உங்களுக்கும் என்று கூறிக்கொள்கிறேன். நான் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாட்டினுடைய மக்கள் — இன்று அம்மா சொன்னதைப்போல இரவு ஆனவுடன் இன்று டி.வி. ஒளிபரப்பு ஆகும்—நாட்டின் நிலை என்ன என்று அனுதினமும் டி.வி. மேல் கண்ணாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்வது; கடலைவிட்டு அலைகள் பிரிந்தாலும், மலரைவிட்டு மணம் பிரிந்தாலும், மணியைவிட்டு ஓசை பிரிந்தாலும், கதிரவனைவிட்டு ஒளி பிரிந்தாலும், இந்த நாட்டு மக்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியை என்றும் மறப்பதில்லை, மறக்கவும்

மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் என்னதான் வித்தை போட்டாலும், மக்களிடம் நடக்காது என்பதை தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-20*

இன்று ஆயிரமாயிரம், இலட்சக்கணக்கான மக்களுக்கு படிப்பிற்காக, அவர்கள் நிலை உயர வேண்டும் என்பதற்காக சைக்கிள் கொடுத்து, கிராமப்புற மக்களுக்கு பள்ளி செல்ல தாயுள்ளம்கொண்ட அம்மா, அவர்களுடைய படிப்பை உயர்த்துவதற்காக இலவச படிப்பைக் கொடுத்து, இலவச பட்டப் படிப்பும் கொடுப்பவர், இராணிமேரி கல்லூரிக்கு கட்டடத்தைக் கொடுக்கமாட்டாரா? இதை மக்கள் அறிய மாட்டார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) கட்டடம் புதிதாகக் கட்டி, நாளைக்கு இதுவே ஒரு 4 செங்கல் அதிலிருந்து விழுந்து, குழந்தைகள் மேல் அந்தச் செங்கல் பட்டு காயம் ஏற்பட்டுவிட்டால் இந்தச் சட்டமன்றத்தில் அம்மா என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்கின்ற கேள்வியை எழுப்புபவர்கள் இவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் கட்டடம் கட்டி ஆண்டுகள் நிறைய ஆகிவிட்டன. அந்தக் கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டும். சட்டசபையும் ஒரு நல்ல, நமக்கு நிரந்தரமான சட்டசபையாக ஆக வேண்டுமென்று தன்னுடைய ஆட்சியிலே முயற்சி எடுத்தது தவறா? இவர்களுக்கு எல்லாம் நான் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன். அம்மாவினுடைய ஆட்சியிலே இவர்கள் என்னதான் வெளியே சென்றுகொண்டே இருந்தாலும்கூட, ஏன் இவர்கள் போகிறார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். தினம் சட்டசபைக்குப் போகிறார்கள். எழுந்து நின்று, உடனே சண்டை போடுகிறார்கள். நாங்கள் ஓட்டு போட்டதற்கு எங்களுக்காக அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை என்கிறார்கள். பாமர மக்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அப்படியில்லை. தெளிவாக இருக்கிறார்கள். அம்மா அவர்கள், வள்ளுவன் சொல்வதுபோல்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று சொல்வதுபோல், இன்று எல்லா மக்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு



எழுத்தறிவைத் தந்திருக்கிறார்கள். இன்று டி.வி.யில் பார்த்த உடனேயே சொல்கிறார்கள், ஒன்றுமே இல்லையே இவர்கள் என்னத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இராணி மேரி கல்லூரிக்கு கட்டடம் கட்டுகின்றேன் என்று சொல்கிறார்கள் அம்மா. போன உடனேயே சண்டை போட்டுவிட்டு வெளியே வருகிறார்கள். இவர்கள் நிலையாக உட்கார்ந்து, இந்தக் கட்டடத்தை எப்படி செய்யலாம், இந்த சட்டசபை என்பது நிரந்தரமாக இருக்க வேண்டும். தற்போதுள்ள சட்டசபையும் பழமையாகிவிட்டது. இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்கிறதே இல்லை. வந்த உடனே சரி, சிறைச்சாலைக்குப்போய் அங்கே தூண்டிவிடுகிறார்கள். அம்மா முதலமைச்சர் வருவார்கள், மறியல் பண்ணுங்கள். அவர்கள் டிவி. யிலேதான் போட்டார்கள். (சிரிப்பு) அவர்கள் டிவி. யில்தான் போராடுகிறார்கள். சரி நாங்கள் எப்பொழுதும் உங்களுக்குப் போராடுவதற்கு உரிமை தருகிறோம். எதற்குப் போராடுகிறீர்கள்? பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையோட அருமை. (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கின்றபோது தன்னுடைய பிள்ளையை எந்தமாதிரி வைக்கலாம், எப்பொழுது குளிக்க வைக்கலாம், எப்பொழுது சாப்பிட வைக்கலாம், எப்பொழுது படிப்பதற்கு அனுப்பலாம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட அம்மாவிற்குத் தெரியாதா? அவருக்கு எல்லாம் தெரியும். அவர் செய்வார் நிச்சயமாக. இராணி மேரி கல்லூரிக்கு கட்டடம் இருக்கும். அவர்கள் படிப்பார்கள். குழந்தைகளுக்கு எந்தவித சேதமும் இல்லாமல் இருக்கும். அதை அம்மா ஆயிரம் முறை எழுந்தெழுந்து சொல்கிறார், எழுந்து சொல்கிறார். எப்படியாவது இவர்கள் இந்தக் கல்லூரியை வைத்து அரசியல் பண்ணமாட்டோமா? இதுதான் இவர்களுக்கு வேலை. அம்மாவிற்கு ஏதாவது ஒரு வழியிலே ஒரு பெயரை உருவாக்க வேண்டாமா? அம்மா, நான் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். என்னவென்றால், இந்நாட்டு மக்கள் நிலையாக நிற்கிறார்கள். போதும், போதுமடா சாமி நாங்கள் பட்டதெல்லாம். இனி வந்து உங்கள் வேஷம் எல்லாம் எங்களிடம் செல்லாது. அம்மா 28 நாள் சிறையிலே இருந்தார்கள். ஏதாவது முகத்திலே சின்ன கீறல் இருக்குமா? இன்றைக்கு எத்தனையோ பேர் என்னை வரச்சொல்லி திட்டினார்கள் வெளியே. ஆனால் நான் ஒன்றையே நினைத்தேன். இது என்ன திட்டு, அம்மா பார்த்ததைவிடவா? அவருடைய ஒரே தைரியத்திலேதான் எவ்வளவு செய்தாலும் அவரைப் பார்த்த உடனே எனக்குள்ளே ஒரு வீரம் பாய்ந்துவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-25*

அதேமாதிரி சட்டம்—ஒழுங்கு இன்றைக்கு எப்படியிருக்கிறது? இவர்கள் ஆட்சியிலே கோயம்புத்தூரிலே நிலைமை என்ன ஆயிற்று? சென்னையிலே நிலைமை என்னவாயிற்று? இன்னும் மாநிலத்திலே பல பக்கங்களிலே எல்லாம் எத்தனை அசால்ட். ஆனால் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஏதாவதொரு அசம்பாவிதத்தைச் சொல்ல முடியுமா? நாட்டிலே எல்லோரும் அன்றைக்கு தீயை வயிற்றிலே கட்டிக்கொண்டு அல்லவா இருந்தோம். உண்மையா, இல்லையா, நீங்களே சொல்லுங்கள். பத்திரிகைக்காரர்களுக்கு எல்லாம் தெரியும். இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், பத்திரிகைக்காரர்களுக்கு எல்லாம் தெரியும். இராணி மேரி கல்லூரிக்கு அம்மா கண்டிப்பாகக் கட்டடம் கட்டித்தர மாட்டார்களா, சொல்லுங்கள். நீங்களே சொல்லுங்கள். (சிரிப்பு) அவர்கள் அரசியல் பண்ணுவதெல்லாம் உங்களுக்குத் தெரியுமல்லவா? உண்மையைப் போடுங்கள். நான் இப்போதும் சொல்கிறேன், எப்போதும் சொல்கிறேன், தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், கிராமப்புறத்திலே ஒரு பெண் படிக்கிறாள் என்றால், அவர்கள் நடந்து வருவது அவர்களுடைய மனசிலே கவலை வாக்கூடாது. அவர்கள் பாடுபட்டு உழைக்கிற மக்கள். அவர்களுடைய பிள்ளைகள் சைக்கிளிலே வந்து, அவர்கள் நன்றாக படித்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டுமென்கிற அம்மா அவர்கள் இங்கே இருக்கிற இராணி மேரி கல்லூரிக்கு, சென்னையிலே பட்டப் படிப்பு படிக்கும் பெண்களுக்கு மட்டும் நல்லது செய்ய மாட்டார்களா? நிச்சயம் செய்வார்கள். அவர்கள் இப்போது இருப்பதைவிட வசதியான கட்டடத்தை நவீன முறையில் கட்டித் தருவார்கள். அதை அவர்களுக்குச் சரியாக, அதேமாதிரி வசதியாகக் கட்டச் சொல்லுங்கள். கட்டடத்தைப் பெரிதாகக் கட்டச் சொல்லுங்கள்; மைதானம் வேண்டுமென்று சொல்லுங்கள். அந்தக் கோரிக்கையை வையுங்கள். அதை ஏன் இடிக்கிறீர்கள் என்கிறார்கள். அதிலேயிருந்து ஒரு நான்கு செங்கல்கள் விழுந்து விட்டால் என்னவாகும்? அப்போதே நான் அதையும் சொன்னேன். அதை நீங்கள் கேட்க மாட்டீர்களா? ஏன் இது மாதிரி எதை எடுத்தாலும் அரசியல்?

சட்டமன்றத்திற்கு நீங்கள் வந்து, இதுவரையிலும் உங்கள் தொகுதி மக்களுக்கு, அம்மா கேட்டார்களே, ஏதாவது பேச முடிகின்றதா உங்களாலே? முடியவில்லை. அம்மாதான் எதைச் சொன்னாலும்



வாரி வழங்குகிறார்களே! நாட்டினுடைய நிதிநிலை இன்றைக்கு எவ்வளவு பற்றாக்குறையாக இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகாரர்களுக்கு மட்டும் இல்லை என்றா சொல்கிறார்கள்? அவர்கள் தொகுதிக்கும் சேர்த்து வாரி வழங்குகிறார்கள். அன்றைக்கு கிராமப்புற மக்கள் கழிவறைக்கு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதை நாடே அறியும். இன்றைக்கு அம்மா அவர்கள் போட்ட திட்டத்தினாலே எத்தனை மக்கள் பயனடைகிறார்கள்? எத்தனை இலட்சம் மக்கள் மன்றங்களை அம்மா அவர்கள் புதிதாக ஆரம்பித்திருக்கிறார்கள்? அவர்களுடைய கட்சிக்காரர்களே சொல்கிறார்கள், இது தேவையில்லாத போராட்டம், என்ன செய்வது என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

இராணி மேரி கல்லூரி என்பது நம்முடைய அரசினுடைய ஒரு அங்கம். அந்தப் பிள்ளைகளுக்கு அம்மா அவர்கள் தேவையான நலனைச் செய்வார்கள். தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் இன்னும் பெரிதாக, நல்ல முறையிலே ஸ்டிராங்க் ஆன கட்டடங்களைக் கட்டித் தருவார்கள் என்கிற எண்ணம் இல்லாமல், உடனே இவர்கள் சட்டத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். சட்டத் துறையிலே இன்று பேச வைத்திருக்கிறீர்கள். இவர்களே சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றவில்லையே? நேற்றைக்கு வெளியிலே போய், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் arrest ஆகியிருக்கிறார்கள். ஏன்? நடு ரோட்டிலே வரிசையாக உட்கார்ந்தால் எவ்வளவு பாதிக்கும்? போய் அவர்கள் வீட்டிலே உட்கார்ந்து அழுங்கள், சாமி கும்பிடுங்கள், ஐயா இப்படி இருக்கிறதே என்று. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதற்காக நடுரோட்டிலே உட்கார்ந்தால் நாட்டைப் பாதிக்காதா, சட்டம்—ஒழுங்கை பாதிக்காதா? சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உங்களுக்கு, அம்மா அவர்கள் இங்கே உள்ளே பாதுகாப்புத் தருவார்கள். வெளியிலே போலீஸ் விடுவார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்கிறார்கள். எங்கே பாதுகாப்பு இல்லை? வெளியிலே எப்படித் தரமுடியும்? ஆயிரம் கண்கள் இருந்தாலும்கூட, நீங்கள் மாத்திரம் அட்டகாசம் இங்கே ஆயிரம் பண்ணுகிறீர்கள்? இங்கேயே எல்லாவற்றையும் முடித்துவிட்டு வெளியிலே சும்மா பேசாமல் போக வேண்டியது தானே? அங்கே சென்று வெளியிலே ரோட்டிலே ஏன் உட்காருகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் எவ்வளவு மக்களுக்குப் பாதிப்பு? அந்த நேரத்திலே யாரோ ஒருவர் ஹாஸ்பிட்டலுக்குப் போவார்கள், போவார்கள் இல்லையா? ஒரு பிரசவத்திற்குப் போவார்கள்; இல்லை என்றால், உடல்நலம்

சரியில்லாமல் வாகனத்திலே போக வருவார்கள். நீங்கள் போய் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிறேன் என்று சொல்லிக்கொண்டு அங்கே போய் மக்களுக்கு இடையூறு தருகிறீர்களே, எப்படி இது? (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகவா நீங்கள் சட்டமன்றத்திற்கு உட்கார வந்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) என்னை என்னவெல்லாம் சொல்லி பயமுறுத்தினார்கள்? நான் உடனே சொன்னேன், எது நடந்தாலும் சரி, என்னுடைய இதய தெய்வம் அவர்கள் நிச்சயம் என்னைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். உலக அதிசயத்திலேயே அம்மாவுக்கு நிகர் கண்டவர்கள் இன்னும் இல்லை. அதேமாதிரி, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால்கூட அம்மா போல ஒருவர் நாட்டிலே பிறக்கவில்லை என்றுதான் சொல்லப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உறுதி, மனசிலே உறுதி, மனசிலே திடம். இனி யாரும் கோபித்துக்கொள்ளாதீர்கள், ஆணுக்கும் வராது, அந்த ஆண்டவனுக்கே வருமா என்கிற ஒரு சந்தேகம்கூட எனக்கு சில நேரங்களிலே எல்லாம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு சட்டம்-ஒழுங்கு எவ்வளவு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மனதார நினைத்துப் பாருங்கள். எதுவாக இருந்தாலும் நான் உண்மையைச் சொல்கிறவள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏதாவது தவறு என்றால் தவறு என்று சொல்லிவிடுவேன். ஆனால் இன்றைக்கு நாடு எவ்வளவு அமைதியாக இருக்கிறது. அன்று காந்தி சொன்னார்; ஒரு பெண் தனிமையாக இரவிலே நடந்து கொண்டு வந்தால் அன்றைக்குத்தான் நாடு சுதந்திரம் அடைந்தது என்று. ஆனால் நிச்சயமாக இன்றைக்கு அது நடக்கிறது. ஒரு பெண் துணிச்சலாகப் போய் போலீஸ் ஸ்டேஷனிலே மனு கொடுத்து எனக்கு நீதி கிடைத்து விட்டது என்று வருகிறாள். கோர்ட்டிலே போய் எனக்கு நீதி கிடைத்து விட்டது, சீக்கிரம், சீக்கிரம், quick, quick என்கிறாள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

அது மாதிரி அம்மா அவர்கள் மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கித் தந்தவர்கள். ஆனால் இவர்கள் அதை இழுத்து மூடப் பார்த்தார்கள். அம்மா மறுபடியும் வந்து அதை நிலைநிறுத்தவில்லையா?



ஒரு சின்ன சம்பவத்தைச் சொல்கிறேன். ஈரோடு, பவானியிலே ஒரு மகளிர் காவல் நிலையம் என்று board போட்டுவிட்டு, அதிலே Police Station வைத்துவிட்டார்கள். அப்பொழுதுகூட நான் சட்டமன்ற உறுப்பினர். நான் போய் அப்பொழுது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன். அம்மா மகளிர் காவல் நிலையங்களைக் கட்டி பெண்களுக்காக விட்டார்கள்; அதில் நீங்கள் ஆண்கள் போலீஸ் ஸ்டேஷன் நடத்திக் கொண்டிருக்கிறீர்களே என்று. அட! போங்கம்மா! மகளிர் Police Station-ஐ எல்லாம் இழுத்து மூடப் போகிறோம் நாங்கள் என்றார்கள். ஆனால் அதே மகளிர் காவல் நிலையத்தை இந்த ஆட்சியிலே, நம்முடைய ஆட்சியிலே என்ன செய்தார்கள்? எல்லாவற்றையும் காலி செய்து விட்டு, இன்றைக்கு பெண் ஆய்வாளர்கள் உட்கார்ந்து பணி புரிகிறார்கள். அந்தப் பெண்களை நீங்கள் மதிப்பது, பெண்களுக்காகப் போராடுவது என்று வந்து விட்டீர்களே அது பொய்யா? பொய் என்று சொல்லக் கூடாது. உண்மைக்குப் புறம்பானதா? (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைக்கு புறம்பானதா அது? அப்பொழுது நீங்கள் போடுவதெல்லாம் வேஷம். அவர்களுடைய வேஷத்தை நிச்சயம் நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள். நான் நாட்டு மக்களுக்குச் சொல்லிக்கொள்வது என்னவென்றால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா இருக்கிறார்கள். இராணி மேரி கல்லூரிக்கு சிறப்பாகக் கட்டடத்தைக் கட்டித் தரப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றம், நல்ல சிறப்பான கட்டடமாக இருக்கும். அதை அம்மா சொல்கிறார்கள்! கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டியதுதானே? உங்களுடைய தொகுதியிலே பிரச்சினை என்ன என்று பார்த்து அதைச் சொல்லுங்கள். அதுதானே நியாயம்? அதை விட்டு விட்டு அங்கே சட்டம்—ஒழுங்கு பாதிக்கிறது. ஏன் பாதிக்கிறது? நீங்கள் போகாமல் இருந்தால் பாதிக்காதே? (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் ஐயா போகிறீர்கள்? ஏன் போகிறீர்கள் நீங்கள்? உங்களை யார் அங்கே கூப்பிட்டார்கள்? ஏதோ தபால் கொடுத்து வரச் சொன்னார்களா பிரின்சிபால்? வாருங்கள் எங்கள் பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டு, கூட்டம் போட்டு புரட்சியைக் கிளப்பி விடுங்கள் என்று? எது புரட்சி? அங்கே ஏதாவது பெண்களுக்கு ஒரு இம்சை, பெண்களுக்கு ஒரு உரிமையில்லை, பெண்களுக்கு அடக்குமுறை இருந்தால் நேரடியாக அம்மா அவர்களிடம் மனு கொடுங்கள் அதிகாரிகளிடம் மனு கொடுங்கள். கட்டடத்திற்காக நீங்கள் ஏன் அங்கே

போகிறீர்கள்? உங்களை யார் அங்கே போகச் சொன்னது? உங்களுக்கு அங்கே என்ன இருக்கிறது? ஒன்று மட்டும் சொல்கிறேன்; எங்களுடைய அம்மா அழகாக எங்களுடைய ஊருக்கு வந்து கொங்கு நாட்டு பாஷையிலே பேசினார்கள். எங்கள் கொங்கு நாடே அம்மாவிற்கு எப்பொழுதுமே கோட்டைதான். ஆனால் இன்றைக்கு கொங்கு நாடு சிறந்த நாடு அம்மா. தெய்வ பக்தியிலே மட்டுமல்ல. ஒருவரை நம்பி விட்டார்கள் என்றால், அவர்களை என்றைக்குமே விட்டுவிட மாட்டார்கள்; அவர்கள் உயிரை விட்டு விடுவார்களே அன்றி, அந்த நம்பிக்கையை மட்டும் விட்டுவிட மாட்டார்கள், கொங்கு நாட்டுப் பெண்கள். அதுமட்டுமல்ல. கொங்கு நாட்டுப் பெண்கள் வீரத்திலும் சிறந்தவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கும் பயப்பட மாட்டார்கள். இன்றைக்கு ஆதிதிராவிட மக்கள் மட்டும் அல்ல, பிற்படுத்தப்பட்ட மக்கள் மட்டும் அல்ல, எல்லா சமூகத்தினரும் பெண்கள் என்று இந்த சுய உதவிக் குழுக்கள் எல்லாம் போட்டீர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சிவகாமி, கொங்கு நாடு மட்டுமல்ல. எங்கள் நாடும் அப்படித்தான். (சிரிப்பு)

**திருமதி வி. சிவகாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு நாட்டை சிறப்பாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு எல்லா மக்களும் சுய உதவிக் குழுவிலே இருக்கிறார்கள். எத்தனை பேர்? சட்டத்தைப் பற்றி என்ன? சுய உதவிக் குழுவிற்கும் சட்டத்திற்கும் என்ன சம்பந்தம்? அந்த சுய உதவிக் குழு இன்றைக்குச் சொல்கிறது, நாங்கள் உரிமையோடு போய் சட்டத்தை நிலைநாட்டுகிறோம். சட்டத்தை நாங்கள் கேட்கிறோம். போலீஸ் ஸ்டேஷனிலே. எங்களுடைய ஊரிலே ஒரு பிரச்சினை. 10 அல்லது 20 பெண்கள் கூட்டமாக உடனே போய் நீதி வாங்குகிறார்கள். நீதியை கையைப் பிடித்து வாங்குகிறார்கள். அவ்வளவு திறமையை அம்மா அவர்கள் வளர்த்து வைத்தார்கள்.

நம்முடைய நாடு இந்தியாவிலே மட்டும் அல்ல. உலகத்திலேயே ஒரு சிறந்த நாடு, சீர்மிக்க நாடு. தமிழர்களுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சிறந்தவன் என்று தெரியும். வடக்கு நோக்கிப் புறப்பட்டு, கனக விசயர்களை கல் சுமைக்க வைத்து கண்ணகிக்கு சிலை வடித்தவன் தமிழன். அதுமட்டுமல்லாமல் பெண்களின் சிறப்பைப்பற்றிச் சொன்னால், போருக்குச் சென்ற மகன் புறமுதுகு



காட்டி போர்முனையில் அவன் இறந்து விட்டான் என்றவுடனே, அவனுக்குப் பால் கொடுத்த கொங்கைகளை அறுத்து விடுவேன் என்று, தன்னுடைய மகன் புறமுதுகு காட்டக்கூடாது, நேருக்கு நேர் அவன் உயிரை விட வேண்டும் என்று சொல்கின்ற அளவிற்கு சிறப்பு வாய்ந்தது நமது தமிழகம். இவர்களினால் சீர்குலைவதை, அம்மா நீங்கள் எப்போதும் அனுமதிக்கவே வேண்டாம். மக்கள் தெளிவாகவே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து, நாட்டின் நிலையை நிர்ணயிக்கிற இந்த மாமன்றத்திலே, வந்தால்—இராணி மேரி கல்லூரிபற்றி அம்மா சொல்லிவிட்டார்கள். கட்டடம் கட்டப் போகிறது; எல்லாம் செய்யப் போகிறேன்; நீங்கள் அமைதியாக உட்கார்ந்து, உங்கள் தொகுதியைப்பற்றிப் பேசுங்கள்; நாட்டின் நிலையைப்பற்றி இப்படிப் பேசுங்கள் என்றால், இல்லை நாங்கள் அரசியல்தான் பண்ணுவோம், சட்டத்தையும் சேர்த்து, நீதித் துறையும் சேர்த்து, நாங்கள் அரசியல் பண்ணுவோம் என்றால், அது முடியுமா? பிறகு நீதித் துறை இப்படி கை கட்டியிருந்தால் நாடு என்னவாகும்? போன முறை குண்டு வெடிப்பு நடந்ததே, அங்கங்கே, இவர்களுடைய ஆட்சியிலே! அதை இல்லையென்று சொல்ல முடியாதே இவர்கள். இன்றையதினம் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால், எங்காவது ஓர் அசம்பாவிதம் நடைபெறுகிறதா?

*பிற்பகல் 12-35*

அதுமட்டுமல்ல. இன்றைக்கு அம்மா அவர்கள் பெண்களுக்கு கொடுத்திருக்கிற துணிச்சலுக்கு ஓர் உதாரணம். சுய உதவிக் குழுவினுடைய ஒரு தலைவி காரில் வந்துகொண்டிருந்தார். ஒரு முகமூடிக் கொள்ளைக்காரன் வந்து, தேனியிலேயிருந்து வரும்போது ஒரு தாய், இரண்டு குழந்தைகள், கணவன் எல்லோரையும் அந்த நபர் அடித்தபோது, இந்தப் பெண் ஒருவர் துணிந்து, அதுவும் அந்த வேனிலே நிறைய ஆண்கள் வந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் பேசாமல் இருக்கும்போது, இந்தப் பெண் மட்டும் இறங்கி, அம்மா கொடுத்த பயிற்சிங்க, அம்மா கொடுத்த துணிச்சல், அம்மா கொடுத்த ஆதரவு (மேசையைத் தட்டும் ஒலி) இறங்கி ஓடிவந்து அவர்களைக் காப்பாற்றி, இன்றைக்கு உயிரோடு ஆஸ்பத்திரியிலே சேர்த்து இருக்கிறார்கள். அத்தனை பேரும் பேசாமல்தான் இருந்தார்கள்.

இதே மாதிரி அம்மா, ஆயிரம் ஆயிரம் பெண்கள் மட்டுமல்ல, இலட்சம் இலட்சம் பெண்கள், கோடி கோடி பெண்கள், உங்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருக்கிறார்கள். எப்படி, பூங்காற்றும் அவர் சொன்னால் புரட்சி செய்யும், வறுமை புதை முகத்தில் புன் சிரிப்பை எழுதிச் செல்லும். நீங்கள் கரம் காட்டும் திசை நோக்கி இந்தக் காலம் போகும், உங்கள் கண்கள் பட்டால் கற்கள்கூட கனிகளாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படி, இன்றைக்கு நீங்கள் கொடுத்த பேராதரவு இந்தப் பெண்களுக்கு எப்படி இருக்கிறது தெரியுங்களா? இன்றைக்குத் துணிந்து, நான் 30 ரூபாய் சம்பாதிக்கிறேன், என்னுடைய குடும்பத்திலே இன்றைக்கு சகலத்தையும், என் குடும்பத்தினுடைய அத்தனை வேலைகளையும் செய்து கொண்டு, நான் சம்பாதிக்கிறேன் என்று ஓர் உரிமையை வளர்த்துக்கொண்டார். இந்த சுய உதவிக் குழுக்களை இன்னும் இலட்சம் இலட்சமாகப் பெருக்க நீங்கள் இன்னும் அவர்களுக்காக கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்க நான் அன்போடு, தாழ்மையோடு உங்கள் பாதம் தொட்டு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நீங்கள் எனக்கு நேற்று இரவே, இன்றைக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று தகவல் கொடுத்திருந்தால் இன்றைக்கு நிறைய பேசியிருப்பேன்.

என்னுடைய தொகுதியிலே, என்னுடைய மாவட்டத்திலே 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு Court கட்ட ஏற்பாடு செய்துதர வேண்டும். அதையும் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இன்று எதிர்க் கட்சிகள் எல்லாம் இந்த மாமன்றத்திலே எப்படியாவது, இந்தக் கட்டட விஷயத்திலே ஒரு களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வெகுவாக பாடுபட்டுப் பார்த்தார்கள். ஆனால் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். நான்கூட எங்கள் ஊருக்கு ஃபோன் செய்து கேட்டேன். அங்கே இதைப் பற்றி, இந்த அரசைப்பற்றி மக்களுடைய எண்ணத்தைப்பற்றி கேட்டவுடன், அதெல்லாம் ஒன்றுமில்லை அம்மா, இவர்களுக்கெல்லாம் வேறு பிழைப்பில்லை என்று மக்கள் சொல்கிறார்கள். பேசாமல் சட்டமன்றத்திலே உட்கார்ந்து, அவரவர்கள் வேலையைப் பார்க்கலாம் இல்லையா? நான்கூட ஒரு நடுநிலையாளரைப் பார்த்துக் கேட்டேன். A.D.M.K. அல்ல. மற்ற கட்சியைச் சேர்ந்தவரும் அல்ல. பொறுப்பாளர் அல்ல. ஒரு



நடுநிலையாளருக்கு, என்னுடைய நண்பருக்கு ஃபோன் செய்து கேட்டபோது, அவர் சொல்கிறார். நம்முடைய அரசு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு படிப்பிற்காக எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாயை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறது. படிப்புதான் பெண்களுக்கு நாளை, வருங்காலத்திலே கண்கள் என்று அம்மா சொல்லி வருகிறார்கள். இந்த நேரத்திலே ஒரு கல்லூரிக்கு வேண்டிய கட்டடத்தைக் கட்டித் தர மாட்டாரா? இதற்காக இப்படி அவர்களுடைய இடத்தை எல்லாம் காலி செய்து கொண்டு போயிருக்கிறார்கள்? இதையெல்லாம் அவர்கள் பார்ப்பார்கள். தயவுசெய்து அவர்கள் இப்படிப் போய் இருப்பதை— பத்திரிகையாளர்கள் எல்லாம் போட மாட்டேன் என்கிறாங்க அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் சொன்னபடி, செய்யாவிட்டால் ஒரு குறிப்பிட்ட டைம் கூட கொடுக்கலாம். அம்மா எவ்வளவு நாட்களுக்குள்ளே அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்று இவர்களே கேட்கலாம். முடிக்காவிட்டால் மறுபடியும் வலியுறுத்தலாம். ஆனால் அந்தக் கட்டடம், எல்லாமே நாம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, ஒன்று அம்மா பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது யார் பேசுகிறார் என்று தெரியாது. அவங்கபாட்டுக்கு சண்டைதான்; வெளியில் கிளம்பிக்கொண்டிருக்க வேண்டியது, இந்த நிலை மாற வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பெற்ற மாமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களுக்குச் சேவை புரிய வேண்டும். அந்தத் தொகுதி மக்களுக்கு என்ன பிரச்சினை, அங்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்து அதைச் செய்யாமல் தங்களுடைய கட்சி, தாங்கள் எப்படியாவது ஒரு mass-ஐப் பெற வேண்டும் என்று நினைத்து செயல்படுகிறார்கள். கண்டிப்பாக இங்கே இல்லாவிட்டால் எப்படி mass-ஐப் பெற முடியும்? சட்டமன்றத்தில் இருந்தால்தான் mass-ஐப் பெற முடியும். சட்டமன்றத்திலே இல்லாதவர்கள், நீங்கள் எப்படியும் இல்லாமலேயேதான் போய்விடுவீர்கள் என்றுதான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு சிறிது நேரம் பேச வாய்ப்பளித்த.. (சிரிப்பு)

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தமுறை பேசுவதற்கு அதிக நேரம் கொடுக்கிறேன், திருமதி சிவகாமி.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு தலைவருக்கும், என் இதய தெய்வம் அம்மாவிற்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று தலைமைக் கொறடாவிடத்திலே ஒரு விரலைக் காட்டி சொன்னதற்குப் பிறகு, எனக்கு வாய்ப்புக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று யதார்த்தமாக சகோதரி திருமதி சிவகாமி வின்சென்ட் அவர்களுடைய சுவையான பேச்சை நானும்—அம்மா அவர்கள் எப்படி ரசித்தார்களோ, நீங்கள் எப்படி ரசித்தீர்களோ, சுவைப்பட நானும் ரசித்துக்கொண்டிருந்தேன். ஏதோ ஒரு கிளிக் குஞ்சு தன் விருப்பப்படியெல்லாம் பேச ஆரம்பித்தால் எப்படி இருக்கும் என்று இன்றைக்குதான் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் மிக சுவையான அம்சம் என்ன என்றால், அதிலே வஞ்சகம் இல்லை, நெஞ்சிலே நஞ்சு இல்லை. உள்ளத்திலே எது பட்டதோ, அதை உதட்டிலே வைத்து, ஊருக்குச் சொல்லிவிட்டார். ஆக இப்படிப்பட்ட வஞ்சகம் இல்லாத நல்ல பெண்மை, பெண் உள்ளங்கள், பிறரைப் பார்த்து கெட்டுப்போவீர்கள் என்று சொன்னால் அவர்கள் வாழ்க்கை நிச்சயமாக பட்டுப்போகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலேதான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று அங்கம் வகித்து எதிர் வரிசையிலே அமர்ந்தவர்கள் தினசரி காலையிலே இங்கு வந்ததற்குப் பிறகு, அவர்கள் பண்ணுகிற குழப்பத்தை எல்லாம் பார்த்ததற்குப் பிறகு, நல்லவேளை ஆண்டவன் நம்மை அம்மாவின் பக்கத்திலே கொண்டுவந்து விட்டுவிட்டர்ர் என்று பெருமையோடு, மகிழ்ச்சியோடு, மன நிறைவோடு நான் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை நான் தவறான முடிவு எடுத்திருந்தால், நானும் இப்போது தெருக்களிலேதான் அலைந்துகொண்டிருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவேளை, எல்லாம் வல்ல இறைவன் அல்லா நல்ல எண்ணத்தோடு என்னை பத்திரமாக அம்மாவிற்குப் பக்கத்திலே கொண்டுவந்து விட்டுவிட்டான். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று பாருங்களேன், அவசர அவசரமாக புறப்பட்டவர்கள் வீட்டுக்குப் போகப் போகிறார்கள் என்று நான் சந்தோஷமாக அவர்களை



வாழ்த்தி வழி அனுப்பிக்கொண்டிருந்தேன். ஆனால் எல்லோரும் ரோட்டுக்குப் போய்விட்டார்கள். சட்டமன்றத்திற்குப் போகச் சொல்லித்தான் ஓட்டு போட்டு மக்கள் வாக்களித்து அனுப்பினார்கள், நடு ரோட்டுக்குப் போகச்சொல்லி அவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்பது அந்த வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்குத் தெரியும். சரி ரோட்டுக்குப் போய்விட்டார்கள். என்ன நடந்தது என்று நமக்குத் தெரியாது. அம்மா அவர்கள் இங்கே வந்து விளக்கம் சொன்னார்கள். அவர்களெல்லாம் ரோட்டிலே அமர்ந்திருந்தார்கள். அவர்களையெல்லாம் பத்திரமாக வண்டியிலே ஏற்றி பாதுகாப்பாக ஸ்டேஷன்களுக்குக் கொண்டுபோய் உட்காரச் சொல்லி, அவர்களுக்குத் தேவையான டீ, காபி, தண்ணீர் எல்லாம் கொடுத்து சீக்கிரத்திலே அவர்களை வீடுகளுக்கு அனுப்பி வையுங்கள் என்று சொல்லி, அனுப்பிவிட்டு வந்துவிட்டதாகச் சொன்னார்கள். காலையிலே பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். அவர்களும் பத்திரமாகப் போய் அங்கேயிருந்து வீட்டிற்குப் போய்விட்டார்கள். நடு ரோட்டிலே போய் உட்காருகிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏதாவது வருகிற வண்டி brake பிடிக்காமல் வம்பு தும்பாக ஏதாவது விழுந்துவிட்டால், ஒரு ஆள், 2 ஆள் என்றால், இரண்டு இடைத் தேர்தலில் பார்க்கலாம். வைக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எக்கச்சக்கமாக நடந்தால், இடைத்தேர்தல் என்று வந்தால், ஒரு seat கூட திரும்ப உங்களுக்கு வராதே? (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அடிக்கிற அரசியல் காற்றில் அத்தனை seat-களும அம்மாவிற்குப் பக்கத்திலே வந்துவிட்டால், எதிர்ப்பதற்கு எங்களுக்கு கொஞ்சம் பேராவது வேண்டாமா? அவற்றையெல்லாம் மனதிலே வைத்துத்தான் அம்மா அவர்கள், அவர்களை பத்திரமாக பிடித்து, வண்டியிலே அமர வைத்து, வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். இந்த அரசியல் ஜனநாயகப் பண்பைப் புரிந்துகொள்ளத் தெரியாதவர்கள் இங்கே வந்து நின்றுகொண்டு வீராவேசமாக கையை உயர்த்துவதைப் பார்த்தால், நாளை வரட்டும் இந்த நாட்டிலே தேர்தல் என்று சொல்கிறார் ஒருத்தர் இங்கே நின்று கொண்டு. (சிரிப்பு) நான் நல்லவேளை அவரைப் பார்த்து விட்டு நானாகவே சிரித்துக்கொண்டிருக்கிறேன். வேறு என்ன செய்ய முடியும்? கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானத்தைக் கீறி, வைகுண்டத்தைக் காட்டுகிறேன் என்று சொன்னானாம். (மேசையைத் தட்டும் ஒலி) அது மாதிரி சாத்தான்குளத்திலே பட்ட அடி கல்லறையாகி இப்பொழுது அங்கே பத்தி கொளுத்தி

வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே வந்து வீரமாக சவால் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'வரட்டும் பார்ப்போம்' என்று இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது?

*பிற்பகல் 12-45*

'ஒரு மஞ்சள் ஆடை மடாதிபதி வீட்டை விட்டு வேகமாகப் புறப்பட்டிருக்கிறார்; இவர்களையெல்லாம் பார்த்து வாழ்த்துச் சொல்வதற்காக. அவர் வந்தால் அவரை பத்திரமாக, அப்படியே பிடித்துக் கொண்டுபோய் கோபாலபுரத்திலே விட்டுவிடுங்கள்' என்று அம்மா நேற்று சொன்னபோது, எனக்கே மிகுந்த மகிழ்ச்சி என்பது மாத்திரமல்ல: அது என்ன, அவர் வந்தால் அப்படியே பிடித்துக்கொண்டு பத்திரமாக அப்படியே கொண்டுபோய் விட்டுவிடுங்கள் என்று சொன்னால், அவரை எவ்வளவு பாதுகாப்பாக அம்மா அவர்கள் வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) யோசித்துப் பாருங்கள். கூட்டத்தோடு கூட்டமாக, ஆளை விலக்குகிறோம் என்று சொல்லி, ஒரு கனத்த போலீஸ்காரர் சாய்ந்து எழுந்தார் என்றால், (சிரிப்பு) அம்மா மேலேயா பழிவரும்? தவறி ஒரு போலீஸ்காரர் சாய்ந்துவிட்டார்; அவரும் சாய்ந்துவிட்டாராம்; நாங்கள் என்ன செய்வது என்று சொல்லிவிட்டுப் போய்விட முடியாதா? அப்படி வரக்கூடாது என்பதற்காகத்தான் அம்மா அவர்கள் கவனமாக, அவரைச் சுற்றி வளையமாக நின்று, பத்திரமாகப் பிடித்து. அந்த மஞ்சள் ஆடை கழன்று விடாதபடி மடாதிபதியை அப்படியே கொண்டுபோய் (மேசையைத் தட்டும் ஒலி) வீடு கொண்டுபோய்ச் சேருங்கள் என்று விட்டிருக்கிறார். இதுதான் நல்ல நீதி; வேறு எங்கே நல்ல நீதி? அவர் 'நெஞ்சுக்கு நீதி' கேட்டார். அவர் நெஞ்சுக்கே அம்மா நீதி வழங்கி, பத்திரமாகக் கொண்டுபோய் விட்டுவிடச் சொல்லிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) இது நடப்பதுதானே.

சட்டமன்றத்திற்கு வாருங்கள்; பேரவைத் தலைவர், எங்கள் அண்ணன். இன்றைக்கு சங்கத் தமிழ் எங்கே இருக்கிறது என்று சொன்னால், அந்த நாற்காலியிலேதான் இருக்கிறது. அந்தச் சங்கத் தமிழ் பேரவைத் தலைவர். அவர் சொல்கிறார்; 'நீங்கள் தமிழினத் தலைவர் என்று நீங்களே பேசிக்கொண்டிருக்கிறீர்களே,



கவலைப்படாமல் வாருங்கள்; உங்களை உட்கார வைக்கிறேன்; அமர்ந்தே பேசுங்கள்; அம்மா சொன்னார், எழுந்து நின்றுகூட பேசவேண்டாம். அமர்ந்துகொண்டே பேசுங்கள்; நான் நின்றுகொண்டே பதில் தருகிறேன்' என்று அம்மா அவர்கள் சொன்னார். பேராசிரியர் என்ன சொல்கிறார்? 'அவர் நின்றால் மயக்கம்; உட்கார்ந்தால் தயக்கம்; உள்ளே வருவதற்கோ பதற்றம்; உங்களைப் பார்த்தாலே மீண்டும் எழமாட்டாரோ என்ற பயம். நாங்கள் என்னம்மா செய்யட்டும்? தயவுசெய்து அவரை விட்டுவிடுங்கள்' என்று, சட்டசபைக்கு வரமாட்டாராம்; தெருவிற்கு வருவாராம்; ரோட்டிற்குப் போவாராம்; காவல் துறையிலே பிடிபட்டிருக்கிறார்கள் என்று சொல்லி—என்ன அந்தமான் ஜெயிலுக்கு அனுப்புவதற்காகவா அவ்வளவு பேரையும் பிடிக்கச் சொல்லி அம்மா உத்தரவு போட்டார்கள்? இல்லை. எல்லோரையும் அந்தமான் செல்லுலார் ஜெயிலுக்கு அனுப்பப் போகிறேன் என்று சொன்னார்களா? மதியம் நாங்கள் சாப்பாட்டிற்குப் போவதற்கு முன்னாலே, அவர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு பலமாகத் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) நான் என்ன என்று கேட்கிறேன்; அவசரம் அவசரமாக சபையைவிட்டு வெளியிலே வா என்றால் கேட்கிறாயா; இவ்வளவு லேட்டாக வருவதால்தான், கேட்பதெல்லாம் கிடைக்கமாட்டேங்குது. சீக்கிரம் சீக்கிரமாக வெளியிலே போய். அவசர அவசரமாக வெளியிலே போய்—இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள்; காலம் எல்லாம் வெளிநடப்பு பண்ணுவதற்கு என்றே ஒரு கூட்டமா? இந்த வெளிநடப்பை நடத்தியே காலமெல்லாம் அரசியல் நடத்தி, இவர்கள் முடித்துவிட்டுப் போகலாம் என்று கருதியிருக்கிறார்கள் என்று சொன்னால், ஒருபோதும் இந்த நாட்டு மக்கள் மத்தியிலே இவர்கள் மரியாதை பெற்று வரப்போவது கிடையாது. இந்த மக்கள் இவர்களை மதிக்கப் போவதும் கிடையாது. மிரட்டி விடலாம் என்று நினைத்தார்கள்; நடக்கவில்லை. நேற்றைக்குப் பேசுகிறபோது, என்னுடைய அருமைச் சகோதரர் திரு. தமிழரசன் சொன்னார்கள்; 'எதிரே உட்காருவதற்குத் துணிவில்லை; சந்திப்பதற்கு தைரியம் இல்லை'. நிமிடத்திற்கு நிமிடம் அல்ல; வரிக்கு வரி, உடனுக்குடன், அவர்களை ஆங்கிலத்திலே ஒன்று சொல்வார்கள். Finger tips-ல் இருக்கிறது. விரல் நுனியில் இருக்கிறது என்று. நீங்கள் எந்தச் சம்பவத்தை, எந்த நாட்டில், எந்த அரசியல் சரித்திரத்தில், எந்த வரியில், எந்தப் புத்தகத்தில் எங்கே என்று சொன்னாலும்,

நிமிடத்திற்கு நிமிடம், வரிக்கு வரி எடுத்து பதிலளிக்கக்கூடிய அற்புதமான அரசியல் திறமை படைத்திருக்கிற தாயே, உங்களைச் சந்திக்க பயப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் பார்க்காத தலைவர்களா? நான் பழகாத தலைவர்களா? நான் சந்தித்து விவாதிக்காத மத்திய சர்க்கார் மந்திரிகளா? இல்லை, நான் போகாத மேடைகளா? நான் பார்க்காத மக்கள் கூட்டமா? இவர்களோடு சந்தித்துப் பழகாத அரசியல் அனுபவங்களா? அத்தனையையும் வைத்துச் சொல்கிறேன். எதிரே உட்கார்ந்துகொண்டு உங்களை கவனித்துக்கொண்டிருக்கிறேன். இந்த 2 ஆண்டுகளாக நடக்கிற சம்பவங்கள், சரித்திரக் காட்சிகள் வரலாற்றுப் பெட்டகங்கள். எங்கே, எந்த இடத்திலே, எந்தச் சம்பவம், எப்படி, யாரும் இங்கே நினைத்துப் பார்க்கமுடியாத நேரத்தில் எழுந்து, உடனுக்குடன்—former Prime Minister of India திரு. நரசிம்மராவ் அவர்கள் எப்படிப் பொருளாதாரத் துறையிலே மாற்றங்களைக் கொண்டுவர விரும்பினார் என்று ஒரு விவாதம் நடக்கிறபோது, உடனே நீங்கள் புத்தகத்தை எடுத்து, வாசித்த வேகத்தைப் பார்க்கவும், திரு. நரசிம்மராவ் அன்றைக்குப் பேசியது என்னுடைய கண்களுக்குள் வந்தது; நின்றது. இவ்வளவு அற்புதமாக, இந்த சாட்சியங்களை வைத்துக்கொண்டு, இங்கே சண்டமாருதம் பண்ணிக்கொண்டிருக்கிற காரணத்தாலேதான், சபைக்கு வராமலேயே ஒருவர் சேப்பாக்கத்திற்கு துரோகம் செய்தாலும் பரவாயில்லை; மொத்தத் தமிழகத்திற்கும் துரோகம் செய்வதற்கு, அத்தனை பேரையும் ஏமாற்றி கூட்டிக்கொண்டுபோய் விட்டார்கள், பாருங்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் எனக்குப் பெரிய ஆச்சரியம். அத்தனை பேரும் எப்படி ஏமாந்து, பின்னாலேயே போய்—பசுவோடு கன்றுக்குட்டி போகின்றவரைதான், அது புல்லைத் திங்கும். வேறு ஏதோடாவது சேர்ந்துவிட்டது என்று சொன்னால், அது என்னென்ன வேலைகளையெல்லாம் பண்ணுகிறதோ அதைப் போய் இதுவும் பண்ணும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விபத்து வர வேண்டாம் என்பதற்காகத்தானே அம்மா படித்துப் படித்து சொன்னார். கெட்டவர்கள் கெட்டபடியே போகட்டும், நீங்களாவது உருப்பட வழியைப் பாருங்கள். உட்காருங்கள் என்றால், முடியவே முடியாது. நாசமாகப் போவதற்கு நாங்கள் முடிவு செய்ததற்குப் பிறகு, தாயே நீங்கள் என்ன எங்களைத் தடுப்பது என்று அத்தனையும் மொத்தமாகக் கிளம்பி தினசரி வந்தவுடனேயே Point of Order, உரிமைப் பிரச்சினை, முதல் கேள்வி, இரண்டாவது கேள்வி என்று



கேட்டுவிட்டு நான் சொல்ல விரும்புவதெல்லாம்—ஐந்து நிமிடங்கள் முடிந்து போய்விட்டனவா, சரி புறப்படுகிறோம் எங்களுக்கு மற்ற ஜோலி இருக்கிறது, நீங்கள் சபையைப் பார்த்துக்கொள்ளுங்கள், நாட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள், எங்களுக்கு வெளியிலே வேலை இருக்கிறது. கடை கம்பெனிகளுக்குப் புறப்படுகிறோம் என்று புறப்பட்டுவிடுகிறார்கள்.

*பிற்பகல் 12-50*

இந்த நாட்டிலே மக்கள் எல்லாம் ரொம்ப விரும்புகிறார்கள் என்று இங்கே இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள், Thanks to the Chief Minister. Again all the united secular forces have all come to join together என்று போட்டார்கள். முதலமைச்சருக்கு நன்றி, எல்லோரும் சேர்ந்தாகிவிட்டதாம். எல்லோரும் சேர்ந்து என்ன செய்யப் போகிறீர்கள்? இன்னொரு சாத்தான்குளம், இன்னொரு அடி, இன்னொரு கல்லறை, இன்னொரு சவக்காடு, அதுதான் வரும். யார் secular-லே சேர்ந்திருக்கிறார்கள்? Secular-லே பாரதிய ஜனதா கட்சி மந்திரி சபையிலே இன்னும் DMK உள்ளே உட்கார்ந்திருக்கிறதே. Secularism-க்கு அவர்தான் தலைவரா? எந்த நீதியில், எந்த நியாயத்தில், எந்த நாணயத்தை வைத்துக்கொண்டு சொல்கிறீர்கள்? யார் Secularist? ஹக்கீம், வளர்மதி ஜெபராஜ், ராஜாங்கம், குமாரதாஸ், ஈஸ்வரன் எங்களைப் பார். இங்கே இருக்கிறார் மாண்புமிகு அமைச்சர்; எங்கள் மரியாதைக்குரிய மாண்புமிகு இஸ்லாமிய சகோதரர் திரு. அன்வர் ராஜா அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இங்கே இருக்கிறார் கிருத்துவத்திற்கு; இதோ மில்லர். எது secularism? இந்து, கிருத்துவர்கள், முஸ்லீம்கள் ஒரே பிள்ளையாக, ஒரு தாயின் பிள்ளைகளாக இங்கே அரவணைத்திருக்கிறோமே இதுதான் secularism-மே தவிர, நீங்கள் நடத்துகிற நாடகம் அல்ல. நீங்கள் பட்டயம் கொடுத்து எழுதினாலும், இந்த நாடு ஏற்றுக்கொள்ளப்போவது கிடையாது. சத்தியத்தில் அடித்துச் சொன்னது மாதிரி நாங்கள் கட்டுப்பாடாக அந்தத் தலைவருக்குப் பின்னால் just like the military soldiers இராணுவத்தின் தளபதிக்குக் கட்டுப்பட்ட மாதிரி, திரும்பின பக்கமெல்லாம், திரும்பின திசையெல்லாம் தலைவர்களை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துகிற இயக்கங்கள் அல்ல. இன்றைக்கு Supreme Court அப்படி என்றால் இங்கே யார்? அம்மாவே Apex Leader; அம்மாவே சட்டம்; அவர் வாய் திறந்து சொன்னால் சட்ட[illegible]துதான் சட்டம், அவர் இட்டதுதான் கட்ட[illegible]

[illegible] சென்னை-600 008
184895

அதைத்தான் வேதமாக ஏற்று இங்கே நடந்துகொண்டிருக்கிறோம். அங்கே என்ன நடக்கிறது தெரியுமா? பேராசிரியர் எழுந்திருந்து அமைதி என்கிறார், நீ உட்காருய்யா அப்படி என்கிறார்கள் பின்னாடி இருந்து. (சிரிப்பு) அவர் எழுந்திருந்து போங்கப்பா என்று வெளியே போய்விட்டார். நடந்ததா இல்லையா? அதற்குப் பெயர் Leadership-ஆ? அதற்குப் பெயர் Leadership-ஆ என்கிறேன். அன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் நான் பேசுகிறேன் இல்லையா? ஏம்பா ஆளுக்காளு பேசுகிறீர்கள்? அமைதி என்கிறார். அவர், உன் பேச்சே சரியில்லை, நீ அம்மாவைப் பார்த்து ரொம்ப பயப்படுகிறீர்கள் என்கிறார் ஒரு ஆள் அதிலே உட்கார்ந்து கொண்டு. (சிரிப்பு)

இன்றைக்கு இவர்களை ஒன்று சேர்ப்பதற்கே ப் தலைவர்கள் தனியாக வேண்டும் போல இருக்கிறது. இவர்கள் எல்லோரும் சேர்ந்து இங்கே நம்மளை சாய்க்கப் போகிறார்களாம். அம்மாவை எதிர்த்து வருவதற்கு, இதுவெல்லாம் நடக்கிற வேலையா? அதிலே பத்திரிகைக்காரர்கள். "Thanks to the Chief Minister, all have come to join together" என்று எழுதினார்கள். எதற்குள்ளே வந்து சேர்ந்தார்கள், எங்கே சேர்ந்தார்கள்? எங்களுக்குத் தெரியாதா, இவர்கள் எல்லாம் சேர்ந்து வந்தால் என்ன நடக்கும் என்று.

நான் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவோடு ஒரு விஷயத்தைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். 'பொடா' சட்டத்தைப் பற்றி, நீதிநிர்வாகம் பற்றி, POTA, POTA, என்று பேசினார்கள். நம்முடைய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கூட அன்றைக்குச் சொன்னார். 'POTA, POTA,' என்று சொன்னார். நான் கொஞ்சம் குழம்பிவிட்டேன். ஒரு சட்டம் தனியாக வந்திருக்கிறதோ, அது என்னமோ, அவர் ஒன்று சொல்லிக் கொண்டிருக்கிறார். இவர் ஒன்று சொல்லிக்கொண்டிருக்கிறார், சரி பரவாயில்லை. அவர் அதைத்தான் சொன்னார் என்று பின்னர் தெரிந்துகொண்டேன். POTA சட்டத்தின்கீழ் கோபால்சாமியைக் கைது செய்தது சரி என்று Supreme Court-ல் file பண்ணினார்கள். பிறகு அவர்கள் ஒரு குழப்பத்தைப் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் வைத்து உண்ணாவிரதம் என்ற பெயரிலே இந்தக் கட்சிக்காரர் எல்லாம் ஒன்றாகப் போய் உட்கார்ந்தார்கள். அந்த உண்ணாவிரதத்தில் மதுரையில் கோபால்சாமி கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசிய பேச்சு பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அம்மா



அவர்களுக்கு intelligence மூலமாக கொடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். துக்ளக் பத்திரிகையில் அதனுடைய விசேஷ பத்திரிகையாளர், நிருபர் கூட அதுபற்றி எழுதியிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் அவர் பேசியிருக்கிறார். அதற்கு உடனடியாக மறு பதில் கூட்டம் என்று சொல்லி மறுநாளே அந்த இடத்திலே நம்முடைய தோழர்களை வைத்துப் போட வைத்தோம். நானே அதில் பேசினேன். ஆனால் அதில் என்ன பேசினார் என்பதற்கு ஒரு சிறு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். "ராஜீவ் காந்தி என்ற அயோக்கியன் பண்ணிய தப்பிற்குத்தான் இந்தத் தமிழகத்திலே தண்டனை தரப்பட்டது." உங்களை மிரட்டுவதற்காக இந்த வாசகத்தை ராஜீவ் காந்தியை இழுத்துப் பேசியிருக்கிறார்கள். அதற்குத்தான் நான் கேட்டேன். ராஜீவ் காந்திக்குத் தண்டனை தரப்பட்டது என்று, கோபால்சாமியை விடுதலை செய் என்று பேசுகிற ஒரு உண்ணாவிரதக் கூட்டத்தில் ஒரு பிரபலமான தலைவர் அதிலே பேசுகிறார். இந்த மஞ்சளாடை மடாதிபதியினுடைய பையன்தான் அந்த விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர். சட்டவிரோதமான பேச்சுக்கள், அக்கிரமமான பேச்சுக்கள், அநியாயமாகப் பேசியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் பேசுவதை பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அதையெல்லாம் கேட்டுவிட்டுத்தான் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சிக்காரர்களும் அதிலே கையெழுத்துப் போடுகிறார்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை.

*பிற்பகல் 12-55*

ராஜீவ் காந்திக்குத் தண்டனை கொடுத்தது சரி என்று காங்கிரஸ் கட்சிக்காரர்களும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு, விடுதலை செய் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது என்ன நியாயம்? இது என்ன நியாயம்? இது என்ன நீதி? இதை இந்த நாட்டில் நாளை கேட்க மாட்டார்களா? நான் இதையெல்லாம், அருள்கூர்ந்து என் தாயின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குக் காரணமே மீண்டும் இந்த மாதிரியான பேச்சுக்களைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அவரவர்கள் இஷ்டத்திற்கு அவரவர்கள் பேசுவதா? தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர் இராணி மேரி கல்லூரியினுடைய கேட்டை அடித்து நொறுக்கி உள்ளே நுழையலாமா? அதைக் கண்டிக்க மாட்டார்களாம், பிடித்தால் அது தப்பாம். அப்படியானால், நாளை எவன் வேண்டுமானாலும் அந்தக்

கல்லூரிக்குள் நுழையலாம், எப்படி வேண்டுமானாலும் போகலாம் என்ற நிலை வந்தால், பெண்களுக்கு என்ன பாதுகாப்பு? பெண் மாணவிகளுக்கு என்ன பாதுகாப்பு? (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே விபரீதம் நடந்துவிட்டால் அதற்கு யார் பதில்? முன்னாள் முதலமைச்சரா? முன்னாள் அமைச்சர்களா, முன்னாள் தி.மு.க. ஆட்சியா? யார் பதில் சொல்வது? தாய்க் குலத்தின் தலைவியாக, இங்கே வாழ்கின்ற அத்தனை தாய்மார்களுக்கும் தாயகத்தின் தாயாக இருந்து போராடிக்கொண்டிருக்கிற இந்தத் தலைவிதான் நாளை அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் வரும். ஆகவே தடுத்தார். அங்கேயிருந்து கிளம்பி, இங்கே இந்த மன்றத்தில் வந்து பேரவைத் தலைவருக்கு முன்னாலே நின்று, "என்னய்யா சபை நடத்துகிறாய்" "சரக்" என்று புத்தகத்தைக் கிழித்து, 'போ, நீயாவது, உன் சபாநாயகர் போஸ்ட்டாவது, உன் சபையாவது' என்று தூக்கி எறிந்துவிட்டுப் போகின்ற அதே உறுப்பினர், அங்கே போயிருக்கிறார் என்றால், இங்கேயே இந்த ஆட்டம் ஆடினார் என்று சொன்னால், அங்கே என்ன ஆட்டம் ஆடியிருப்பார் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல பத்திரிகையாளர்கள், நல்ல தர்மத்திற்கு, நல்ல மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட அந்த பத்திரிகையாளர்கள் இந்த நியாயத்தை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அவர்களைப் பிடித்தது என் தாய், இந்த தேசத்தின் தலைவி, இந்தத் தமிழகத்தின் ஆறு கோடி மக்களின் தலைவி என்று சொன்னால், ஒரு நியாயத்தின், சத்தியத்தின், நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக. அதைக்கூட கொச்சைப்படுத்துகிற வகையில் வருகிறார்கள் என்று சொன்னால், அது இந்த மண்ணிற்கு விளைவிக்கக்கூடிய மிகப் பெரிய பாவம் என்பதை இந்த நோத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களே, இரண்டு பாயின்டை மட்டும் சொல்கிறேன். ஏனென்றால், நான் பேசிக் கொண்டே இருந்தால், அது போய்க்கொண்டே இருக்கும், சில நோத்திலே.

The High Court Bench at Madurai - the establishment of the High Court Bench at Madurai will be a boon to the litigant public hailing from the southern parts of the State like Madurai, Ramanathapuram, Tirunelveli, Kanniyakumari Districts. The Government have sanctioned a sum of Rs. 44 Crores 31 lakhs for the construction of the buildings.



அம்மா அவர்களுடைய அரசாங்கத்திற்கும், சட்ட அமைச்சர் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இதையெல்லாம் கட்டி முடித்தாகி விட்டது. இது தவிர "A sum of Rs. 768.13 lakhs has been sanctioned for providing furniture, air-conditioning, false ceiling, construction of the compound wall, etc? These works are now in progress and expected to be completed shortly". Shortly என்று இருக்கிறது. அவை மிக விரைவாக, மிக மிக விரைவாக, மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஏராளமானவர்கள் சென்னைக்கு வந்து திரும்புவதில் மிகப் பெரிய கஷ்டங்கள், பொருளாதார நஷ்டங்கள் ஏற்படுகிறது. எப்படி அம்மா அவர்கள், Supreme Court கிளை சென்னைக்கு வேண்டுமென்று கேட்டார்களோ, அதேமாதிரி. இது முடிக்கப்படக்கூடிய தருவாயில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்கள் பயன்பெறுகின்ற வகையில் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை மதுரையிலே அமைக்கப்படுவதன் மூலம் தென் மாவட்டத்திலுள்ள மக்கள் நிச்சயமாகப் பயன்பெறுவார்கள் என்கின்ற ஒரு கருத்து இருக்கிறது. எனவே இதனுடைய அவசியத் தன்மையைக் கருதிதான் அரசாங்கத்திற்கு கடுமையான நிதிநெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 44 கோடியே, 31 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கு 'Infrastructure', 'Furniture' வசதி மற்றும் பல்வேறு வசதிகள், வேண்டிய அளவிற்கு நீதிமன்ற நீதிபதிகளுக்கு எல்லாம் தங்குவதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் 7 கோடி ரூபாய் அளவில் செலவிட்டு வருகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில் Completion Certificate-ஐ நம்முடைய பொதுப் பணித் துறையில் விரைவிலே கொடுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தினுடைய கிளை மதுரையிலே திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கும் தெரிகிறது. அதோடு, 15-வது பக்கத்தில் Administration of Justice - It is proposed to computerise the High Court Bench at Madurai at an estimated amount of Rs.2.54 crores. A sum of Rs. 18,86,186 has already been sanctioned to meet out the initial expenditure required for this scheme என்று இருக்கிறது. என்னுடைய மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணிகளும் மிக விரைவாக முடிக்கப்பட்டு, அது முடியக்கூடிய கட்டத்தில் இருக்கிற அதே நேரத்தில், அதற்கும் நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல 12-வது அம்சமாக, New Initiatives - In accordance with the direction of the Supreme Court of India, the Government have decided to grant the scale of pay to the Judicial Officers in this State as recommended by the First National Judicial Pay Commission with effect from 1-7-1996. ஏறத்தாழ 7 வருடங்கள். மிகப் பெரிய தொகையாக அவர்களுக்கு வரும். Accordingly orders revising the pay scale of Subordinate Judicial Officers have been issued on 31-3-2003 inspite of difficult financial position of the State. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு, அம்மா அவர்களுடைய பார்வைக்கு முன்னால், தலைவணங்கி, நான் தாள்பணிந்து தெரிவிக்கிறேன். இவ்வளவு கஷ்டத்திலே, நீதிபதிகளுக்கும் மற்றும் பல துறைகளில் உள்ள எல்லோருக்கும் நீங்கள் சம்பளத்தை பிரமாதமாகக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள். எங்களுடைய சம்பளத்தையும் அருள்கூர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளங்களை, பல மாதங்களாக அது நிலுவையில் இருக்கிறதா அல்லது வேறு நிலையில் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே நேரத்தில் பெரிய தொகையாகக் கொடுத்தால் வாங்குகிற சக்தி எங்களுக்கில்லை. (சிரிப்பு) ஆகையினால், அம்மா அவர்கள் மனமுவந்து (மணியடிக்கப்பெற்றது......)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹக்கீம், இப்போது நீங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர். அதனாலே பிரச்சினைகளை அமைச்சரவர்களிடத்திலே சொல்லலாம். முதலமைச்சரவர்களிடத்திலே சொல்லலாம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** ஆகவே அருள்கூர்ந்து அதை கனிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எந்தப் பேரிடிக்கும், எந்தப் பேராபத்திற்கும் நிமிர்ந்து நின்று எதையும் சந்தித்து, எந்தச் சவாலையும் சரித்திரமாக்கிக்கொண்டு வரக்கூடிய வரலாற்றுப் புகழ்மிக்க எங்கள் தாயே, நீங்கள் நடந்து செல்கின்ற இந்த அடிச்சுவடுகளில், ஆங்காங்கே சில நேரங்களிலே சில சச்சரவுகள், சில்லுண்டிகள் வரத்தான் செய்யும். அதையெல்லாம், நீங்கள் எப்படி அடித்து, நொறுக்கி, தூள் ஆக்கிவிட்டு, எவ்வளவு புரட்சிகரமான சிந்தனையோடு, புத்துலகை நோக்கி நீங்கள் நடைபோடுகிறீர்கள் என்பதையும் இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே எந்தவிதமான தயக்கத்திற்கும், எந்தவிதமான தடைக்கும் இடம் இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, "தவழும் நிலவாம் தங்க ரதம், தாமரை பதித்த மணிமகுடம், குயில்கள் பாடும் கலைக் கூடம், கொண்டது எனது அரசாங்கம்" என்றார். அந்த அரசாங்கத்தைத்தான் இன்றைக்கு அம்மா நடத்திக் கொண்டிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குயில்கள் பாடும் கலைக் கூடம் இங்கே ஆந்தைகளுக்கும் கோட்டான்களுக்கும் இடமேயில்லை என்பதை நாடு அறிந்திருக்கிறது.

நீங்கள் சிறைக்குச் சென்றீர்கள். அந்தச் சிறையிலேயிருந்து இந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் ஆற்றிய ஒரு மிகப் பெரிய தியாகத்தின் விளைவு ஒரு ஆட்சி கொஞ்சம் கொஞ்சமாகச் சுருண்டு, அந்த ஆட்சிக்கு கடைசியில் மூச்சு திணறடிக்கப்பட்டு, தூக்கி எறியப்பட்டது. ஒரு புதிய வரலாற்றைப் படைத்துவிட்டு இன்றைக்கு, புதிய பூபாளமாக இங்கே வந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் எல்லாம் ஒரு காலத்திலே சிறைக்குச் செல்கிறபோது, என்னவெல்லாம் சொன்னார்கள் தெரியுமா? பாளையங்கோட்டை சிறை, பாம்புகள், பல்லிகள் மத்தியில் எங்களுடைய தலைவர் இருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். பாம்புகளும் பல்லிகளும் இருந்த இடத்தில் இவர் எப்படியிருந்தார் என்று கேட்டேன். அவர் இருந்த இடத்தில் பாம்புகளும், பல்லிகளும் செத்துப் போய்விட்டன. பூரான்களும் செத்துப்போய்விட்டன.

ஏன் என்று கேட்க, பாம்புகளும், பல்லிகளும், பூரான்களும் அவரைக் கடித்திருக்கின்றன. விஷம் அவற்றுக்கு ஏறி அத்தனையும் மாண்டு போய்விட்டன. ஆகவே அவர் வெளியே வந்துவிட்டார். ஆனால் இங்கே நீங்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்ட செய்தி, நாடு பார்த்தது. நீங்கள் சொல்லவில்லை. வெளியே வந்து பேசவில்லை. பாட்டுப் பாடச் சொல்லவில்லை. வசனம் பேசச் சொல்லவில்லை. ஆனால் அதையே ஒரு சவாலாக எடுத்தீர்கள். சந்திக்கிறேன். உன்னை தேர்தல் களத்தில், மக்களின் போர்க்களத்திலே, வெற்றிவாகை சூடிவிட்டு மீண்டும் அந்த இடத்திலே அமர்ந்து, நாளை, எனக்கு இழைக்கப்பட்ட அக்கிரமங்களுக்கு, அநீதிகளுக்கு நான் கேட்கிறேன் நீதி, நான் கேட்கிறேன் தர்மம் என்று சொல்லி வந்தீர்களே, அதற்கு இந்த நாட்டு மக்கள் அளித்த அந்த அற்புதமான சான்றுதான் தொடர்ந்து இன்றைக்கு உங்களுக்கு வெற்றிப் பட்டயங்களாக வந்துகொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 1-05*

அடுத்தடுத்த தேர்தல், அடுத்தடுத்த வெற்றி, இனி, அடுத்துவரும் தேர்தலில் தாங்கள் படைக்கிற சரித்திரம்தான், தமிழகத்தின் எதிர்காலத்தில் புதிய வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை மாத்திரம் சொல்லி, நெருக்கடியான சூழ்நிலையிலும் எனக்கு வாய்ப்புத் தந்த சங்கத் தமிழே, பேரவைத் தலைவரே, எங்களின் அம்மாவுக்கு முன்னால், இப்படிப்பட்ட ஓர் அற்புதமான எதிர்கால சிருஷ்டி எப்படி உருவாகி வருகிறது என்பதை கொஞ்சுகின்ற கிளியாக நின்று, என் சகோதரியும் இங்கே சொல்லி முடித்ததற்குப் பின்னால், அதே குயில்கள் பாடும் கலைக்கூடம். எங்கள் தாயின் அரசாங்கத்தைப் புரட்சிப் பாட்டால் பாடினால் எப்படி இருக்குமென்று நான் கொஞ்சம் பாடிப் பார்த்தேன். பாட விட்டதற்கும், பாட்டுகளைக் கேட்டதற்கும், இந்த அடிச்சுவட்டில் என் பின்னால் வருகிற என் பிள்ளைகளுக்கு எப்போதும் அரவணைக்கின்ற தாயாக நான் இருப்பேன் என்று சொல்லாமல் சொல்லி, புன்னகை பூத்து, எங்களை வழி நடத்துகின்ற புரட்சித் தாயே, வணக்கம் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு)

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. அரசன்?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அமைச்சரவையிலே, திரு. அன்வர் ராஜா இருக்கிறார்; திரு. மில்லர் இருக்கிறார் என்று சொன்னார். அதுபோல, மாண்புமிகு பிரதம அமைச்சருடைய அமைச்சரவையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. அரசன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தை, பாரதத் திருநாட்டின் முன்னேறிய முதல் மாநிலமாகக் கொண்டுவருவேன் என்று சூளுரைத்து, அதை நிறைவேற்றிட, இரவென்றும் பகலென்றும் பாராமல், அயராது பாடுபட்டும், ஓய்வு என்றால் என்னவென்றே அறியாது, மக்கள் தொண்டு, மக்கள் தொண்டு என்று அன்றாடம் உழைத்து, தமிழகத்தின் உயர்வுக்கு தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்து, சிந்தனையில் உதிக்கின்ற திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து, துணிந்து செயலாற்றுகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு கோப்பினையும் ஆய்ந்து, அவை வெறும் தாள்கள் என்றோ, அவற்றில் மை நிரப்பி வாக்கியங்கள் எழுதப்படுகின்றன என்றோ கருதாது, கோப்பின் பின்னால், ஒரு மனிதர் இருக்கிறார்; கோப்பின் பின்னால், மக்களின் நலன் உள்ளது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தி, மருத்துவன் ஒருவன் நோயாளியின் நாடித் துடிப்பைக் காம்பிடித்துப் பார்த்தறிந்து, நோயின் தன்மையை உணர்ந்து சரியான மருந்து கொடுப்பதுபோல, மக்கள் வாழ்வின் நாடித் துடிப்பினை உணர்ந்து, வாழ்வின் ஏற்றம் காண முறையான திட்டங்களைத் தீட்டி, திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து, அதை நிறைவேற்றிக் கண்காணிக்கும் எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீதி நிருவாகம்—இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எடுத்தியம்பியபடி, ஜனநாயகத்தினுடைய முக்கிய தூண்கள் என்று சொன்னால், 3 தூண்கள். Legislature, Executive and Judiciary-நீதித் துறைக்கு

முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்; நீதி அனைவருக்கும் உரிய வகையில், உரிய நோத்தில் காலந்தாழ்த்தாமல் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்கின்ற மனப்பான்மையுடன், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட, எந்தவொரு காலத்திலும் இல்லாத அளவுக்கு, எந்தவொரு அரசாலும் செய்ய முடியாத அளவுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நிதிகளை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நீதித் துறையின் மூலம், receipts வருவாய் என்று சொல்லக்கூடிய ஒரு புள்ளிவிவரக் கணக்கை நாம் எடுத்துப் பார்க்கும்போது, 2000-2001 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், 66 கோடியே 20 இலட்சம் ரூபாய்; ஆனால் செலவு, அன்றைக்கு நீதித் துறைக்குச் செய்த செலவு, ரூ.116 கோடியே 35 இலட்சம் ரூபாய். அதேபோன்று, 2001-2002 ஆம் ஆண்டு, நீதித் துறையின் மூலமாக receipts என்று சொல்லக்கூடிய வருவாய் ரூ.57 கோடியே 90 இலட்சம். ஆனால் செலவு, 150 கோடியே 45 இலட்சம் ரூபாய். 2002-2003-ஐப் பொறுத்தவரையிலே, receipts - வருவாய், 52 கோடியே 39 இலட்சம் ரூபாய். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கவனிக்க வேண்டும். 2002-2003 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே நீதித் துறையிலிருந்து வருவாய் அரசுக்கு 52 கோடி 39 இலட்சம் ரூபாய் இருக்கின்ற சூழ்நிலையிலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு தாராள மனப்பான்மையோடு 170 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கின்றார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-10

அதேநேரத்தில் இந்து பத்திரிகையிலே 12-11-2002-ல் ஒரு செய்தி வந்திருக்கின்றது. "As far as Tamil Nadu is concerned upto March 31, 2002, the State should have spent only Rs.595.7 crores including its share of Rs.297.8 crores" 297.8 கோடி ரூபாய் மாநில அரசினுடைய பங்கையும் சேர்த்து 595.7 கோடி ரூபாய் செலவு செய்திருக்க வேண்டும். "But as per the cumulative utilisation certificate sent by the State it has spent a total of Rs.935.9 crores thus exceeding its share."



நீதித் துறைக்கு எந்த அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒரு தாராள மனப்பான்மையுடன் நிதி ஒதுக்குகிறது என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த சான்று இருக்க முடியாது என்று நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அவ்வப்போது திட்டங்களிலே ஒதுக்கீடு இருந்தாலும்கூட சில சூழ்நிலைகளில் அவசரத் தன்மை கருதி உயர் நீதிமன்றம் அனுப்புகின்ற அந்த கருத்துகளை எல்லாம் அவ்வப்போது ஆய்ந்தறிந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவ்வப்போது நிதி உதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள்.

Judicial Academy-நீதித் துறையை சார்ந்த அலுவலர்கள், நீதிபதிகள் அத்தனை பேருக்கும் பயிற்சி கொடுப்பதற்கு கிரீன்வேஸ் சாலையிலே நல்ல ஓர் இடம், விலைமதிக்க முடியாத அளவிற்கு நல்ல ஓர் இடத்தையும் கொடுத்து, அந்தக் கட்டடம் கட்டுவதற்கு 4.5 கோடி ரூபாயை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கி இருக்கின்றார்கள்.

அதேபோன்று உயர் நீதிமன்றத்திலே நூலகம் கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாயை அளித்து இருக்கின்றார்கள். Computerisation of High Court அதற்கு ஒரு கோடியே 9 இலட்சம் ரூபாய்; Legal Services Authority-யினுடைய கட்டடம் கட்டுவதற்கு ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய்; இப்படி, நிதிச் சுமை அரசாங்கத்திற்கு இருக்கின்ற நிலையிலும்கூட நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்த நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நம்முடைய மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'சட்டம் ஓர் இருட்டறை; வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாத விளக்கு' என்று சொன்னார்கள். Justice delayed is justice denied. காலந்தாழ்த்தி வழங்கப்பட்ட நீதி மறுக்கப்படுகின்ற நீதிக்குச் சமம் ஆகும் என்கின்ற அந்தக் கருத்தும் வரக்கூடாது; நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே, புரட்சித் தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியிலே இன்றைக்கு சிறப்பான ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், speedy justice - வழக்குகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்கின்ற மனப்பான்மையோடு, இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஒரு சிறப்பாக, 49 விரைவு நீதிமன்றங்கள் - fast track courts அமைத்த (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாநிலம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய மாநிலம்தானேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலமும் கிடையாது. அப்படி வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு சொல்லப்பட வேண்டும் என்கின்ற வகையில், அந்த நீதிமன்றங்கள் 5 ஆண்டு காலத்திலே செயல்பட வேண்டுமென்பதற்காக 14 கோடியே 12 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கின்றார்கள்.

இன்றைக்கு இந்தியாவிலே வழக்குகளின் எண்ணிக்கை, நிலுவை என்று சொல்லும்போது நம்முடைய மாநிலம் இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மையாக dispose செய்வதிலே இருக்கின்றது. சென்னை உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலே, ஒரே ஆண்டிலே மட்டும் 3 1/2 இலட்சம் வழக்குகள் dispose செய்யப்பட்டு இருக்கின்றன. அதேபோன்று நிலுவையில் உள்ள வழக்குகள் என்று சொன்னால், ஏறக்குறைய 3 இலட்சத்து 68 ஆயிரம் வழக்குகள் இருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் உயர் நீதிமன்றத்திலும் சரி, மற்றும் மாவட்டங்களிலும் சரி instituted case - புதிதாக வழக்குகள் தாக்கல் ஆகிறது என்று சொல்லும்போது, வருடத்திற்கு 5 இலட்சம் வழக்குகள் தாக்கல் ஆகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. எனவே இதையெல்லாம் விரைந்து முடித்து நியாயம் வழங்க வேண்டும் என்கின்ற மனப்பான்மையோடுதான், விரைவு நீதிமன்றங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு எல்லாம் அதிகமான அளவிற்கு சலுகைகளைக் கொடுத்து வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

*பிற்பகல் 1-15*

குற்றத் தொடர்பு வழக்குகள் இயக்ககத்தைப் பொறுத்தவரையில், Directorate of Prosecution இதுவரையிலே பல இடங்கள் கடந்தகால ஆட்சியிலே, அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட



போதெல்லாம், A.P.P.- Grade II அந்த post எல்லாம் நிரப்பப்படவில்லை. எனவே அந்த post எல்லாம் நிரப்பப்படுவதன் மூலம் உடனடியாக வழக்குகள் dispose செய்யப்படும் என்கின்ற ஒரு நிலைமையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 51 குற்றவியல் அரசு வழக்கறிஞர்களை புதிதாக நியமனம் செய்திருக்கிறார்கள். அப்படி நியமனம் செய்யப்படும்போது, நம்முடைய Director of Prosecution Control-ல் வருகிற அந்த ஒட்டுமொத்த வழக்குகளை ஏறக்குறைய 1 இலட்சத்து, 30 ஆயிரத்து 97 வழக்குகளை விசாரித்து தீர்ப்புகள் சொல்லப்பட்டு இருக்கின்றன என்கின்ற ஒரு தகவலை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொல்லியதுபோல, ஒவ்வொரு வருடமும் 5 இலட்சம் வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வருகின்ற ஒரு சூழ்நிலையில், நீதிமன்றத்தின் மேல் அதிகமான அளவிற்கு மக்கள் நம்பிக்கை வைத்து இருக்கின்ற ஒரு நிலையில், சின்ன சின்ன பிரச்சினைகளைக்கூட நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்வதன் மூலம், நீதிமன்றங்களுடைய நேரம் வீணடிக்கப்படுகிற ஒரு நிலைமை. எனவே உடனடியாக விசாரித்து மக்களுக்கு தீர்ப்பு சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில்தான் மக்கள் நீதிமன்றங்கள் நடத்தப்பட்டு அவ்வப்போது தீர்ப்பு வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே இதுவரை கிட்டத்தட்ட 9,887 மக்கள் நீதிமன்றங்கள் நடத்தி Lok Adalat ஏறக்குறைய 1 இலட்சத்து 23 ஆயிரம் பலதரப்பட்ட வழக்குகளை முடிவிற்குக் கொண்டுவந்து, அதன்மூலம் 626 கோடி ரூபாய் இழப்பீடாக மக்களுக்கு வாங்கி கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இதுதவிர, பெண்களுக்கு எதிரான குற்றங்கள். அவற்றையெல்லாம் விசாரித்து உரிய முறையிலே உடனடியாக தீர்ப்பு சொல்லப்பட வேண்டும் என்கின்ற அந்த மனப்பான்மையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்குள்ளே, பெண்கள் நீதிபதியாக இருந்து, வழக்காடுகின்றவர்கள்கூட, அந்த வழக்கறிஞர் பெண்களாக இருக்க வேண்டும்; அரசுத் தரப்பிலே என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின் பேரிலே சென்னையிலும் கோவையிலும் இரண்டு மகளிர் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல நிலையிலே இயங்கிக் கொண்டுவருகிறது. ஏறக்குறைய, 2003 மார்ச் வரையில் தொடுக்கப்பட்ட வழக்குகள் 592 சென்னையைப் பொறுத்தவரையில், முடிக்கப்பட்ட வழக்குகள் 36, நிலுவையில் உள்ளது 556.

அதேபோன்று, கோவை மகளிர் நீதிமன்றத்தில் 2003 மார்ச் வரை தொடுக்கப்பட்ட வழக்குகள் 49. முடிக்கப்பட்டவை 15, நிலுவையில் உள்ளது 31. இந்த நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து, பெண்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்ற வகையில் விரைந்து விசாரித்து நல்ல தீர்ப்பை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, பொதுவாக நீதித் துறைக்கு, Construction - புதிய கட்டடங்கள் கட்டுவது, Constitution-புதிய நீதிமன்றங்கள் அமைப்பது, அமைக்கப்பட்ட அந்த நீதிமன்றங்களை ரிப்பேர் செய்வது என்பது. இந்த வகையில் ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய நீதிமன்றங்கள் மாவட்டங்களிலே கட்டப்பட வேண்டும், அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துரு வழக்கறிஞர்கள் மன்றம், பொது மக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியிலே எழுப்பப்படுகிறது. ஒரே நாளிலே எல்லாவற்றையும் நிச்சயமாக யாராலும் செய்ய முடியாது. அரசாங்கத்திற்கு இருக்கிற இந்தக் கடுமையான நிதிச் சூழலிலும்கூட, எவ்வளவோ நீதிமன்றங்கள் கடந்த காலத்திலும், தற்போதும் தோற்றுவிக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், நம்முடைய தேனி மாவட்டத்தில் ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றம்—கிட்டத்தட்ட ரூபாய் 123.73 இலட்சங்களில், பகுதி-2 திட்டத்திலே ஒரு புதிய நீதிமன்றத்தை அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

அதே போன்று, பல மாவட்டங்களிலே Sub-Courts, District Munsif-*cum*-Judicial Magistrate Court, அதேபோன்று பல இடங்களிலே District Munsif Court எல்லாம் வேண்டுமென்ற ஒரு கருத்துருவைக் கேட்டிருக்கிறார்கள். உதாரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி, சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு, திருத்தணியிலே ஒரு Sub-Court, நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஒரு Sub-Court, திருச்செந்தூரிலேகூட



ஒரு **Sub-Court** மற்றும் நம்முடைய உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் திருமங்கலத்தில்கூட ஒரு Sub-Court வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே வருகின்ற காலங்களில் நிதிநிலைமைக்கேற்ப நிச்சயமாக அவற்றைப் பரிசீலித்து நல்ல முடிவை அரசு அறிவிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சார் நிலை நீதிபதிகளினுடைய ஊதிய உயர்வைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் இங்கே பேசினார்கள். இன்றைக்கு அவர்களுக்கு pay revision செய்யப்பட வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டபோது இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலமும் அதற்கு உடன்படவில்லை. பல மாநிலங்கள் அந்த கருத்திலே உடன்படாமல் மத்திய அரசாங்கத்திற்கு இது குறித்து சட்டமன்றத்தில் ஒரு resolution தீர்மானம் போட்டு அனுப்பி வைத்திருக்கின்ற ஒரு நிலையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் இந்தப் பிரச்சினைக்கு—நம்முடைய சார் நீதிபதிகளுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே அதனை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). உடனடியாக அதை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லி 1-7-1996 முதல் அதை முன் தேதியிட்டு அமல்படுத்துவதன் மூலம் retrospective effect முன் தேதியிட்டுக் கொடுப்பதன் காரணமாக 4½ கோடி ரூபாயும், வருடத்திற்கு 70 இலட்சம் ரூபாயும் அரசாங்கத்திற்கு செலவு ஏற்படுகின்ற ஒரு நிலை இருந்து, நீதித் துறைக்குச் செய்ய வேண்டும் என்ற நல்ல மனப்பான்மையோடு அம்மா அவர்கள் செய்து இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையிலே, இந்தியாவிலேயே சமூகம், கல்வி, பொருளாதாரம் இந்த மூன்று நிலைகளிலும் தமிழ்நாட்டு மக்கள் உயர்ந்து இருக்க வேண்டுமென்ற ஒரு மனப்பாங்கோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முக்கிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். தகவல் தொழில்நுட்பவியல் துறையை நாம் நல்லதொரு சூழ்நிலையில் கொண்டுவருவதன் மூலம் நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களினுடைய சமூகம், கல்வி, பொருளாதாரம், இந்த மூன்று நிலைகளும் உயரும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. எனவே இந்தியாவில் இருக்கின்ற I.T. Policy—தகவல் தொழில்நுட்பவியலுக்கு எந்த ஒரு

கொள்கையும் கிடையாது. ஆனால் கொள்கையில்லாத சூழ்நிலையில், முதலாவதாக ஒரு தெளிவான கொள்கை இந்தியாவிலேயே வகுக்கப்பட்டு இருக்கிறது என்றால், அது தமிழ்நாட்டிலே நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் வகுத்து— (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கொள்கையினுடைய முக்கிய அம்சங்கள்—தமிழ்நாட்டில் தகவல்தொழில்நுட்ப முதலீட்டுக்கு ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்குதல், அரசு அலுவலகங்களின் முன்—ஆளுமை—e-governance மற்றும் தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், ஊரக மக்களுக்கு கணினி பொறியின் பயன்பாட்டினை அளித்து, ஊரகப் பகுதிகளுக்கும், நகரப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவியல் இடைவெளியை Digital divide குறைத்தல், தகவல் தொழில் நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துதல், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தமிழ்மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல்; எனவே தெளிவான கொள்கை இப்படி வகுக்கப்பட்டதன் மூலம். இந்த அடிப்படையிலே செயல்படுவதன் மூலம், நிச்சயமாக வரும் காலங்களில் தமிழ்நாடு Number one மாநிலமாக, அனைத்துத் துறைகளிலும் முன்னேறி (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பத் துறையிலும் நிச்சயமாக நல்ல முன்னேற்றத்தை அடையும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் பேசும்போது ரூ. 2000 கோடி அளவுக்கு மென் பொருள் ஏற்றுமதி என்கின்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது தி.மு.க. ஆட்சியினுடைய கணக்கு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், மென்பொருள் ஏற்றுமதி அதிக அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக மட்டும் 68 சதவிகிதம், ஒரே ஆண்டில் வளர்ச்சி பெற்று, 5,223 கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதியிலே (மேசையைத் தட்டும் ஒலி) முதன்மையான மாநிலம் தமிழ்நாடு என்கின்ற ஒரு வரலாற்றைப் பெற்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த ஒரு அரும் பெரும் சாதனை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோன்று ஏற்றுமதி செய்யும் மென்பொருள் நிறுவனங்கள் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 70, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக தற்போது இருக்கின்ற - ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 866. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி 38 விழுக்காடு. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த அரும் பெரும் முயற்சியின் காரணமாக 68 விழுக்காடு இன்றைக்கு நல்ல ஒரு வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது.

பிற்பகல் 1-25

பொதுமக்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலை தொடர்பைப் பயன்படுத்தி சேவைகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக Medical Transcription, Legal Database Processing, Digital Content Development/Animation, Remote Maintenance, Back Office Operations Accounts, Financial Services, Data Processing, Call Centres, Engineering and Design, Geographic Information Services, Human Resources Services, Insurance Claim Processing, Payroll Processing, Revenue accounting, Support Centres, Business Process outsourcing (BPOs).

இப்படி இந்த வகையில் மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்கின்ற மனப்பான்மையோடு தகவல் தொழில்நுட்பத் துறை இன்றைக்குச் சிறப்பான முறையிலே செயலாற்றிக்கொண்டு வருகிறது.

அதேபோன்று Exhibition என்று சொல்லக்கூடிய கண்காட்சிகள். நாம் உலக அளவிலும், இந்திய அரங்கிலும், மாநில அளவிலும் நடத்துவதன் மூலம் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே நல்ல ஒரு சூழ்நிலை, இன்றைக்கு தமிழ்நாடு, தொழில் செய்வதற்கு உகந்த ஒரு மாநிலம். ஏனென்று சொன்னால் இங்கே Industrial Dispute இல்லை; தொழில் சச்சரவுகள் இல்லை; தொழிலாள சகோதரர்கள் ஒட்டுமொத்தமாக இருக்கிறார்கள்; தொழில் அமைதி நிலவுகின்ற ஒரு மாநிலம் என்றால், அது இந்தியாவிலேயே தமிழ்நாடுதானேயொழிய வேறு எந்த மாநிலமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல. வருடத்திற்கு இந்தியாவிலே 8 இலட்சம் பொறியாளர்கள், B.E. (Computer) படித்தவர்கள் உருவாகின்றார்கள் என்றால், தென்னாட்டிலே மட்டும் 4 இலட்சம் பேர். அதிலே தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர். அதிலே உலக அளவில் ஒரு கருத்து இருக்கிறது. தமிழ்நாட்டிலே படித்த அந்த பொறியியல் பட்டதாரிகள் Computer படித்தவர்கள்தான் நல்ல ஆங்கிலம் பேசக்கூடிய திறமைசாலிகளாக இருக்கின்ற நிலைமை இருப்பதன் காரணமாக நிச்சயமாக வெளிநாட்டவர்கள் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிலே வந்து தொழில் செய்யக்கூடிய நல்ல ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே நம்முடைய தமிழ்நாட்டினுடைய வளம் மற்றும் பல்வேறு அம்சங்கள் எல்லாம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம், மற்ற நாடுகளுக்கு எல்லாம் எடுத்துச்சொல்ல வேண்டிய கட்டாயத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையின் காரணமாக Connect 2002 நடத்தப்பட்டது. இதிலே கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் Connect 2002-ல் attend செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று, மேம்பாட்டு மைய மாநாடு OECD- Organisation of Economic Co-operation Development. Then, NASSCOM Outsource India 2003.

அதேபோன்று மற்ற மாநிலங்களிலே நடத்தப்பட்ட கண்காட்சிகள் என்று சொல்லும்போது GITEX Hyderabad 2003, India Soft 2003, Delhi, GITEX at Dubai, CEBIT 2003 at Germany.

சமீபத்திலே ஜெர்மனியிலே ஹனோவர் என்ற பகுதியிலே CEBIT Exhibition நடத்தப்பட்டது. அந்த நாட்டினுடைய கூட்டாளி மாநிலமாக இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்தையும் அவர்கள் தேர்வு செய்யவில்லை; தமிழ்நாட்டிலே சிறந்த வகையிலே நிர்வாகம் செய்வதன் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கூட்டாளி மாநிலமாக ஜெர்மனி நம்மைத் தேர்வு செய்திருக்கிறது என்றால், இதை மிகப் பெரிய சாதனையாகவே நான் இங்கே எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று Tamil Internet Conference விரைவிலே சென்னையிலே நடத்த இருக்கின்றோம்.



அதேபோன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் பேசும்போது எந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் அறிவுசார் மிக்க அரும்பெரும் முதலமைச்சராக இருக்கிறார் என்கின்ற ஒரு தகவலைச் சொன்னார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட ஓர் அறிவுலக மேதையை வெளிநாட்டில் இருக்கின்ற அறிவுலக சான்றோர்கள் எல்லாம் சந்தித்திருக்கின்றார்கள். அவர்கள் Mr. Nicholas Negroponte, Mr. Michael Corbett, Dr. Nigel Roxbough, Scott Mcnealey போன்ற அறிஞர் பெருமக்கள் எல்லாம் சந்தித்து கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தக் கருத்துகளை ஏற்று நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறையிலே செயல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று SETS- Society for Electronic Transactions and Security. இணைய தளம் மற்றும் நாம் e-mail செய்யும்போது நாம் நினைத்துக்கொள்கின்றோம் அந்த e-mail-ஐப் பொறுத்தவரையில் நாம் அனுப்புவது, அது யாருக்கும் தெரியாது; எனவே அது இரகசியமாக இருக்கும் என்று நாம் நினைத்துக்கொள்கின்றோம். அதுவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் ஒரு website-ஐ அனுப்பினால் கூட, அதை யார் வேண்டுமானாலும் அழித்துவிடலாம். அப்படிப்பட்ட மோசமான விளைவுகள் கூட வருங்காலங்களில் நிகழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே அதற்கு ஒரு பாதுகாப்பு; நாம் அனுப்புகின்ற e-mail அது யாருக்கும் தெரியக்கூடாது; இரகசியத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற அந்த மனப்பான்மையோடு SETS-Society for Electronic Transactions and Security அமைக்கப்பட்டது. இந்த SETS எல்லா மாநிலங்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்று எல்லா மாநில முதலமைச்சர்களும் விரும்பினார்கள். ஆனால் கடுமையான போட்டியிருக்கிற சூழ்நிலையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்படியாவது சென்னையில் அமைக்க வேண்டுமென்று அவர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இன்றைக்கு 'SETS' நம்முடைய சென்னையிலே....(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30 [2003 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) மணி அடித்தது உங்களுக்கு இல்லை, சட்டத் துறை அமைச்சர் பயப்பட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சென்னையிலே அமைக்கப்பட்டு, அப்படி அமைக்கப்படுகின்ற அந்த 'SETS' Society for Electronic Transactions and Security-க்கு இலவச இடவசதி, கட்டுமானத்திற்கு நிலம் மற்றும் நம்முடைய Share-ஆக ரூ. 60 இலட்சத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி, வேறு எந்த மாநிலத்திற்கும் செல்லாதபடி நம்முடைய தமிழ்நாட்டில்தான் அது இருக்க வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில்தான் இருக்க வேண்டுமென்ற அந்த மனப்பான்மையுடன் இன்றைக்கு சென்னையில் அதை ஏற்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

Video Conferencing-காணொளி. நாட்டில் மிகப் பெரிய ஒரு உன்னதத் திட்டம் எதுவென்றால் historical event என்று சொல்லக்கூடிய, ஓர் event ஆக, Video Conferencing நிகழ்ச்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதிலே ஒரு மிகப் பெரிய சிறப்பு என்னவென்றால், ஆந்திராவிலே அங்கிருக்கிற முதலமைச்சர் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு மட்டும்தான் Video Conferencing காணொளி மூலமாக தொடர்புகொள்ள முடியும். ஆனால் S.P., D.I.G., Zonal I.G. இவர்களோடு தொடர்பு கொள்ள முடியாது. ஆனால் இந்தியாவிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட கண்காணிப்பாளர்கள், D.I.G., Zonal I.Gs., S.Ps. தலைமைச் செயலகத்திலுள்ள செயலர், அமைச்சர்கள் என்று அத்தனை பேரையும் தொடர்புகொள்ளக்கூடிய ,ஒரு Multi-point, D.G.P., Commissioners போன்ற அத்தனை பேரோடும் உடனடியாக காணொளி மூலமாக நேருக்கு நேர் தொடர்புகொள்ளக்கூடிய வசதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு historical function என்று சொல்லக்கூடிய அளவிற்கு வரலாற்றிலே எதிர்வரும் காலங்களிலே அது P.C.O. S.T.D Booth போல இன்னொரு 10 ஆண்டுக் காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக வரும்.



ஆனால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக அனைவரையும் ஒரே இடத்தில் இருந்து தொடர்புகொள்ளக்கூடிய ஒரு வரலாற்றை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 'RASI' திட்டம், சமூகம், கல்வி, பொருளாதாரம் ஆகிய இந்த 3-ஐயும் எப்படி உயர்த்துவது என்றால், தொடர்பு என்பது மிக மிக முக்கியம். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். ஓர் இடத்தில், ஒரு கிராமத்தில் தக்காளி விளைகிறது என்றால், அது நல்ல விலைக்குப் போகிறது என்றால், அதைச் சுற்றி இருக்கிற மாவட்டங்களிலெல்லாம் உடனடியாக தக்காளியைப் பயிரிட்டு விடுவார்கள். எனவே அங்கு எவ்வளவு மார்க்கெட்டிங், என்ன infrastructure இருக்கிறது என்று நிச்சயமாக யாருக்கும் தெரியாது. எனவே தகவல் தொடர்பு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக நிச்சயமாக இந்த நிலை மாறும். மதுரையில், மேலூர் வட்டத்தில் உலகசாத்தான்பட்டி என்ற கிராமத்தில் ஒரு சிறுமி—அந்தக் கிராமத்தில் கத்தரிக்காய்க்கு வியாதி வந்திருக்கிறது—அந்த வியாதியைப் போக்க என்ன செய்வது என்று உடனடியாக அந்த விவசாயப் பல்கலைக்கழகத்தினுடைய இண்டர்னெட் மூலமாக தொடர்பு கொண்டு அவர்கள் கொடுத்த அந்த அறிவுரையின்பேரில் மருந்துகள் எல்லாம் தெளிக்கப்பட்டு அந்த வியாதி வராமல் தடுக்கப்பட்டிருக்கிறது. எனவே தகவல் தொடர்பைப் பொறுத்தவரையில், அது இருப்பதன் காரணமாக எந்த அளவிற்கு பொருளாதார விரயம் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் மதுரை, உலகசாத்தான்பட்டி கருத்தை எடுத்துச் சொன்னபோது, உடனடியாக 10 மாவட்டங்களிலே கிட்டத்தட்ட இதை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லி, 'ராசி' RASI— Rural Access to Services through Internet என்கிற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஊரக வளர்ச்சித் திட்டத் துறையில், தகவல் தொழில்நுட்பத் துறை மூலமாக செயல்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் ஒரு கிராமத்தில் இருந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகக் கூட இதைச் செயல்படுத்துவதற்கு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. எனவே இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தகவல் பெட்டி கிட்டத்தட்ட

ரூ.60 ஆயிரம் ஆகின்ற நிலை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் நிச்சயமாக தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 17,654 கிராமங்களில் இந்த நிலையைப் பெறும்போது, நிச்சயமாக communication gap என்ற நிலை வராது, எனவே சமூகம், கல்வி, பொருளாதாரம் ஆகிய இந்த மூன்று நிலைகளில் நிச்சயமாக தமிழ்நாட்டில் மக்கள் முன்னேறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இறுதியாக, சட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது சொன்னேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 2002 ஆம் ஆண்டைப் பொறுத்த அளவிலே மக்கள் நல்வாழ்வுக்கு என்றே அறுபதுக்கு மேற்பட்ட சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி என்பதற்கு எல்லாத் துறைகளையும் உதாரணம் சொல்கின்ற நிலையிலே, மற்ற மாநிலங்கள் எல்லாம்கூட நம்முடைய சட்டத் துறையை அணுகி, என்னென்ன சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்கின்ற அந்தத் தகவல்களை எல்லாம் பெற்றிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, கேரளத்தினுடைய சட்டம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய சட்டத் துறையை அணுகி, இங்கே இருக்கின்ற பல நல்ல சட்டங்களுடைய நகல்களை எல்லாம் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று குஜராத் மாநிலமும் நம்முடைய சட்டங்களை எல்லாம் கேட்டுப்பெற்றிருக்கிறது. அப்படி ஒரு அறிவு சிறந்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருத்தில் உருவான சட்டங்கள் இன்றைக்கு அகில இந்திய அளவில், எல்லா மாநிலங்களும் பின்பற்றுகின்ற நிலைமை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் உருவாகி இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

சட்டக் கல்வியைப் பொறுத்தவரையிலே, மாறி வருகின்ற விஞ்ஞான சூழ்நிலைக்கு நல்ல சட்டக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய விருப்பம். எனவே அந்த விருப்பத்திற்கேற்ப நம்முடைய டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியிலே 80 மாணவர்களுடன் B.A., B.L. (Hons.) தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று



நம்முடைய டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் மூலமாக—சட்டப் பல்கலைக்கழகம் என்று சொல்லும்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலே எவ்வளவோ பல்கலைக்கழகங்கள் ஒரு மாநிலத்திலே இருக்கலாம். ஆனால் சட்டப் படிப்பிற்கு என்று சட்டப் பல்கலைக்கழகம் கண்ட ஒரே தலைவி, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா மட்டும்தானேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாரும் இல்லை. எனவே அவருடைய brain-child ஆக இருக்கின்ற நம்முடைய டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் School of Excellence என்கின்ற ஒரு சிறப்பு சட்டப் பள்ளி, பெங்களூரைக் காட்டிலும், National Arts School-ஐக் காட்டிலும் நல்ல நிலையிலே வருங்காலத்திலே வர வேண்டுமென்கின்ற ஓர் எண்ணத்தோடு 40 மாணவர்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. அதுதவிர, மாறி வருகின்ற சூழ்நிலைக்கு நல்ல Diploma courses எல்லாம் கூட சட்டப் பல்கலைக்கழகத்திலே அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்ற அம்மா அவர்களுடைய கட்டளையை ஏற்று, வணிகர் சட்டம், அரசமைப்புச் சட்டம் மற்றும் சட்டம்-ஒழுங்கு போன்ற அந்தக் கல்வியை எல்லாம் கொடுத்திருக்கின்றோம். எனவே இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கையின் காரணமாகத்தான் இந்தியாவிலே தமிழ் நாட்டில் சட்ட அறிவு பெற்றவர்களுடைய எண்ணிக்கை என்று சொல்கிறபோது, மொத்த மக்கள்தொகையில் 73 சதவீதம் பேர் சட்ட அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே வருங்காலத்தில் 100 சதவீதம் அளவிற்கு சட்ட அறிவுபெற்று விழிப்புணர்வு பெற்றவர்களாக உருவாக்குவது அரசாங்கத்தினுடைய இலட்சியம். அதை நிச்சயமாக நாங்கள் உருவாக்குவோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையிலே சில அறிவிப்புகளை வெளியிடச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவிப்புகள்.

தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து

வருகின்றது. இவ்வாண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலருக்கும் (ரூ. 5200 கோடிக்கும்) மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி செய்து, 900-க்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்களையும், 50,000-க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட மாநிலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின்கீழ், தமிழ்நாடு, மீண்டும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக அளவில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் ஒரு தொய்வு ஏற்பட்ட போதிலும், இத்துறை தமிழ்நாட்டில் சிந்தனை வேகத்தில் வளர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் அதன் வளர்ச்சியை இரட்டை இலக்க விழுக்காட்டில் double digit growth நிலைநாட்டி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கடந்த ஆண்டின் அறிவிப்பில் "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002" வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தமிழ் நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்கள் போய்ச் சேரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002" செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்டது என்பதை இந்த ஆன்ற பெரும் பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

தமிழகத்தை ஓர் அறிவு சார் மாநிலமாக (Knowledge Based State) மாற்றத் தேவையான அறிவையும் வளத்தையும் வழங்கவல்லத் தக்கதாகத் தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002 கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டை, தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கு ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்குதல், அரசு அலுவலகங்களில் மின் ஆளுமை மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், ஊரக மக்களுக்கு கணிப்பொறியின் பயன்பாட்டினை அளித்து ஊரகப் பகுதிகளுக்கும், நகரப்பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல்



தொழில்நுட்ப அறிவின் இடைவெளியைக் குறைத்தல், தகவல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தல், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

(2) செப்டம்பர் 2002-ல், 'தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002' வெளியிடப்பட்ட அதே நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை (Information Technology Enabled Services-ITES) கொள்கை இணைய தளத்தில் இடப்பட்டது. இத்திட்டத்திற்கு உலக அளவில் மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரை மற்றும் உலக வல்லுநர்கள் பலர் வழங்கியுள்ள கருத்துகள் பேரில் சில மாற்றங்கள் செய்து தகவல் தொழில்நுட்பம் சார் சேவை (Information Technology Enabled Services-ITES) கொள்கை இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை, தகவல் தொழில்நுட்பம் சார் சேவையின் உலக மையமாக (Global ITES Capital) தமிழகத்தை முன்னிறுத்தும். அத்துடன் தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத்தின் வலுவான மாநிலமாக மாற்றி, மதிப்பும், வளமும் சேர்த்து வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

(3) தகவல் தொழில்நுட்பத் தொழிலை ஊக்குவிப்பதற்குப் பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. ஹனோவரில் நடைபெற்ற, உலகிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்பத் துறைப் பொருட்காட்சியான 'CEBIT 2003'-ல் இந்திய அரசுடன் சேர்ந்து தமிழக அரசும் பங்குபெற்றது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகளுக்கு உகந்த இடமாக தமிழகத்தை உருவாக்க இப்பங்கேற்பு உதவும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை ஆகியவை தொடர்பான முதலீடுகளுக்கு தமிழகத்தை உகந்த இடமாக உருவாக்கும்பொருட்டு, இதுபோன்ற பன்னாட்டு வணிகக் காட்சிகளில் பங்கேற்பது தொடரும்.

(4) சென்ற ஆண்டின் அறிவிப்பில் அரசு CONNECT 2002 சென்னையில் நடைபெறும் என்று அறிவித்தது. அதன்படி CONNECT 2002 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, நான்கு மடங்கிற்கும் கூடுதலான, 40,000-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு நிரலின்படி CONNECT 2003 செப்டம்பர் 2003-ல் இந்தியத் தொழில் துறை, பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து சென்னையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை முதலான முதலீடுகளுக்கு ஏற்ற இடம் தமிழ்நாடு என்பதை நிலைநாட்டும்.

(5) தமிழ்த் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிப் பணியில் உலகெங்கிலும் பரவி உள்ள தமிழ் மக்களை ஒருங்கிணைக்கத் தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம் உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கமும் கண்காட்சியும், தமிழ் இணையம்-2003 என்ற பெயரில் ஜூலை அல்லது ஆகஸ்ட் 2003-ல் சென்னையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) தகவல் தொழில்நுட்ப உலகில், உலக நாடுகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு வளருகின்ற இக்காலத்தில், தகவல் தொழில்நுட்ப வருவாயினைக் கூடுதலாக்க இந்தியா முயன்று வருகின்றது. இவ்வேளையில் தகவல் தொழில்நுட்பம் சார் சேவையைச் சார்ந்த சில முக்கியத் துறைகளில் தமிழ்நாடு, உலகில் ஒரு பெரிய அளவில் வளர்ந்து வருகின்றது. இந்த முக்கியத் துறைகளாவன: வங்கி நிதிச்சேவை, காப்பீடு, சுகாதாரம், கணிப்பொறி வழி வடிவமைத்தல், கணிப்பொறி வழிப்பொறியாளுமை முதலியவை ஆகும். ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில், சென்னையை இத்துறைகளில் உலகத் தலைநகரமாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(7) தமிழ்நாட்டில் உள்ள 2ஆம் நிலை நகரங்களைத் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேம்படுத்த, எடுத்து வாப்படும் அயராத முயற்சியின் தொடர் நிகழ்ச்சிகளாக தொழில்நுட்பக் கருத்தரங்கமும், கண்காட்சியும் I.T.COM கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், போன்ற நகரங்களில் நிகழ்த்தப்பட்டன. அதேபோல், இவ்வாண்டும் தமிழ்நாட்டில் உள்ள இந்த 2ஆம் நிலை நகரங்களில் கண்காட்சியும் தொழிநுடபக் கருத்தரங்கமும் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகின்றேன். இந்தக் கருத்தரங்கங்களும், கண்காட்சிகளும் பொது மற்றும் தனியார் கூட்டமைப்புடன் நடத்தப்படும். இந்த நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதையும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை தொடர்பான முதலீடுகளுக்கு உகந்த இடமாக மாற்றும்.



(8) மூன்றாம் நிலை நகரங்களையும், வெளியிலிருந்து செய்து பெறவல்ல தகவல் தொழில்நுட்ப வணிகச் செயல்பாட்டுக்கு (Business Process Outsourcing - BPO) உகந்த இடங்களாக முன்னிலைப்படுத்த பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்போடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(9) பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்போடு உலகத் தரம்வாய்ந்த வசதிகளுடன்கூடிய அறிவு சார் தொழில் நகரியங்கள் (Knowledge Industry Townships-KITS) தகவல் தொழில்நுட்ப வழிப்பாட்டையில் IT Corridor அமைக்கப்படும்.

(10) மீடியா லேப் ஏசியா என்ற பெயரில், இந்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும், மசாச்சுசெட்ஸ் (Massasuchusetts Institute of Technology-MIT, USA) கல்வி நிறுவனமும் தமிழக அரசின் கூட்டமைப்போடு சென்னையில் ஒரு மண்டல ஆய்வுக் கூடத்தை (Regional Lab Computing) நிறுவியுள்ளன. இந்த ஆய்வு மையம் தொடர்பியல் (Communication) மற்றும் கணிப்பியல் (Computing) துறைகளில் உயர்ந்த அளவிலான ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்.

பிற்பகல் 1-15

(11) மின் செய்தி பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronics Transaction and Security-SETS) மின் செய்தி உருவாக்கல், சேமித்தல், தரவுக் கிடங்கு (Data Warehouse) அமைத்தல், பரிமாற்றம் செய்தல், தரவு திரும்பப்பெறல் (Data Retrieval) போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுகின்றது. மின் செய்தி பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் (SETS) தலைமைச் செயலகம் தங்கள் மாநிலங்களில் நிறுவப்பெறுவதற்காக, தகவல் தொழில் நுட்பத்தில் முன்னிலையில் உள்ள அனைத்து மாநிலங்களும் முயற்சி செய்தன. ஆயினும், நமது ஆர்வமிக்க, சீரிய ஆற்றலும், ஆக்கத் திட்டங்களும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பெரும் முயற்சியால் அதன் தலைமைச் செயலகம் சென்னையில் நிறுவப்பட உள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கீழ்க்கண்டவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

(1) மூன்று வருடங்களுக்கு 5,000 சதுர அடி கட்டுமான இடம் கொண்ட இலவச வாடகைக் குடியிருப்பு வசதி ஏற்பாடு செய்தல்.

(2) தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். அறிவு சார் மாநகரத்திலிருந்து 3 ஏக்கர் நிலம் ஏற்பாடு செய்தல்.

(3) மின் செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் (SETS) உறுப்பினராக ரூபாய் 60 இலட்சம் தமிழக அரசின் சார்பாகப் பங்களிப்புத் தொகையாக வழங்குதல்.

(12) திறந்த நிலை மூல மென்பொருள் (Open Source Software-OSS) வளர்ச்சி ஒரு பரிணாம வளர்ச்சி. அது அரசாங்கத் தேவைகளுக்கேற்ப ஆற்றல்களைக் கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் தலைமையில் எல்காட் (ELCOT) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரைச் செயலராகக் கொண்ட ஒரு குழு திறந்த நிலை மூல மென்பொருள் (OSS) வளர்ச்சியைப் பயன்படுத்தி சிறந்த ஒரு மின் ஆளுமைத் (e-Governance) திட்டத்தை உருவமைக்க நியமிக்கப்பட்டுள்ளது. மின் ஆளுமையில் திறந்த நிலை மூல மென்பொருளைப் பயன்படுத்துவதில் அரசுத் துறை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இது தொடர்பான முன்னோடித் திட்டங்களை அரசு செயல்படுத்த உள்ளது. திறந்த நிலை மூல மென்பொருள்களுடன் இணைந்து செயல்படும் வகையில் தமிழ் மென்பொருள்களை உருவாக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

(13) தமிழக அரசு, தமிழ்நாடு மெய்நிகர்த் தனி வலை அமைப்பு (Tamil Nadu Virtual Private Network-TNVPN) ஒன்றினை பொது மற்றும் தனியார் கூட்டமைப்புடன் அமைக்கவுள்ளது. இந்த மெய்நிகர்த் தனி வலை அமைப்பு, அரசாங்கத் துறைகள் அனைத்தையும் இணைத்து, ஒளி, ஒலி மற்றும் எழுத்துத் தரவுகளை (Video Voice and Data) ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளத் துணை செய்யும், இதன் மூலம் பொதுமக்கள் குறை தீர்க்கும் நேரம் குறையும். சேவைத் தரம் உயரும். அரசின் சேவை வெளிப்படையானதாக அமையும். அரசு 29 மாவட்டங்களையும் மற்றும் வட்டங்கள், தொகுதிகள் ஆகியவற்றையும் தனியார்த் தொலைத் தொடர்பு இணைப்பு வழங்குவோரிடமிருந்து (Private Communication Providers-PCP) 2 MBPS (Mega Bits per Second) தடத்திறன் கொண்ட இணைப்பைத் பெற்று, சென்னையுடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



(14) தமிழ்நாடு மெய்நிகர்த் தனி வலையமைப்பு (Tamil Nadu Virtual Private Network-TNVPN) மின் ஆளுமைத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கும் முயற்சி, மின் ஆளுமை செயல் எளிமைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு ஒரு பெரும் ஊக்கமாக அமையும். எளிமையாக்கப்பட்ட வெளிப்படைப் பதிவு நிர்வாகம் (Simplified and Transparent Administration of Registration-STAR) இணைய வழி ஊரகச் சேவை (Rural Access to Services through Internet-RASI) போன்ற திட்டங்கள் இந்தியாவின் முன்னோடித் திட்டங்களாக உள்ளன. தமிழக அரசு இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து மிகுந்த கவனத்துடன் செயல்படுத்தும். மின் ஆளுமைத் திட்டங்களை ஆய்ந்து வடிவமைத்துச் செயல்படுத்த, இந்திய அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மின் ஆளுமை தொடர்பான ஓர் அனைத்திந்திய கருத்தரங்கத்தை (All India Conference on e-Governance) தமிழக அரசு பொறுப்பேற்று சென்னையில் நடத்த இருக்கிறது.

(15) மக்களுக்கான சேவையை வேகப்படுத்துவதும் வெளிப்படையாக்குவதும் மின் ஆளுமையின் முக்கிய நோக்கங்களாகும். அழைப்பு மையங்கள் (Call Centres) மக்களுக்குச் சேவையை விரைவில் வழங்க வழிவகை செய்கின்றன. இது செலவைக் குறைக்கின்றது. பயனாளர் உறவை வளர்க்கின்றது. உரிய நேரத்தில் (Right Time) உரிய இடத்தில் (Right Place) அலுவலர்களை விரைவில் பணியில் அமர்த்த வழிவகுக்கின்றது. அரசுச் சேவைகளை மக்களுக்கு விரைவில் வழங்க வழிவகுக்கும் அழைப்பு மையங்களை (Call Centres) ELCOT வாயிலாக அமைக்க தகவல் தொழில்நுட்பத் துறை முயற்சி செய்யும்.

(16) தொடுதிரையைப் (Touch Screen) பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள குறை தீர்ப்போம் என்ற திட்டத்தை ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றிகரமாகச் செயல்படுத்தியதைப்போல பிற சட்டசபைத் தொகுதிகளிலும் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(17) பல அரசுத் துறைகள் மக்களுக்குப் பலவகை சேவைகளைச் செய்கின்றன. ஒவ்வொரு துறையும் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற அதே மக்களிடம் தனித்தனியாகச் செல்கின்றார்கள். அப்படித் தனித்தனியே பெறப்பட்ட தரவுகளைக்

(Data) கொண்டு ஒவ்வொரு துறையும் தங்கள் தரவுத் தளங்களை தனித்தனியே அமைத்துக்கொள்கின்றார்கள். இதனால் ஒரு துறையின் தரவுத் தளம் (Date Base) இன்னொரு துறையின் தரவுத் தளத்தோடு தொடர்பற்றதாக இருக்கின்றது. ஒரு துறையால் மற்ற துறையின் தகவல்களைப் பயன்படுத்த முடிவதில்லை (Inter Operatability of Government Data). ஒரு துறையின் தளத் தரவுகள் புதுப்பிக்கப்படும்போது (Updating) தானாகவே பிற துறையின் தளத் தரவுகள் புதுப்பிக்கப்படுவதில்லை. எனவே மக்களுக்குச் சிறந்த சேவையைச் செய்ய வேண்டி ELCOT நிறுவனத்தின் மூலம் தமிழக அரசின் மையத் தரவுக் கிடங்கு (Centralised Government Data Warehouse) ஒன்றினை தமிழக அரசு அமைக்க உள்ளது. இதன் மூலம் அனைத்துத் துறைகளும் எளிதாக தாவுகளைப் (Data) பரிமாறிக்கொண்டு செயல்பட இயலும்.

(18) கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டது போல, அரசுத் துறைகளின் இணையத் தளத் தாவுகள் ஊாக மக்களைப் போய்ச் சேருகின்ற வகையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் ELCOT நிறுவனமும் சேர்ந்து அரசுத் துறைகளின் இணையத் தளங்களை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழித் தளங்களாக மாற்றி அமைக்க உள்ளன. இது தொடர்பாக, தமிழ் இணையப் பல்கலைக்கழகமும், எல்காட் நிறுவனமும் சேர்ந்து செயல்திட்டத்தை வகுத்தமைத்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஓராண்டோடு நிற்கும் பணி அல்ல. இது ஆண்டுதோறும் தொடர்ந்து நடக்க வேண்டிய பணி. இதனைத் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே இப்பணி இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 1-50

(19) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் மற்றும் பட்டக் கல்விக்கான பாடத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். சான்றிதழ்க் கல்விக்கான 3 நிலைகளில் 2 நிலைகளுக்கான பாடங்கள் முடிக்கப்பட்டு இணையத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சான்றிதழ்க் கல்விக்கான அனைத்துப் பாடங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் இணையத்தில் சேர்க்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத்



தட்டும் ஒலி) மேலும், பட்டப்படிப்பிற்கான 696 பாடங்களில் 120 பாடங்கள் முடிக்கப்பட்டு இணையத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக தமிழ்க் கல்வியை வழங்கும் பணியை ஊக்குவிக்கும் வகையில் எஞ்சியுள்ள பட்டப் படிப்பிற்கான பாடங்களில் 360 பாடங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் இணையத்தில் சேர்க்கப்படும் என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சான்றிதழ் மற்றும் பட்டப் படிப்பிற்கான பாடத் திட்டங்களில் 40 நாடுகளிலிருந்து 2,500 மாணவர்கள் இதுவரை பதிவு செய்து பயின்று வருகின்றனர் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(20) தமிழ்க் கல்வியை இணைய வழி வழங்குவதுடன், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மிகப் பெரிய தமிழ் மின் நூலகம் ஒன்றை உருவாக்கி வருகின்றது. இதுவரை, சங்ககாலம் முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட நூல்களில் 76,192 பக்கங்களைக் கொண்ட 169 நூல்கள், இணையத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன, மின் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இவற்றுள் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி LEXICON தமிழ்-தமிழ் அகரமுதலி, ஆங்கிலத் தமிழ் அகர முதலிகள் ஆகியனவும் அடங்கும். இம்மின் நூலகத்தில் 126-க்கும் மேற்பட்ட சைவ, வைணவக் கோயில்களின் ஒளிக் காட்சிகளும், படக்காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்க் கலைச் சொற்களும் தளத்தில் இடம் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துவரும் பேராதரவோடு மேலும் 54,427 பக்கங்களைக் கொண்ட 180 இலக்கிய நூல்கள் இவ்வாண்டு இந்த மின் நூலகத்தில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகின்றேன். தமிழ் இணையப் பல்கலைக்கழக இணைய தளத்தை 93 நாடுகளிலிருந்து 7,000-க்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர் என்பதையும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். உலகிலேயே தமிழ் மொழிக்குத்தான் இப்படியொரு பெரிய அளவிலான இணைய வழிக் கல்வியும், மின் நூலகமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆதரவோடு அமைக்கப்பட்டு வருகின்றது என்பதை மிகுந்த பெருமிதத்தோடு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(21) பல்வேறுபட்ட பயன்பாட்டிற்கான தமிழ் மென்பொருள் Tamil Software வளர்ச்சியை தமிழக அரசு தொடர்ந்து ஊக்குவிக்கும். 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ் OCR என்றும் தமிழ் எழுத்துரு அறியும் Tamil Optical Character Reader மென்பொருளை வெளியிட்டார்கள். வெவ்வேறு பயன்பாட்டிற்கான தமிழ் மென்பொருள் வளர்ச்சிப் பணியைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மிகுந்த ஊக்கத்துடன் ஒருங்கிணைத்து வருகின்றது. இதுவரை தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியைப் பயன்படுத்தி, தமிழ் தேடு பொறி Tamil Search Engine, தமிழ் வலை உலாளி Tamil Web Browser, தமிழ் சொற்செயலி Tamil Word Processor, தமிழ் எழுத்துரையிலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள் Tamil Text to Speech Synthesiser போன்றவை உருவமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆங்கிலத்திலிருந்து தமிழ்மொழியாக்கத்தினைக் கணிப்பொறியே செய்ய வல்ல Machine Aided Engish-Tamil Translator மென்பொருள் தமிழ் LINUX, தமிழ் ஜாவா, தமிழ் சி போன்ற மென்பொருள்கள் உருவமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல மென்பொருள்களை இவ்வாண்டு இவ்வரசு வெளியிடும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகின்றேன்.

(22) தமிழகத்திற்கு பார்வையாளர்களாகவோ, வணிகத்திற்காகவோ வருகின்ற பயணிகள், வருமுன் குறுகிய காலத்தில் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்கின்ற வகையில் "பயணியர் தமிழ்க் கல்வி"—Tourist Tamil—என்னும் பாடத்திட்டத்தைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இவ்வாண்டு உருவமைத்து வழங்கவுள்ளது.

(23) தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்ய ஏராளமான பணிகளை ஆற்றல்மிகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் இந்த அரசு ஆற்றி வருவதைப் பெருமைக்குரிய இந்த அவை நன்கு அறியும். உலக அளவில் தமிழ்க் கல்வியை இணைய வழி வழங்க, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தனது தொடர்பு மையங்களை Study Centres உலகமெங்கும் அமைத்து, இந்தத் தமிழ்ப் பணியை மேன்மேலும் வளர்க்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பத் துறை தனது இரண்டு அங்கங்களாகிய எல்காட் நிறுவனம் மற்றும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணையோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா



அவர்களின் நோக்கங்களைச் செயல்படுத்தி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டத் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்கச் சொல்லி உத்தரவிட்டதன் அடிப்படையிலே—சட்டத் துறை —
(1) தொலைத் தொடர்பு சட்டமுறையினை அறிமுகப்படுத்துதல் — இம்முறையானது, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் தொடங்கப்படும் தொலைத் தொடர்பு சட்டமுறை மூலமாக அவற்றுடன் தொடர்புடைய சட்டக் கருத்துகள் குறித்து, பொதுமக்கள் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளலாம்; மற்றும் அப்பல்கலைக்கழகம் கணினி பின்னல்வலை வாயிலாக பொதுமக்களுக்கு சட்ட ஆலோசனைகளை எடுத்துரைக்கும்.

(2) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் செங்கல்பட்டில் அல்லது அதற்கு அடுத்துள்ள இடத்தில் புதிய சட்டக் கல்லூரி ஒன்றைத் தொடங்குதல்.

பிற்பகல் 1-55

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், அப்பல்கலைக்கழகத்தில் உறுப்பமைவு கல்லூரியாக, செங்கல்பட்டில் 2003-2004 ஆம் கல்வியாண்டிலிருந்து ஒரு சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கான பல்கலைக்கழகத்தின் கருத்துருவினைப் பரிசீலனை செய்யுமாறு அரசினைக் கோரியுள்ளது.

சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை நிலை உயர்த்தியதன் விளைவாக, சென்னையிலும், அதனை அடுத்தும், மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு B.L. சட்டப் படிப்பினை அளிப்பதற்கான சட்டக் கல்லூரி எதுவும் இல்லை. அரசால் உரிய நிலம் அளிக்கப்படுவதன் மூலம், 2003-2004 ஆம் கல்வியாண்டிலிருந்து தன்னிறைவு அடிப்படையிலே செங்கல்பட்டில் அல்லது அதற்கருகில் சட்டக் கல்லூரி ஒன்று தொடங்க தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர்

சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அப்பல்கலைக்கழகம் அக்கல்லூரியின் உள்கட்டமைப்பிற்காக தன்னுடைய சொந்த வள ஆதாரங்களைக் கொண்டிருக்குமாறு கோரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(3) "பூம்பொழில்" வளாகத்தினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் மற்றும் அதன் உடைமையை உரிமை மாற்றம் செய்தல் மற்றும் சிறப்புப் பள்ளிக்கான புதிய கட்டடத்தைக் கட்டுதல்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய புதிய கருத்தினை நடைமுறைப்படுத்தும்பொருட்டு, சட்டத்தில் சிறப்புப்பள்ளி ஒன்று 2002-2003 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்டு, அது மேற்சொன்ன பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்ற எண் 5, கிரீன்வேஸ் சாலை, சென்னை 28-ல் செயல்பட்டு வருகிறது. சிறப்புப் பள்ளிக்காக புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன. மேற்சொன்ன பூம்பொழில் வளாகத்திலுள்ள நிலமும் கட்டடமும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அதன் உடைமை உரிமை மாற்றம் செய்யப்படும். சிறப்புப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ.55 இலட்சம் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) கணினிமயமாக்குதல்: சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள 5 அரசு சட்டக் கல்லூரிகள், சட்டக் கல்லூரி இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டத் துறை ஆகியவை கணினிமயமாக்கப்பட்டு, கணினி பின்னல்வலை மூலமாக ஒருங்கிணைக்கப்படும். மேலும், தொடர்புடைய அலுவலர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் தீவிரவாதத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்து, சாதி, மத, இன மோதல்கள் அற்ற மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியும், உலகத்திற்கு வள்ளுவன் தந்த வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்ற பாரதியின் கூற்றுக்கு ஏற்பவும், அந்த வான்புகழ் வள்ளுவன் திருக்குறள் அறிவுரையை சிரமேற்கொண்டு, ஆட்சியின் இலக்கணம் குறித்து, அதற்கேற்றவாறு இம்மியும் பிறழாமல் ஆட்சி புரிகின்ற நம் அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கி, உரையை நிறைவு செய்து, கோரிக்கை எண் 3, நீதி நிருவாகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய 199 வெட்டுத் தீர்மானங்களையும், கோரிக்கை எண் 30, தகவல் தொழில்நுட்பவியல் துறையில் 103 வெட்டுத் தீர்மானங்களையும், கோரிக்கை எண் 32, சட்டத் துறையில் 77 வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; நிதி நிலைமைக்கு ஏற்ப நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல முடிவை வெளியிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், என்ன?

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலே வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, நாங்குனேரியிலே ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும் என்கின்ற ஒரு திட்டம் இருந்ததே, அது எப்படி இருக்கிறது? அதற்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே அறிவிப்பைச் செய்தார்கள். ஆனால் அந்த அறிவிப்பு காற்றோடு போய்விட்ட நிலையிலே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல், நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறையிலே அதிகமான அளவிற்கு வேலைவாய்ப்புகள் பெருகக்கூடிய அளவிற்கு நல்ல நிலைமைகள் இருக்கின்றன. ஏனென்று சொன்னால், இங்கே நல்ல ஆங்கிலப் புலமை பெற்றவர்கள், நல்ல இயற்கையாக நம்முடைய மாநிலம் அமையப் பெற்றிருக்கின்ற சூழ்நிலை, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழில் செய்ய வருகின்றவர்களை எல்லாம் இரத்தினக் கம்பளம் போட்டு வரவேற்கின்ற ஒரு நிலையிலே, நிச்சயமாக தொழிற்பேட்டைகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கின்ற ஒரு கருத்துரு அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை அமைப்பதன் மூலம்—Business Process Outsourcing - BPO என்று சொன்னால், ஏறக்குறைய ஒரு இலட்சம் பேருக்கு ஆயிரம் நாளிலே வேலை கொடுக்கக்கூடிய மிகப் பெரிய உன்னதமான ஒரு திட்டம்; அதிலே, வருங்காலங்களிலே எல்லாம்—அமெரிக்காவிலே ஒரு நிறுவனம் இருக்கிறது என்றால், அந்த நிறுவனத்தினுடைய அன்றாட நடவடிக்கைகளை—நாம் அங்கே சென்று வேலை செய்ய வேண்டிய அவசியமே கிடையாது; இங்கே இருந்துகொண்டு நாம் கம்ப்யூட்டர்கள் மூலமாகச் செய்து, இங்கேயிருந்து அவர்களுக்குத் தேவையான Data-க்களை அனுப்பக்கூடிய அளவிற்கு நல்ல வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் அமல்படுத்துவதன் மூலம் நிச்சயமாக தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையிலே அதிகமான அளவிற்கு வேலைவாய்ப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்குவார்கள் என்று சொல்லி அமர்கின்றேன்.

• பிற்பகல் 2-00

### கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 3-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.144,47,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 30-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,36,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 32–சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 32-சட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 32-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,07,76,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 5. அறிவிப்பு

### தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-4-2003 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*70.* *2001-2002* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *323(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*153.* மானியக் கோரிக்கை எண் *3* - நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003-2004*. (தமிழ், ஆங்கிலம்.)

*154.* மானியக் கோரிக்கை எண் *32* - சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003-2004*. (தமிழ், ஆங்கிலம்)

*155.* மானியக் கோரிக்கை எண் *30* - தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003-2004*. (தமிழ், ஆங்கிலம்)

*156.* தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய செயல் ஆய்வுரை, *2002-2003*. (தமிழ், ஆங்கிலம்)

*157.* முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். *(2003-2004)* (தமிழ், ஆங்கிலம்)

*158.* வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். *(2003-2004)* (தமிழ்)



## இணைப்பு-I

*(306ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**1. முன்னுரை**

"நீதி நிர்வாகமே ஒரு நாட்டின் உறுதியான தூண்" என்று ஜார்ஜ் வாஷிங்டன் கூறியுள்ளார். "உண்மை செயல்படும் நிலையே நீதி" என்று பெஞ்சமின் டிஸ்ரேலி கூறியுள்ளார். வழக்காடும் மக்களுக்கு நீதி வழங்குவதிலும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதிலும் தமிழக நீதித் துறை முக்கிய பங்காற்றி வருகிறது. நாடு விடுதலை அடைந்த பின்பு நீதி நிர்வாக அமைப்பு சுதந்திரமாகச் செயல்படும் வகையில் முழுமையான வளர்ச்சி அடைந்துள்ளது. அதற்குத் தேவையான சட்டப் பாதுகாப்பை இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. நீதித் துறையின் சுதந்திரத் தன்மையைப் பேணுவதில் இந்த அரசு எப்போதுமே முனைப்பாகச் செயல்பட்டு அதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. வழக்குத் தொடர்கின்ற பொதுமக்களுக்கு விரைவான நீதி கிடைக்க வேண்டும் என்ற இலக்கினை எய்தும் பொருட்டு அதற்குத் தேவையான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் பிற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

**2. தமிழ்நாட்டில் நீதிமன்றங்களின் படிநிலை மற்றும் கட்டமைப்பு**

தமிழகத்தில் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

புதுடில்லியில் உள்ள உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கும் தலைமை நீதிமன்றமாகும்.

**மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு பின்வருமாறு:-**
**உயர் நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

**இத்துடன் பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/ அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-**

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.
2. அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை.
3. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்
4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.
5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்.
6. குடிமையியல் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.



7. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.
8. 'தடா' சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்.
9. தமிழ்நாடு நிதி வைப்பாளர் (நிதி நிறுவனங்களில்) நலன் காக்கும் சட்டம் 1997-ன் கீழான வழக்குகளை விசாரிக்க சென்னையில் தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம்.
10. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.
11. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts)
12. சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.
13. மதுரையில் உள்ள சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.
14. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.
15. விரைவு நீதிமன்றங்கள்.

தமிழ்நாட்டில் பதவித்தரம் வாரியாக தற்போதுள்ள நீதிபதிகள் எண்ணிக்கை குறித்த விவரம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. செலவின வகைப்பாடு

நீதி நிருவாகம் தொடர்பான செலவினங்கள் முறையே 'சாட்டிய செலவினம்' மற்றும் 'அனுமதிக்கப்பட்டவை' என்று இருவிதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**சாட்டிய செலவினங்கள்**

உயர் நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்றப் பதிவாளர்கள், அசல் மேல் முறையீட்டுப் பிரிவுகள், மொழி பெயர்ப்பு அச்சிடுதல் துறை,

சட்ட நிருபர்கள் மற்றும் பணியாளரமைப்பு, பாண்டிச்சேரி அதிகார வரம்பில் வரும் வழக்குகளை கவனிக்கும் உதவிப் பதிவாளர் மற்றும் அவருக்கான பணியாளர்கள்.

**அனுமதிக்கப்பட்ட செலவினங்கள்**

1. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் அமர்வு நீதிமன்றங்கள்.
2. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.
3. பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை.
4. சார்நிலைக் குற்றவியல் நீதிமன்றங்கள்.
5. அரசு தலைமைச் சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர், சென்னை.
6. அரசு சட்ட அறிவுரையாளர்களும் ஆலோசகர்களும்.
7. சிறப்பு நீதிமன்றங்கள்.
8. பதிப்பாசிரியர் மற்றும் பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் பதிப்பகம், சென்னை.

## 4. நிதி ஒதுக்கீடு

நீதித் துறை சுதந்திரமாகவும் திறமையாகவும் செயல்படுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து கொடுப்பது மாநில அரசின் தலையாய கடமையாக நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள் வரையறுத்துள்ளனர். அதன் அடிப்படையில் அரசு, நீதித் துறைக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது. அந்த வகையில் 2000-2001 ஆம் ஆண்டு ரூ. 146.36 கோடி என்ற அளவில் இருந்த நிதி ஒதுக்கீடு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 170.68 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



ஆண்டுவாரியாக செலவினம் மற்றும் அபராதம் முதலியவை மூலம் வரவுகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

**செலவினங்கள்**

| ஆண்டு | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 2000-2001 | 14,635.89 |
| 2001-2002 | 15,145.33 |
| 2002-2003 (திருத்திய மதிப்பீடு) | 16,672.54 |
| 2003-2004 (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) | 17,067.68 |

**வரவுகள்.**

| | 0070. ஏனைய நிருவாகப் பணிகள் -01. நீதி நிருவாகம் | 0030. முத்திரைகள் (நீதி நிருவாகம்) |
|---|---|---|
| ஆண்டு | (ரூபாய் இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சத்தில்) |
| 2000-2001 | 2160.40 | 4224.22 |
| 2001-2002 | 2547.32 | 5935.03 |
| 2002-2003 | 3027.22 | 5239.77 |
| 2003-2004 | 3317.04 | 7100.00 |

## 5. நீதிமன்றங்களின் அதிகார எல்லை

### i) உரிமையியல் நீதிமன்றங்கள்

சென்னை உரிமையியல் நீதிமன்றச் சட்டம் 1892-ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார எல்லை நிர்ணயிக்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 11

மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகரம் முழுவதும் பரவியுள்ளது. மாநகர உரிமையியல் நீதிமன்றம் ரூ. 10,00,000/- வரை மதிப்புள்ள வழக்குகளையும் ரூ. 3,00,000/- வரை மதிப்புள்ள மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் உடையது. மேலும், மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை நகருக்கான அமர்வு நீதிமன்றமாகவும் செயல்படுகிறது. இதன் தலைமை நீதிபதிக்கும் இதர நீதிபதிகளுக்கும் 1882ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம் 1873-ன்கீழ் சென்னை நீங்கலாக உள்ள இதர பகுதிகளில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார எல்லை நிர்ணயிக்கப்படுகிறது.

மாவட்ட நீதிபதிகள் அந்தந்தப் பகுதிகளுக்கான அமர்வு நீதிபதிகள் ஆவார்கள். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில சிறப்புச் சட்டங்களின்கீழ், சிறப்பு நடுவர்களாகவும் அவர்கள் செயல்படுகின்றனர். இவர்கள் ரூ. 3 இலட்சம் வரை மதிப்புள்ள உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்து வருகின்றனர். உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) வரையறை இல்லாத தொகை குறித்த அசல் வழக்குகளை விசாரித்து வருகின்றனர். இவர்களுடைய அதிகார வரம்பு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தங்களுடைய அதிகாரப் பகுதியின்கீழ் பணிபுரியும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளின் ஆணைகளுக்கு எதிராக தொடரப்படும் மேல் முறையீடுகளைப் பொறுத்தவரை ரூ. 30,000/- வரை மதிப்புள்ள மேல் முறையீட்டு மனுக்களை விசாரிக்கின்றனர். இவர்கள் அமர்வு நீதிமன்ற உதவி நீதிபதியாகவும் செயல்படுகின்றனர்.

உரிமையியல் நீதிபதிகள் (இளநிலைப் பிரிவு) ரூ. 30,000/- வரையிலான மதிப்புடைய சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கின்றனர். ரூ. 20,000/- வரை மதிப்புடைய சிறு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்.

### ii) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார எல்லை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் வட்டங்கள் வரையும் சார்பு



2003 ஏப்ரல் 11]

நீதிமன்றங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களின்மீது அதிகார வரம்பு கொண்டதாகவும் உள்ளன. மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களின்மீது அதிகார வரம்பு கொண்டதாக உள்ளன. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றனர்.

### iii) குற்றவியல் நீதிமன்றங்கள்

சென்னை மாநகரில் உள்ள பெருநகர குற்றவியல் நடுவர்களின் அதிகார வரம்பு காவல் நிலையங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மாவட்டங்களில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர்கள் அவரவர் மாவட்டங்களில் தங்களின்கீழ் உள்ள சார்நிலைக் குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். தங்களுடைய நிருவாகப் பணிகளுடன் குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு 1973-ன்கீழ் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளால் கொடுக்கப்படுகின்ற வழக்குகளை நடத்த மேற்படி நடைமுறை விதித்தொகுப்பின்கீழ் அதிகாரம் கொண்டவர்களாயுள்ளனர். குற்றவியல் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்பிற்கு உட்பட்ட வட்டத்தில் (Taluk) எழும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றனர்.

### iv) உயர் நீதிமன்றம், சென்னை

உயர் நீதிமன்றம், உரிமையியல் மேல்முறையீட்டு மனுக்களையும் அசல் வழக்குகளையும் விசாரணை செய்யும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல்முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. அசல் வழக்குகளைப் பொறுத்தவரை, சென்னை மாநகரத்திற்குள் எழும் ரூ. 10,00,000/-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. சென்னை உயர் நீதிமன்றம் மத்திய ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரியின்மீதும் அதிகார வரம்பு கொண்டதாக உள்ளது.

### 6) நீதித் துறையின் பயிற்சிக்கழகம்

தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, சென்னையில் உள்ள அரசுக்குச் சொந்தமான 'மல்லிகை' கட்டடத்தில்

செயல்பட்டு வருகிறது. இதற்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 4.50 கோடி செலவினத்திற்கு அரசு இசைவளித்துள்ளது. இக்கழகம் மாவட்ட நீதிபதிகள், சார்பு நீதிபதிகள், மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் ஆகியோருக்கு புத்தாக்கப் பயிற்சி (Refresher Course) மற்றும் புத்தறிவுச் செயல்முறைத் திட்டம் ஆகியவற்றில் (Orientation Programmes) பயிற்சி வழங்குகிறது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாவட்ட நீதிபதிகளுக்கு பயிற்சியையும் வழங்குகிறது. தமிழ்நாடு நீதித் துறை பயிற்சிக் கழகத்தின் உபயோகத்திற்காக ரூ. 6,87,146/- செலவில் ஸ்வராஜ் மாசிடா எஸ்.டி.டி. பேருந்து ஒன்றை வாங்க அரசு இசைவளித்துள்ளது. 2002-2003ஆம் ஆண்டில் பயிற்சி செயல்முறைத் திட்டங்கள் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வழங்கல் முதலிய செலவினத்திற்காக ரூ. 5 இலட்சத்திற்கு 2002ஆம் ஆண்டு ஜூலை திங்களில் அரசு இசைவளித்துள்ளது.

**7. நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்.**

நீதித் துறைக்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை (Infrastructural facilities) செய்து தருவதில் அரசு எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ளது. நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றை மைய அரசு வழங்கும் 50 விழுக்காடு நிதி உதவியுடன் கட்டுவதற்கு 31-12-2001 வரை ரூ. 116.44 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. பழுதுபட்ட நிலையில் உள்ள நீதிமன்றக் கட்டடங்களுக்குப் பதிலாக ரூ. 140 கோடி செலவில் 74 புதிய கட்டுமானப் பணிகள் அடங்கிய விரிவான முன்னுரிமைப் பட்டியல் ஒன்றை சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பியுள்ளது. இதனை மைய அரசு உதவியுடன் மூன்றாண்டு கால அளவில் செயல்படுத்த இவ்வரசு முடிவெடுத்து இம்முன்னுரிமைப் பட்டியலை மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது.

**8. நெடுநாட்களாக நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண்பதில் விரைவு நீதி மன்றங்களின் பங்கு**

சென்னை உயர் நீதிமன்றமும் சார்நிலை நீதிமன்றங்களும் செம்மையாகச் செயல்பட்டு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தி வருகின்றன. 31-12-2002 வரை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம் இணைப்பு-II-ல் கொடுக்கப்பட்டுள்ளது. பதினொன்றாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள



வழக்குகளுக்கு, குறிப்பாக அமர்வு நீதிமன்ற வழக்குகள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையாய் உள்ள குற்றவியல் வழக்குகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன், மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இவ்விரைவு நீதிமன்றங்களுக்கு 2004-2005 வரையான கால அளவிற்கு ரூபாய் 14.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரைவு நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 30-9-2002 வரை விசாரித்துத் தீர்வு கண்ட வழக்குகளின் விவரம் வருமாறு:-

| | | நிலுவையில் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 30-6-2002 வரை | 18,262 | 6,150 |
| (ii) | ஜூலை 2002 | 19,667 | 2,110 |
| (iii) | ஆகஸ்ட் 2002 | 20,407 | 1,430 |
| (iv) | செப்டம்பர் 2002 | 23,021 | 2,376 |
| | மொத்தம் | 81,357 | 12,066 |

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பழைய வழக்குகளுக்குத் தீர்வு காண்பதில் விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு பாராட்டுக்குரியதாகும்.

**9. கடந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட புதிய நீதிமன்றங்கள்**

**(i) மகளிர் நீதிமன்றங்கள்**

2002-2003ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டசபையில் சமர்ப்பித்தபோது பெண்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் அமைக்கப்படும் என நிதி அமைச்சர்

அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவிப்பின்படி மாவட்ட நீதிபதி தாத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு இடங்களில் தலா ஒரு மகளிர் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டது. சென்னையில் மகளிர் நீதிமன்றம் 5-7-2002 அன்று முதலும் கோயம்புத்தூரில் மகளிர் நீதிமன்றம் 6-7-2002 அன்று முதலும் செயல்படத் தொடங்கின. இந்நீதிமன்றங்களை நிறுவியதால் அரசுக்குக் கூடுதலாக ரூ. 15,16,220/- தொடரினச் செலவும் ரூ. 10,16,700/-தொடரா இனச் செலவும் ஏற்பட்டுள்ளது.

### (ii) இதர நீதிமன்றங்கள்

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் கடலூரில் ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றத்தையும், சிதம்பரம் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் தலா ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தினையும் 10-1-2002 அன்று தொடக்கி வைத்தார். இந்நீதிமன்றங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் உள்ள II-வது குற்றவியல நடுவர் நீதிமன்றத்தை சங்கராபுரத்திற்கு மாற்றி அங்கு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தைத் தோற்றுவிக்க அரசு இசைவளித்துள்ளது. இந்நீதிமன்றம் தற்போது சங்கராபுரத்தில் செயல்பட்டு வருகின்றது.

## 10. மதுரையில் உயர் நீதிமன்றத்தின் ஆயம் அமைத்தல்

உயர் நீதிமன்றக் கிளையை மதுரையில் தொடங்கும் அரசின் முடிவு மாநிலத்தின் தென் பகுதியான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த வழக்காடும் பொதுமக்களுக்கு ஒரு சிறந்த வரப்பிரசாதம் ஆகும். மதுரையில் நிறுவப்படும் உயர் நீதிமன்றக் கிளைக்குத் தேவையான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு இதுவரை ரூ. 14.31 கோடி நிதியை வழங்கியுள்ளது. கட்டட கட்டுமானப் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது. மேலும், அறைகலன்கள் வாங்கவும், குளிர்பதன வசதி செய்தல், ஒப்பனை உட்கூரை (False Ceiling) மற்றும் சுற்றுச் சுவர் அமைத்தல் முதலியனவற்றிற்காக அரசு கூடுதலாக ரூ. 768.13 இலட்சம் நிதியை வழங்கியுள்ளது. தற்போது நடைபெற்று வரும் இப்பணிகள் விரைவில் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## 11. நீதிமன்றங்களை கணினிமயமாக்கல்

### (i) உயர் நீதிமன்றம், சென்னை

வழக்குகளை வகைப்படுத்துதல் மற்றும் தீர்ப்புகள்பற்றி தகவலறியும் முறைகள் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. ஜாமீன் மனுக்கள் மீதான ஆணைகள், முன் ஜாமீன் மனுக்கள் மீதான ஆணைகள் மற்றும் இடைக்கால ஆணைகள் (Interim Orders) ஆகிய அனைத்தும் கணினிகள் மூலமாகவே வழங்கப்படுகின்றன. ரூ. 15,72,100/- மதிப்பீட்டில் 40 கணினிகள் கொள்முதல் செய்து மாண்புமிகு நீதிபதிகளின் இல்லங்களில் தனிப்பயன் கணினிகளாக நிறுவி அவற்றிற்கு இணைய தள வசதியும் (Internet Facilities) செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 63 கணினிகள் பிரிண்டர்ஸ் மற்றும் புறச்சாதனங்களுடன் (Peripherals) கொள்முதல் செய்யப்பட்டு மாண்புமிகு நீதிபதிகளின் நேர்முக உதவியாளர்களின் பயன்பாட்டிற்காக சென்னை, உயர் நீதிமன்றத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதில் தீர்ப்புகள் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடும பொதுமக்களுக்கு (Litigant Public) வழக்குகள் மீதான இறுதி ஆணைகள் மற்றும் இறுதித் தீர்ப்புகளின் நகல்கள் காலதாமதமின்றி உடனடியாக வழங்கப்படுகின்றன. சென்னை, உயர் நீதிமன்றத்தினைக் கணினிமயமாக்கும் பணிக்கென இதுவரை மொத்தம் ரூ. 1.09 கோடி நிதியை அரசு வழங்கியுள்ளது. மேலும் சென்னை, உயர் நீதிமன்றத்தில் கணினி தகவல் மையம் (Facilitation Counter) திறப்பதற்கு அரசு ரூ. 32.90 இலட்சங்களை வழங்கியுள்ளது.

### (ii) சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள்

சென்னையில் இயங்கும் அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களையும் ரூ. 2.44 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இப்பணிக்காக ரூ. 82.00 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் சென்னை உரிமையியல் நீதிமன்றங்கள் கணினிமயமாக்கப்படுகின்றன. இப்பணியின் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்:-

(1) வழக்குகள் வகைப்படுத்துதல்

(2) சான்றிட்ட படிகள் பெறுதல்

(3) தகவலறியும் முறைகள் ஏற்படுத்துதல்

(4) நீதித் துறையின் அடிப்படை விவரங்கள் உருவாக்குதல்

(5) நீதித் துறை அதிகாரிகளின் பணி பற்றிய விவரங்களைப் பதிவு செய்தல்

(6) கோப்புகள் கண்காணிக்கும் முறை

மேற்கூறிய பணிகள் நிறைவு பெற்றதும், இரண்டாம் கட்ட திட்டப் பணிகள் செயலாக்கம் குறித்து ஆலோசிக்கப்படும்.

**(iii) உயர் நீதிமன்ற ஆயம், மதுரை.**

மதுரை உயர் நீதிமன்றக் கிளையினை ரூ. 2.54 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்க அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ரூ. 18,86,186/- செலவினத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**12. புதிய முயற்சிகள்**

உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க சார்நிலை நீதிபதிகளின் ஊதிய விகிதத்தினை முதலாவது தேசிய நீதித் துறை ஊதியக் குழு (First National Judicial Pay Commission) பரிந்துரைத்திருந்த விகிதத்தில் 1-7-1996 முதல் முன்தேதியிட்டு உயர்த்தி நிர்ணயிக்க அரசு முடிவு செய்தது. அதன்படி அரசுக்கு தற்போதுள்ள சிரமமான நிதி நிலைக்கிடையேயும் சார்நிலை நீதிபதிகளின் ஊதிய விகிதத்தினை உயர்த்தி நிர்ணயித்து உரிய ஆணை 31-3-2003 அன்று வெளியிடப்பட்டது.

அஞ்சலகம், கணினிப் பிரிவு மற்றும் நூலகம் ஆகியவற்றிற்கு போதிய இட வசதி அளிக்கும்பொருட்டு இரு மாடிக் கட்டடம் ஒன்றினை ரூ. 1 கோடி செலவில் உயர் நீதிமன்ற வளாகத்தில் கட்ட அனுமதி அளித்து 2001ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி தற்போது கட்டப்பட்டு வரும் கட்டடம் போதுமானதல்ல என்று உணரப்பட்டதால் ரூ. 152 இலட்சம் செலவினத்தில் நூலகத்திற்குக் கூடுதலாக ஒரு கட்டடம் கட்ட அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2002-2003ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்திற்குத் தேவைப்படும் சட்ட நூல்கள் மற்றும் இதழ்கள் வழங்க ரூ. 30.00 இலட்சம் செலவினத்திற்கு



அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதுபோன்று 2002-2003 ஆம் ஆண்டு சார்பு நீதிமன்றங்களுக்குத் தேவையான சட்ட நூல்கள் மற்றும் இதழ்களை வழங்க ரூ. 35.00 இலட்சம் செலவினத்திற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள இலவச சட்டப் பணிகள் ஆணையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தல் வேண்டும் என்றும் அரசின் முடிவினைச் செயலாக்கும் நோக்குடன் ரூ. 1.85 கோடி செலவில் இலவச சட்டப் பணிகள் ஆணையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இவை தவிர, கீழ்க்கண்ட புதிய பணிகளை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி - II திட்டத்தின்கீழ் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது:-

**2003-2004ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்**

| வரிசை எண். | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா இனச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | மதுரை நீதித் துறை மாவட்டம், மதுரை தேனி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது - தேனி மாவட்டத்தில் புதிதாக மாவட்ட நீதிமன்றம், கூடுதல் நீதிமன்றம் மற்றும் தலைமை நடுவர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களைத் தோற்றுவித்தல். | 85.07 | 38.66 | 123.73 |

| வரிசை எண் | பணியின் பெயர் | தொடரினச் செலவு | தொடரா இனச் செலவு | மொத்தம். |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2. | தஞ்சாவூர், தூத்துக்குடி, கடலூர், வேலூர், திருநெல்வேலி, மதுரை, நாகப்பட்டினம் மற்றும் தருமபுரி ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள 34 நீதித்துறை அலுவலர்களின் குடியிருப்புகள் மற்றும் சென்னை எழும்பூரில் உள்ள பெருநகர முதன்மை நீதிமன்றம் ஆகியவற்றில் ஒரு கட்ட மின் இணைப்பை மூன்று கட்ட மின் இணைப்பாக மாற்றுதல். | - | 5.69 | 5.69 |
| 3. | கட்டடம் - நாகப்பட்டினம் மாவட்டம் - மாவட்ட நீதிமன்றத்திற்கு மின் ஆக்கி வசதி அளித்தல். | - | 0.53 | 0.53 |
| 4. | நாகப்பட்டினம் மாவட்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம், மன்னார்குடி - மேல்தளத்தைப் புதுப்பித்தல். | - | 5.00 | 5.00 |
| | மொத்தம் | 85.07 | 49.88 | 134.95 |



## 13. பிற சிறப்பம்சங்கள்

### (i) தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987 (சட்டம் 59/1994-ல் திருத்தப்பட்டபடி) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழு ஆகியவற்றைச் செயற்படுத்த வகை செய்கிறது.

மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் அலுவல்கள்:-

மாநிலச் சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள் பின்வருமாறு:—

(1) மத்திய ஆணைக் குழுவின் கொள்கைகள் மற்றும் உத்தரவிற்குச் செயல்வடிவம் கொடுத்தல்.

(2) இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள அளவு கோல்களை நிறைவு செய்பவர்களுக்குச் சட்டப் பணிகள் அளித்தல்.

(3) மக்கள் நீதிமன்றங்களை (Lok Adalat) நடத்துதல். (உயர் நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றங்கள் உட்பட)

(4) தடுப்பு வகையான மற்றும் உத்திகளுடன்கூடிய சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(5) மாநில ஆணைக் குழு, மத்திய அதிகார ஆணைக் குழுவுடன் கலந்தாலோசித்து, விதிமுறைகள் மூலம் நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவற்றின் அலுவல்கள்.

ஒவ்வொரு மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் அலுவல்கள் வருமாறு:

(1) மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு அவ்வப்போது ஒதுக்கக்கூடிய மாவட்டத்தில் உள்ள மாநில ஆணைக் குழுவின் அத்தகைய அலுவல்களை ஆற்றுதல்.

[2003 ஏப்ரல் 11

2) வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

3) மாவட்டங்களுக்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைக்க ஏற்பாடு செய்தல்

4) விதிமுறைகள் மூலம் மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**உயர் நீதிமன்ற சட்டப் பணிக் குழுவின் அலுவல்கள்**

1) உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதனை எதிர்நோக்கி உள்ளவர்களுக்கு சட்ட ஆலோசனை அளித்தல்.

2) விதிமுறைகள் மூலம் மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக் குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

**மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)**

மாநில மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியன மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.

அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு அல்லது

ஆ) எந்தப் பகுதிக்கான மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள், சம்பந்தப்பட்ட இனங்களில் மக்கள் நீதிமன்றங்களை நடத்தி தாவாவுக்கு உட்பட்ட இரு பிரிவினருக்கிடையே சமாசம் செய்து வைக்கும் அதிகாரத்தை இவை பெற்றுள்ளன.

இந்த மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்பினை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

31-12-2002 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 10,255 ஆகும்.



2003 ஏப்ரல் 11]

31-12-2002 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,25,698 ஆகும்.

இவற்றில் 1,06,378 வழக்குகள் விபத்துகள் சம்பந்தப்பட்டவை ஆகும்.

ஊரகப் பகுதிகளில் கால முறைப்படி சட்ட உதவி—சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலச் சட்டப் பணிக் குழு சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒரு பழைய கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த மாநிலச் சட்டப் பணிகள் குழுவிற்கான புதிய கட்டடத்தினை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கட்டுவதற்கு அரசு ரூ.1.85 கோடி அனுமதித்துள்ளது.

**(ii) குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் :**

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் குற்றவியல் வழக்குகளைத் திறம்பட நடத்தி நிர்வகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிக்கிறது. குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் இவ்வியக்ககத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்ககத்தின் கீழ் இயங்கும் பிரிவுத் தலைவர்கள் இவருக்கு நிருவாகத்தில் உதவி புரிகின்றனர். கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்திலுள்ள இந்திய காவல் பணி அலுவலர் ஒருவர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தில் 11 குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர்கள் மற்றும் 11 குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்களும் உள்ளனர். இவர்கள் தங்களின்கீழ் பணியாற்றும் அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்களின் பணியினை மேற்பார்வையிடுகின்றனர். இவர்கள் பல்வேறு வழக்குகள் பற்றிய சட்ட ஆலோசனை அளிப்பதுடன் காவல் துறை சம்பந்தப்பட்ட வழக்குகளின் வரைவு குற்றப் பத்திரிகை தயாரித்துக் கொடுப்பதுடன் நீதித் துறைக்கும் காவல் துறைக்கும் தொடர்பு அலுவலர்களாகச் செயல்படுகின்றனர்.

அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள், ஒப்பந்த காலப் பணி அடிப்படையில் அரசால்

நியமிக்கப்பட்டு மாவட்டங்களிலுள்ள மாவட்டக் கூடுதல் குற்றவியல் நீதிமன்றங்கள், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் அரசு சார்பாக வழக்குகளை நடத்துகின்றனர். 31-12-2002 வரை இந்த இயக்ககத்தால் தீர்வு காணப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1,36,097 ஆகும்.

### (iii) சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர்:

சென்னையில் உள்ள அரசுத் தலைமை சொத்தாட்சியர்—பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணை தலைமை சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமை சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகை பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள்.

### (iv) அரசு வழக்குகள் துறை:

தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞரைத் துறைத் தலைவராகக் கொண்டு தலைமை வழக்கறிஞர், கூடுதல் தலைமை வழக்கறிஞர், அரசு உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர் ஆகியோரின் அலுவலகங்களை உள்ளடக்கிய அரசு வழக்குகள் துறை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. நான்கு சட்ட அலுவலகங்களும் தனித் தனிப் பிரிவுகளாகச் செயல்படுகின்றன. அரசின் தலைமை வழக்கறிஞர் உரிமையியல் வழக்கறிஞர், முறையே தத்தம் பிரிவுகளுக்கான நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்களாகச் செயல்படுவர். உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்களை நியமனம் செய்வதைத் தவிர மேற்சொன்ன துறையானது தலைமைச் செயலகத்தில் உள்ள உள் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.



### 14) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்முறைப்படுத்துதல்

வங்கி சாரா நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்கள் தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை முதலீடு செய்து இழக்க நேரிடுவதைத் தடுத்து அவர்தம் நலனைப் பாதுகாக்க, நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான் முதன் முதலில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் திருத்த அவசாச் சட்டத்தினால் எழக்கூடிய வழக்குகளைப் பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 விசாரித்து வருகிறது. தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்சொன்ன பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவிடமிருந்து பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் வைப்பீட்டாளர்களுக்கு தங்கள் பணம் திரும்பக் கிடைக்கும் வகையில் பணத்தைத் திரும்பச் செலுத்தத் தவறிய நிதிநிறுவனங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய இடைக்கால பற்றுகை உத்தரவுகளை அரசு பிறப்பித்து வருகிறது. கடந்த 31-12-2002 வரையில், 140 நிதி நிறுவனங்களின் சொத்துக்களை கீழ்க்கண்ட இரு சட்டங்களின்கீழ் முடக்கி அரசு இடைக்கால பற்றுகை உத்தரவுகளை கீழ்க்கண்டவாறு பிறப்பித்துள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 1) | 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் | - | 105 |
| 2) | 1994ஆம் ஆண்டு குற்றவியல் திருத்த அவசரச் சட்டத்தின்கீழ் | - | 35 |
| | மொத்தம் | - | 140 |

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு 2 மேற்கொண்ட புலனாய்வின்படி 11,92,712 வைப்பீட்டாளர்கள் சுமார் ரூ. 1991.53 கோடி பணத்தை மேற்கண்ட வங்கிசாரா நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. தற்போது 7.5 லட்சம் வைப்பீட்டாளர்களுக்கு ரூ.129.15 கோடி பணம் திருப்பத் தரப்பட்டுள்ளது மேலும் சுமார் ரூ. 1588.78 கோடி மதிப்புள்ள சொத்துக்கள்

கையகப்படுத்துவதற்காகக் கண்டறியப்பட்டு உள்ளன. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு 2-ல் தற்போது தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 717 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 15 வழக்குகளில் தனி நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு அவ்வழக்குகள் தண்டனையில் முடிவுற்றுள்ளன. தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட இடைக்கால உத்தரவுகளில், தகுதி வாய்ந்த அதிகாரி மற்றும் கூடுதல் நில நிர்வாக ஆணையரால் அச்சொத்துக்களை முழுமையாகப் பற்றுகை செய்யக் கோரி 95 அசல் மனுக்கள் தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயல்படுத்தும்போது தற்போதைய சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளன என்று புலனாய்வு அதிகாரி மற்றும் செயலாக்கத் துறையினர் ஆகிய இருவராலும் அனுபவத்தில் அறியப்பட்டுள்ளன. இதனால் வைப்பீட்டாளர்களுக்கு வைப்பீட்டுத் தொகையினை திரும்பப் பெற்று அளிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே வைப்பீட்டாளர்களின் நலன் கருதி இச்சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**15) முடிவுரை:**

தமிழ்நாட்டில் நீதி நிருவாகம் நன்கு அமைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகளும் போதுமானதாக உள்ளன. இருப்பினும் நீதிமன்றத்தை நாடிவரும் வழக்காடும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீதி நிர்வாகத்தின் தேவைகளும் அதிகரித்து வருவதையும் அரசு உணர்ந்துள்ளது. ஆகவே நீதித் துறை சுதந்திரமாக, தன்னாட்சி பெற்றதாக அமையவும், பொதுமக்கள் குறைகளை நீதிமன்றங்கள் விரைந்து தீர்ப்பதற்கும் உரிய சூழலை உருவாக்கும் விதத்தில் நீதிமன்றங்களுக்குத் தேவையான வசதிகளை அரசு செய்து தரும்.



## இணைப்பு-I

**தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள்/நடுவர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்.**

| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் | குற்றவியல் நடுவர் பதவித் தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | சென்னை | 30 | - | 33 | - | 26 | - |
| 2. | செங்கல்பட்டு | 1 | 1 | 7 | 10 | 5 | 13 |
| 3. | கோயம்புத்தூர் | 2 | 1 | 9** | 7 | 4 | 14 |
| 4. | கடலூர் | 1 | 1 | 7 | 6 | 6 | 8 |
| 5. | தருமபுரி | 2 | 2 | 4 | 3 | 6 | 5 |
| 6. | திண்டுக்கல் | 1 | 1 | 3 | 5 | 2 | 5 |
| 7. | ஈரோடு | 2 | 1 | 8 | 10 | 2 | 9 |
| 8. | கன்னியாகுமரி | 1 | 1 | 5 | 9 | 1 | 7 |
| 9. | கரூர் | 1 | 1 | 2 | 3 | - | 4 |
| 10. | மதுரை | 2 | 1 | 9** | 7 | 3 | 12 |
| 11. | நாகப்பட்டினம் | 1 | 1 | 5 | 8 | - | 9 |

| வரிசை எண் (1) | மாவட்டங்கள் (2) | மாவட்ட நீதிபதி பதவித் தரம் (3) | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் பதவித் தரம் (4) | சார்நிலை நீதிபதி பதவித் தரம் (5) | மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரம் (6) | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் பதவித் தரம் (7) | குற்றவியல் நடுவர் பதவித் தரம் (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 12. | நாமக்கல் | 1 | 1 | 1 | 4 | 1 | 1 |
| 13. | நீலகிரி | 1 | - | 1 | 1 | 3 | 1 |
| 14. | பெரம்பலூர் | 1 | 1 | 1 | 4 | - | 3 |
| 15. | புதுக்கோட்டை | 1 | 1 | 1 | 3 | 2 | 3 |
| 16. | இராமநாதபுரம் | 1 | 1 | 2 | 3 | 4 | 3 |
| 17. | சேலம் | 2 | 1 | 6* | 6 | 1 | 12 |
| 18. | சிவகங்கை | 1 | 1 | 2 | 4 | 1 | 3 |
| 19. | தஞ்சாவூர் | 1 | 1 | 6 | 8 | 2 | 6 |
| 20. | தூத்துக்குடி | 1 | 1 | 2 | 6 | 2 | 6 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 5* | 7 | 1 | 9 |
| 22. | திருநெல்வேலி | 2 | 1 | 8* | 11 | 4 | 9 |
| 23. | திருவண்ணாமலை | 1 | 1 | 4 | 7 | 3 | 5 |
| 24. | வேலூர் | 1 | 1 | 4 | 8 | 4 | 14 |
| 25. | விழுப்புரம் | 1 | 1 | 6 | 15 | 2 | 9 |
| 26. | விருதுநகர் | 1 | 1 | 4 | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 61 | 25 | 145 | 158 | 91 | 179 |



* மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பதவி ஒன்று உட்பட

** மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பதவி ஒன்று விற்பனை வரி முறையீட்டு நடுவர் நீதித் துறை உறுப்பினர் பதவி ஆகியவை உட்பட

## இணைப்பு-II

**சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் 1-1-2002 முதல் 31-12-2002 வரையில் தொடுக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கையினைக் காட்டும் அட்டவணை**

| வரிசை எண் (1) | நீதிமன்றத்தின் பெயர் (2) | வருடத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் (3) | தொடுக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட வழக்குகள் (4) | முடிக்கப்பட இருந்த வழக்குகள் (5) | முடிக்கப்பட்ட வழக்குகள் (6) | வருட இறுதியில் நிலுவையில் இருந்த வழக்குகள் (7) |
|---|---|---|---|---|---|---|
| **I.** | **உரிமையியல்** | | | | | |
| 1. | உயர் நீதிமன்றம், சென்னை | 314562 | 170337 | 484899 | 151323 | 333576 |
| 2. | சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் | 91947 | 57621 | 149568 | 78303 | 71265 |
| 3. | சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம் | 47100 | 44709 | 91809 | 55009 | 36800 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 16866 | 89972 | 106838 | 90246 | 16592 |

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர். | வருடத் தொடக் கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள். | தொடுக்கப் பட்ட மற்றும் பெறப் பட்ட வழக்குகள். | முடிக் கப்பட இருந்த வழக்குகள். | முடிக் கப்பட்ட வழக்குகள். | வருட இறுதியில் நிலுவை யில் இருந்த வழக்குகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 5. | முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 12064 | 20427 | 32491 | 21894 | 10597 |
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 182770 | 176008 | 358778 | 194094 | 164684 |
| 7. | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | 179253 | 234360 | 413613 | 259995 | 153618 |
| | **மொத்தம்** | **844462** | **793434** | **1637996** | **850864** | **787132** |
| | **II. குற்றவியல்** | | | | | |
| 1. | சென்னை உயர் நீதிமன்றம் | 33258 | 53213 | 86471 | 51738 | 34733 |
| 2. | அமர்வு நீதிமன்றங்கள் | 14117 | 17500 | 31617 | 15845 | 15772 |
| 3. | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 203339 | 695287 | 898626 | 708176 | 190450 |
| 4. | சென்னைப் பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 79429 | 224697 | 304126 | 230916 | 73210 |
| | **மொத்தம்** | **330143** | **990697** | **1320840** | **1006675** | **314165** |



## இணைப்பு-II

(306ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 30
### தகவல் தொழில்நுட்பத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**முன்னுரை**

தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. இவ்வாண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி செய்து, 900-க்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்களையும் 50,000-க்கும் மேற்பட்ட தகவல் தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட மாநிலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின்கீழ், தமிழ்நாடு மீண்டும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக அளவில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் ஒரு தொய்வு ஏற்பட்ட போதிலும், இத்துறை தமிழ்நாட்டில், சிந்தனை வேகத்தில் வளர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் அதன் வளர்ச்சியை இரட்டை இலக்க விழுக்காட்டில் (Double-digit growth) நிலைநாட்டி வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் முன்னிலையில், இணையச் சேவை (Web Service) இணைய வழிக் கல்வி (e-learning), மின்-ஆளுமை (e-Governance) ஆகிய செயற்பாடுகளுக்காக தமிழ்நாடு அரசு, அண்ணா பல்கலைக்கழகம், சன் மைக்ரோ சிஸ்டம் ஆகிய மூன்று அமைப்புகளும், சன் மைக்ரோ சிஸ்டத்தின் நிறுவனத் தலைவரும், முதன்மைச் செயல் அலுவலருமான ஸ்காட் மெக்நியலி அவர்கள் அண்மையில் சென்னை வந்திருந்தபோது, ஓர் உடன்பாட்டு ஒப்பந்தம் (MOU) செய்து கொண்டனர். மின் ஆளுமையில் சிறந்த அறிஞரும் சிந்தனையாளருமான திரு. டக்லஸ் ஹோமஸ் என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மூத்த அரசு அதிகாரிகளுக்கு ஒரு பயிலரங்கினை நடத்தினார்.

தகவல் தொழில் நுட்பம் சார் சேவைகளிலும் [Information Technology Enabled Services-ITES], வணிகச் செயற்பாட்டுச் சேவை வழங்கலிலும்

[Business Process Outsourcing-BPO] குறிப்பாக வங்கித்தொழில், நிதிச் சேவைகள், காப்பீடு [Banking, Financial Services and Insurance - BFSI] ஆகிய துறைகளில் தமிழ்நாடு ஒரு வலிமையான மாநிலமாக இப்பொழுது மலர்ந்து வருகின்றது. உலக வங்கி, ஏ பி என் ஆம்ரோ, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி, சிட்டி வங்கி ஆகியனவும், மற்றும் பிற உலக வங்கிகளும் நிதி நிறுவனங்களும், சென்னையில் தங்களை நிலை நிறுத்திக் கொண்டதுடன், சென்னையிலிருந்து ஆற்றும் செயற்பாடுகளைப் படிப்படியாகக் கூட்டி வருகின்றன. அதே நேரத்தில் மாநிலம் முழுவதும் 14000 கி.மீ.-க்கும் மேலாக பொது மற்றும் தனியார் தொலைத் தொடர்பு வழங்குபவர்கள் [Private Communication Providers-PCP] ஒளி இழை வடங்கள் [Optical Fiber Cable-OFC] அமைத்துள்ளார்கள். இதனால் இந்தியாவில் மிகுதியாக இணைக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. முதலீட்டாளர்களுக்கேற்ற எளிய கொள்கைகள், மாநிலத்தில் நிலவும் அமைதியான சூழ்நிலை, முனைப்பான மற்றும் துணை நிற்கும் அரசு போன்றவை, கடல் கடந்த தொழில் முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்ய தமிழ்நாட்டை ஓர் உகந்த இடமாக ஆக்குகின்றது.

பல்வேறு மின்-ஆளுமை முயற்சிகளை அரசு எடுத்துள்ளது. இவை பிற மாநிலங்களுக்கு ஒரு மாதிரியாக அமைந்துள்ளன.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலுள்ள, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மன்றம் [Tamil Nadu Information Technology Council - TNITC] ஆகஸ்டு, 2002-ல் கூடியது. அரசு, தொழில் மற்றும் கல்வித் துறை உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழ்நாட்டின் சாதனைகளைக் கொண்ட சிறு வெளியீடு ஒன்றினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது வெளியிட்டார்கள். தகவல் தொழில்நுட்பம் பற்றிய வரைவுக் கொள்கை இவ்வமைப்பில் விவாதிக்கப்பட்டது. பங்கேற்றவர்களின் கருத்துரைகளும் அறிவுரைகளும் தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2002 இறுதி வடிவில் சேர்க்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002" வெளியிடப்பட்டது. தகவல் தொழில் நுட்பத்தை ஓர் ஊன்று கோலாகக் கொண்டு தமிழகத்தை அறிவும் வளமும் கொண்ட ஓர் அறிவுசார் மாநிலமாக ஆக்கி அதன் வழி ஒவ்வொரு குடிமகனின் முகத்திலும் வளமையின் மகிழ்ச்சி மிளிரச் செய்யும் நோக்கத்துடன் இக்கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.

3. தகவல் தொழில்நுட்பத் தொழிலை ஊக்குவிப்பதற்கு பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. ஹனோவரில் நடைபெற்ற



உலகிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்பத் துறைப் பொருட்காட்சியான 'சிபிட் 2003'-இல், இந்திய அரசுடன், ஒரு கூட்டாளி மாநிலமாகத் தமிழக அரசு பங்குபெற்றது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகளுக்கு உகந்த இடமாகத் தமிழகத்தை உருவாக்க இப்பங்கேற்பு உதவும். தகவல் தொழில்நுட்பம் (Information Technology - IT) மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை (Information Technology Enabled Services - ITES) ஆகியவை தொடர்பான முதலீடுகளுக்குத் தமிழகத்தை உகந்த இடமாக நிறுவுவதற்கேற்ற வணிக முத்திரையை தமிழகம் பெறுகின்ற வகையில், இதுபோன்ற பன்னாட்டு வணிகக் காட்சிகளில் பங்கேற்பு தொடரும்.

4. படைப்புரிமை (Intellectual Property Rights-IPR), மென்பொருள் திருட்டு, இணையதளம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த குற்றங்களைத் தடுத்து நிறுத்த திறன்வாய்ந்த ஏற்பாடு ஒன்றினை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்திய அரசு தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-த்தை நிறைவேற்றியபின் இணையதளக் குற்றங்களைத் தடை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இணையதளம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த குற்றங்களைத் தடுத்து நிறுத்த சட்டத்தைச் செயலாற்றும் வழிமுறைகள் பற்றி அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

5. இந்திய தொழில் கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry-C-II) கூட்டுச் சேர்ந்து, தகவல் தொழில்நுட்ப வழிபாட்டை (IT Corridor) வளர்ச்சியின் ஒரு பகுதியாக அறிவு சார் தொழில் நகரியங்கள் (Knowledge Industry Townships-KITs) அமைக்கப்படும் என்று வரவு-செலவுத் திட்டம், 2003-2004-ன் உரையில் அறிவிக்கப்பட்டது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை எழுதி வழங்கும் பொறுப்பு உலகப் புகழ் பெற்ற ஒரு நிறுவனத்திடம் (A World-Class Consultant) கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும்.

6. தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பம் சார் சேவைகளின் உலகத் தலைநகரமாக உருவாக்க ஒரு புது 'தகவல் தொழில்நுட்பம் சார் சேவைக் கொள்கை' அறிவிக்கப்படும். இக்கொள்கை மாநிலத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள தகவல் தொழில்நுட்ப ஆற்றலைப் பயன்படுத்தி மதிப்பையும் வளத்தையும் ஊட்டி மிகுந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இதற்கான வரைவு தகவல் தொழில்நுட்பம் சார் சேவைக் கொள்கையினை, பிறர் கருத்தைப் பெறும் நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இணையதளத்தில் வெளியிட்டார்கள். தகவல்

தொழில்நுட்பம் சார் சேவையில், குறிப்பாக, வங்கித் தொழில், நிதிச் சேவைகள், காப்பீடு, உடல் நலம், போக்குவரத்து போன்ற இன்றியமையாத் துறைகளில் சென்னையை உலகத் தலைநகராமாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஒரு நகரம் சார்ந்ததன்று. கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி போன்ற இரண்டாம் நிலை நகரங்களையும் அவற்றுடன் மூன்றாம் நிலை நகரங்களையும் வணிகச் செயற்பாட்டுச் சேவை வழங்கும் (BPO) நடவடிக்கைகளுக்கு உகந்த இடங்களாக ஆக்கத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை மேலும் வலுப்படுத்தப்படும்.

8. இவ்வாண்டு (2003) ஆளுநர் உரையில் அறிவித்தபடி, தகவல் தொழில்நுட்பத்தின் பெரும் ஆற்றல்களைப் பயன்படுத்தி, களங்கமற்ற, வெளிப்படையான தொடர்புடையத் துறைகளின் பங்கேற்புடன்கூடிய மின் ஆளுமை வழங்கப்படும். மாநிலம் முழுவதும் எல்லா வட்ட அலுவலகங்களிலும் தொடுதிரைக் (Touch Screen) கருவிகள் நிறுவப்படும். மின் ஆளுமை வடிவமைப்புப் பணிகளில் அரசுக்குத் துணை புரிய மின் ஆளுமையில் சிறந்த அறிஞர் குழுவினர் (Consultants) மற்றும் நிறுவனங்கள் அணுகப்பட்டுள்ளன.

9. அரசுத் துறைகளின் செயலாற்றத் திறனை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். பேரவையில் அறிவித்தது போல் குடிமக்களுக்கான மின்வழிச் சேவை (EDS) என்னும் முன்னோடித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இச்சேவை இவ்வாண்டு மேலும் உயர்த்தப்படும்.

10. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கை, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. அதற்கிணங்க அனைத்து அரசுத் துறைகளின் இணையதளங்களையும் இரு-மொழி தளங்களாக மாற்றுவதற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனமும், தமிழ் இணைய பல்கலைக்கழகமும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சான்றிதழ், பட்டப் படிப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டன. தமிழில் Optical Character Reader (தமிழ் OCR) என்னும் மென்பொருள் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இணையவழி தமிழ்க் கல்வி, மின் நூலகம், தமிழ் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பணிகளை தமிழ்



இணைய பல்கலைக்கழகம் செவ்வனே செயலாற்றத் தேவையான, நிறுவுதல் மற்றும் இயக்கச் செலவினங்களுக்கான நிதி உதவியை தகவல் தொழில்நுட்பத் துறை வழங்கும்.

11. உலக அளவிலான பயன்பாட்டிற்கான தமிழ் மென்பொருள் மற்றும் மின் நூலகம் (Digital Library) ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக தமிழ் இணைய பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

12. தகவல் தொழில்நுட்பத் துறை, தனது இரண்டு அங்கங்களாகிய ELCOT நிறுவனம் மற்றும் தமிழ் இணைய பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கங்களைச் செயல்படுத்தி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம்**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) 1977ஆம் ஆண்டு தமிழக அரசுக்குச் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாக நிறுவப்பட்டது. நிறுவப்பட்ட நாள்தொட்டு இத்தனை ஆண்டுகளில் எல்காட் (ELCOT) நிறுவனம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை (Information Technology Enabled Service - ITES) தொடர்பான முதலீடுகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை வழங்க வல்ல டைடல் (TIDEL) போன்ற நிறுவனங்களை ஊக்குவித்து, தன்னை ஒரு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனமாக வளர்த்துக் கொண்டுள்ளது. தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளைச் செயல்படுத்தும் ஒரு முனையமாகவும் (NODAL AGENCY) இது செயல்படுகிறது அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT, Chennai) போன்ற கல்வி நிறுவனங்கள் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார் சேவை நிறுவனங்கள், மின்னணு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து. அரசு, தொழிற்கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் ஒரு வழிகாலாக எல்காட் (ELCOT) செயல்பட்டு வருகின்றது. 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் எல்காட் (ELCOT) நிறுவனம் 26 ஆண்டு சேவையை முடித்து, மேலும் பல்லாண்டுகள் சேவை செய்ய தன்னை அணியமாக்கிக் கொண்டுள்ளது.

**நோக்கமும் குறிக்கோளும்**

"தமிழக அரசுத் துறைகளுக்குத் தேவையான, தகவல் தொழில் நுட்பம் சார் சேவைகள் மற்றும் பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக செயல்படுவது."

**குறிக்கோள்**

"தகவல் தொழில்நுட்பம் மூலம் வாடிக்கையாளர் மதிப்பைக் கூட்ட துணை செய்வது."

**சாதனைகள்**

பல்வேறு செயல்பாடுகள் மற்றும் திட்டங்களின்கீழ் எல்காட் (ELCOT) ஆற்றியுள்ள பணிகளைக் கீழ்க்காணும் தலைப்புகளில் தொகுத்துப் பிரிக்கலாம்:—

அ. மேம்பாட்டுத் திட்டங்கள் (Promotional Projects)

ஆ. தொலைத் தொடர்புத் திட்டங்கள் (Communication Projects)

இ. மின் ஆளுமைத் திட்டங்கள் (E-Governanace Projects)

ஈ. வன்பொருள்/மென்பொருள் கொள்முதல் (Hardware/Software Procurement).

**அ. மேம்பாட்டுத் திட்டங்கள் (Promotional Projects)**

**(1) தமிழ்நாட்டை முதலீட்டுக்கு உகந்த இடமாக ஆக்குவது (Destination of Choice - DOC)**

தகவல் தொழில்நுட்ப முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதற்கு எல்காட் (ELCOT) கருத்தரங்கங்களையும் கண்காட்சிகளையும் நடத்தியுள்ளது. தேசிய மற்றும் உலகக் கருத்தரங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளது.

**(i) கருத்தரங்கங்களும் கண்காட்சிகளும் அமைத்தல்**

தமிழக அரசின் 'மேம்பாட்டு முகவர்' (Promotional Agency) என்ற முறையில் எல்காட் (ELCOT) நிறுவனம் புதுத் திட்டங்களை வகுத்தமைக்கும்பொருட்டு கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ளது:—



**கனெக்ட 2002** (CONNECT 2002):

2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 முதல் 22ஆம் தேதிகளில் சென்னையில், தமிழக அரசு, எல்காட் (ELCOT) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து கனெக்ட் 2002 (Connect 2002) என்ற நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம். தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளரும் முறைகளும் (Emerging Trends) வாய்ப்புகளும் பற்றி கருத்தாய்வு செய்யப்பட்டது. இந்தியாவிலும் வெளிநாட்டிலும், மேற்குறிப்பிட்ட முக்கிய நிறுவனங்களை (decision makers) இலக்காகக் கொண்டு இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேராளர்களும் பார்வையாளர்களும் இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பங்கேற்றனர். இது சென்ற ஆண்டின் பங்கேற்பாளர்களைவிட 4 மடங்கு அதிகமாகும்.

**OECD மேம்பாட்டு மைய மாநாடு**

**Organisation for Economic Co-operation and Development**

**(OECD) Development Centre Conference)**

தமிழக அரசு, எல்காட் (ELCOT) நிறுவனத்தை முன்னிறுத்தி, இந்திய அரசு மற்றும் பாரிஸ் நகரிலுள்ள பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Organisation for Economic Co-operation and Development - OECD) ஆகியோரின் துணையோடு "இந்திய ஆசிய வளர்ச்சியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு ஒன்றினை நடத்தியது. இம்மாநாடு நவம்பர் 2002-ல் சென்னையில் நடத்தப்பட்டது. இந்தியாவிலிருந்தும் அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் முதலான வெளிநாடுகளிலிருந்தும் 120-க்கும் மேற்பட்ட பேராளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான மின்-வணிக மாநாடு (Conference on e-Trade for Small and Medium Enterprises - SMEs) டிசம்பர் 2002-ல் டெல்லியிலும் சென்னையிலும் இந்திய வர்த்தக வளர்ச்சி நிறுவனம் (India Trade Promotion Organisation - ITPO), ஸ்விட்சர்லாந்தில் ஜெனிவா நகரில் உள்ள உலக வர்த்தக மையம் மற்றும் எல்காட் (ELCOT) ஆகிய நிறுவனங்கள் இணைந்து இரண்டு நாள் மாநாடு

ஒன்றினை நடத்தியது முதல் முறையாக எல்காட் நிறுவனம் ஒரு பன்னாட்டு அறிவுரை நிறுவனமாக நியமிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கீழ்க்காணும் பொருள்களில் கவனம் செலுத்தப்பட்டது:—

(i) ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஊக்குவிக்கும் நிறுவனங்களின் வழி செயல்படும் வகையில் உலக அளவில் போட்டியிடக்கூடிய வணிகத்தை உருவாக்குதல்.

(ii) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கிடையே (Small and Medium Enterprises - SMEs) விழிப்புணர்வை ஏற்படுத்தி உலக வணிகத்தில் ஏற்றத் தாழ்வுகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்.

(iii) நன்கு போட்டியிடக்கூடிய அளவுக்கு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (SMEs) "மின் ஆயத்த நிலையை" வளர்த்தல்.

(iv) தொழில் முனைவோர், வணிக மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவை இணையம் (Internet) பயன்பாடுகள், மென்பொருட்கருவிகள் பற்றி அறிந்துகொள்ள உதவுதல்.

(v) உலக அளவில் போட்டியையும் வணிக வாய்ப்புகளையும் பெருக்குதல்.

இந்த மாநாட்டைத் தொடர்ந்து இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள தனிக் குழு (Core Group) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**நாஸ்காம் பணி ஒப்படைப்பு இந்தியா 2003 (NASSCOM OUTSOURCE INDIA 2003)**

ஜனவரி 2003-ல் 'மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் தேசிய கூட்டுச் சங்கம்' (National Association for Software and Services Companies—NASSCOM), தகவல் தொழில்நுட்பப் பணி ஒப்படைப்பு (IT Outsourcing) மற்றும் வணிக செயற்பாடு ஒப்படைப்பு (Business Process Outsourcing - BPO) உச்சி மாநாடு ஒன்றினை நடத்தியது. அமெரிக்காவைச் சார்ந்த, திரு. மைக்கேல் கோர்பெட் (Mr. Michael Corbett, USA) மற்றும் இங்கிலாந்தைச் சார்ந்த முனைவர் நைஜெல் ராக்ஸ்பௌ (Dr. Nigel Roxbough, UK) ஆகியோர் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் பணி ஒப்படைப்பு சம்பந்தமாக உரை நிகழ்த்தினர். எல்காட் (ELCOT) மற்றும் நாஸ்காம் (NASSCOM) ஆகிய நிறுவனங்கள் தமிழக அரசு சார்பில் இந்தப் பொருட்காட்சியின் முக்கிய அமைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.





**(ii) இரண்டாம் நிலை மேம்பாடு**

ஒரு கொள்கை விளக்க அறிக்கையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தகவல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகளை மாநிலம் முழுவதும் பரவலாக நிறுவி கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் போன்ற இரண்டாம் நிலை நகரங்களை IT முதலீடுகளுக்கு உகந்த இடமாக (Destination of Choice - DOC) மேம்படுத்துவதற்கு கீழ்க்காணும் நிகழ்ச்சிகளுக்கு பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியுடன் ஏற்பாடு செய்யப்பட்டது:—

**கோவை:**

டிசம்பர் 10, 2002-ல் கோவையில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் இணைந்து 'தகவல் தொழில்நுட்பத்தில் வணிக வாய்ப்புகள்' (Business Opportunities in IT) என்ற தலைப்பில் மாநாடு நடத்தப்பட்டது.

**திருச்சி:**

அக்டோபர் 2002-ல் திருச்சியில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் (CII) இணைந்து 'ITES' மற்றும் BPO-ல் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் மாநாடு நடத்தப்பட்டது.

**மதுரை:**

மார்ச் 11, 2003-ல் மதுரை மற்றும் திருநெல்வேலி வட்டாரங்களை இணைத்து 'தொழில் முனைவோர் முன்னேற்ற மையத்துடன்' (Centre for Entrepreneurship Development) இணைந்து தகவல் தொழில் நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகள் (ITES), வாய்ப்புகள் பற்றிய 'வட்டாரக் கருத்தரங்கம்' என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

**சேலம்:**

மார்ச் 25, 2003-ல் சோனா பொறியியல் கல்லூரி மற்றும் 'இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காவினருடன்' (STPI) இணைந்து 'தகவல் தொழில்நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகளில்' (ITES) 'வாய்ப்புகள்' என்ற தலைப்பில் ஒரு வட்டாரக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

[2003 ஏப்ரல் 11

**(iii) தேசிய மற்றும் உலக நிகழ்ச்சிகளில் பங்கேற்பு**

**GITEX-ஹைதராபாத் 2003:**

"GITEX -ஹைதராபாத் *2003*" நிகழ்ச்சிகள் இரண்டாம் பதிப்பு - துபாய் உலக வணிக மையம் மற்றும் ஆந்திரப் பிரதேச அரசு ஆகியவை இணைந்து ஆண்டுதோறும் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தொலைத் தொடர்பு தொடர்பாக நடத்தும் நிகழ்ச்சியாகும். இந்த ஆண்டு, GITEX- ஹைதராபாத் *2003*, ஹைதராபாத்தில் ஜனவரி *2003*-ல் நடத்தப்பட்டது. 'தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம்' என்ற பொருளில் *36* ச.மீ. பரப்பளவுள்ள அரங்கமொன்று எல்காட் (ELCOT) நிறுவனத்தால் இப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்டது. தமிழகத்தின் போக்கு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளை *19* நாடுகளிலிருந்து வந்த வணிகப் பார்வையாளர்கள் பார்வையிட்டனர்.

**இந்தியா சாஃப்ட் 2003:**

பிப்ரவரி *2003*-ல் புதுடெல்லியில் 'மின்னணு மற்றும் கணினி மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆலோசனைக் குழு' (Electronics & Computer Software Export Promotion Council - ESC) ஏற்பாடு செய்த 'India soft 2003' என்ற அகில உலக தகவல் தொழில்நுட்பப் பொருட்காட்சி மற்றும் மாநாடு நடத்தப்பட்டது. *32*-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பேச்சாளர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சென்னை மற்றும் தமிழகத்தை முதலீட்டிற்கு உகந்த இடமாகச் சித்தரிக்கும் வகையிலும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியைக் காட்டும்வகையிலும் *12* ச.மீ. பரப்பளவில் எல்காட் (ELCOT) ஒரு அரங்கம் அமைத்தது.

**துபாயில் GITEX:**

அக்டோபர் *2002*-ல் துபாயில் நடைபெற்ற உலகின் மூன்றாவது பெரிய தகவல் தொழில்நுட்பப் பொருட்காட்சியில் தமிழக அரசு முதன் முதலாகப் பங்கேற்றது. இந்த தகவல் தொழில்நுட்பப் பொருட்காட்சி, உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப (IT) முதலீட்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டை அறிமுகம் செய்யும் வாய்ப்பை அளித்தது.



2003 ஏப்ரல் 11]

**சிபிட் 2003 (CEBIT 2003):**

*2003*ஆம் ஆண்டு மார்ச் மாதம் *12-19* ஆம் நாட்களில் ஜெர்மனியிலுள்ள ஹானோவர் (Hannover) நகரில் பன்னாட்டு அளவில் பெரிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்புப் பொருட்காட்சி நடத்தப்பட்டது. அந்தப் பொருட்காட்சியில் தமிழ்நாடு, ESC-உடன் பங்கேற்றது. தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் திறனை வெளிப்படுத்தும் வகையில் *54* ச.மீ. பரப்பளவிலான ஒரு அரங்கம் அமைக்கப்பட்டது. அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை (IT Department), எல்காட் (ELCOT), தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (TIDCO) மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIPCOT) ஆகியவற்றின் விளம்பரப் பலகைகள் இவ்வரங்கத்தில் இடம் பெற்றிருந்தன. தமிழக அரசின் இவ்வரங்கை, *30* நாடுகளிலிருந்து வந்த பார்வையாளர்கள் பார்வையிட்டனர்.

**2. தொழிற்கூடங்கள் — கல்வி நிறுவனங்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு செயலாற்றல்**

**(i) TIFAC — CORE**

உயர்நிலை கணிப்பொறியில் (Advanced Computing), வலையமைப்பு (Net working), தொழிற்சாலை வடிவமைப்பு (Industrial Design) செய்தல் போன்ற துறைகளில் 'பொருத்தம் மற்றும் திறன் மையத்தை' (Centre of Relevance and Excellence - CORE) நிறுவ தமிழகத்தில் *7* மையங்களை இந்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'தொழில்நுட்பத் தகவல் கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டுக் குழு' (Technology Information Forecasting Assessment Council - TIFAC) கண்டறிந்துள்ளது. எல்காட் பல்வேறு TIFAC CORE செயல்பாடுகளில் இந்த நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

**(ii) மீடியா லேப் ஆசியா : (Media Lab Asia)**

இந்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் MIT அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட மீடியா லேப் ஆசியா சென்னையில் தனது வட்டார ஆய்வுக் கூடத்தை (Regional Lab) நிறுவி வருகிறது. தமிழ்நாடு அரசு வழிகாட்டுதல், கண்காணித்தல் மற்றும் வெற்றிகரமான முன் மாதிரிகளை நிறுவுதல் போன்றவற்றில், மீடியா லேப் ஆசியாவிற்கு உதவி செய்யும். இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT) மூலமாக உலக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அறிவுப் பூங்கா என்று நிறுவப்படும். இந்தப் பூங்காவினை நிறுவுவதில் எல்காட் (ELCOT) துணை நிற்கும்.

[2003 ஏப்ரல் 11

## 3. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (Research and Development—R&D)

### மின் செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம்

மேதகு இந்திய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் பிரதம மந்திரியின் முதன்மை விஞ்ஞான ஆலோசகராக இருந்தபோது அவாது எண்ணத்தில் உருவாக்கப்பட்ட மின் செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronic Transaction & Security - SETS) தரவு உருவாக்கல், சேகரித்தல், கிடங்கில் தேக்குதல், செலுத்துதல், திரும்பப்பெறல் போன்றவை சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தேவைகளை பார்த்துக்கொள்ளும். சென்னையை இச்சங்கத்தின் செயலாற்றும் தலைமை இடமாக நிறுவ தமிழக அரசின் சார்பில் எல்காட் (ELCOT) நிறுவனம் முயற்சிகள் எடுத்துள்ளது.

### திறந்த நிலை கணப்பீடு (Open Source Computing)

மின்கத்தை ஆளுமைத் திட்டங்களில் திறந்த நிலை மென்பொருள் உபயோகத்தை அரசு செயலாக்க வேண்டும் என்றும் அரசாங்கம் பயன்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறது. திறந்த நிலை மென்பொருள் மேம்பாடு ஒரு பரிணாம வளர்ச்சியாகும். இது அரசாங்கத் தேவைகளுக்கு பல்லாற்றானும் ஏற்றதாகும். அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் எல்காட் (ELCOT) மேலாண்மை இயக்குநர், உறுப்பினர் செயலாளராகவும் மற்றும் பலரை உறுப்பினராகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமிழக அரசுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கும்.

## 4. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஊரக நகரங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல் (Bridging the Digital Divide)

இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் மக்கள் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பெறும் வகையில் ஊரக இந்தியாவிற்கு தகவல் தொழில் நுட்ப வசதி நீட்டிப்புத் திட்டம் (Sustainable Access in Rural India - SARI) ஊர்ப்புறங்களில் இணைய தொடர்பு ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கம்பி இல்லாத் தொடர்பு முறையைப் (Wireless in Local Loop - Will) பயன்படுத்துவதன்மூலம் செயல்படும் இந்த SARI திட்டம் தற்போது இணையம் வழி ஊரகச் சேவை (Rural Access to Services through Internet - RASI) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் RASI திட்டம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். எல்காட் (ELCOT) இந்தத் திட்டத்திற்கு தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்கி வருகிறது.



2003 ஏப்ரல் 11]

## 5. தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கம்

சென்னையில் டைடல் (TIDEL) எல்நெட் மென்பொருள் நகரம் மற்றும் கோவையில் டெக்ஸ்சிட்டி மென்பொருள் பூங்கா முதலான பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை எல்நெட் உருவாக்கியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த EDS, Cognizant Technology Solutions, Verizon Computer Associates முதலான நிறுவனங்கள் இந்தப் பூங்காக்களில் இடம் பெற்றுள்ளன. அம்பத்தூர் தொழிற்பேட்டையை, தகவல் தொழில்நுட்பப் பூங்காவாக உருவாக்க சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படும். அதற்கான கட்டமைப்புகள் ஏற்கெனவே உள்ளன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகளுக்குத் தேவையான மனித வளங்கள் இப்பகுதியில் இருப்பதை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தகவல் தொழில்நுட்ப வழிபாட்டை பெருங்குடியில் தகவல் தொழில்நுட்பம் சார் சேவை மற்றும் வணிகச் செய்முறைகள் வெளியே செய்தலுக்கான மையம் ஒன்றினை உருவாக்க எல்காட் (ELCOT) முயற்சி மேற்கொள்ளும்.

### மென்பொருள் திட்டங்கள்

6. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி வாரியம், தொழிலாளர் துறை, தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற நிறுவனங்களில் கணினிமயமாக்கும் பல்வேறு திட்டங்களை எல்காட் (ELCOT) நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் " பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு" (Security Management System) மற்றும் சென்னை ஏற்றுமதி செயல்பாட்டு மண்டலத்தில் (Madras Export Processing Zone - MEPZ) நிலவியல் செய்தி அமைப்பு (Geographical Information System - GIS) சார்ந்த வசதி மேலாண்மை அமைப்பு (Facility Management System) ஆகியவற்றை நிறுவ செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

### ஆ) தொலைத் தொடர்பு திட்டங்கள்

(I) ஒளிப்படக் கலந்துரையாடல் அமைப்பு (Video Conferencing System) நிர்வாகத் தரத்தை உயர்த்தும்பொருட்டு ஆளுமையில் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் தமிழக அரசுக் கொள்கையின் ஒரு பகுதியாக அரசு அலுவலர்களுக்காக ஒளிப்படக் கலந்துரையாடல் வலை அமைப்பு (Video Conferencing Network) ஒன்றினை எல்காட் (ELCOT) நிறுவனம் நிறுவியுள்ளது. இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வலை அமைப்பு கீழ்க்காணும் இணைப்புகளைக் கொண்டுள்ளது.

[2003 ஏப்ரல் 11

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் மாநாட்டு அறையில் பொருத்தப்பட்டுள்ள, ஒரே நேரத்தில் மூன்று ஒளிப்படக் கலந்துரையாடல் அழைப்பைக் காணும் வசதி கொண்ட பல்முனை கலந்துரையாடல் அமைப்பு
* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலர், நிதி, உள் துறை மற்றும் பொதுத் துறைச் செயலாளர்கள்
* அனைத்து 29 மாவட்ட ஆட்சியர்கள்
* காவல் துறையின் 52 கள அலுவலர்கள்

நாட்டில் மிக விரிவான ஒன்றான இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள். தகவல் தொழில் நுட்பம், பொது மற்றும் உள் துறை போன்ற துறைகளின் சார்பாக எல்காட் (ELCOT) நிறுவனம் ஒரு செயலாற்றும் முகவர் நிறுவனமாக உள்ளது.

2. வருவாய்த் துறையின் சார்பாக கம்பியில்லா உயர் அலைவரிசை (Wireless High Frequency - HF) அதி உயர் அலைவரிசை (VHF) பேரிடர் இடருதவி (Calamity Relief) மற்றும் நெருக்கடி தொலைத் தொடர்பு வலை அமைப்பு (Emergency Communication Network) போன்ற பணிகளை தொலைத் தொடர்புப் பிரிவு செயல்படுத்தி வருகிறது.

**3. தமிழ்நாடு மெய்நிகர் தனி வலை அமைப்பு (Tamil Nadu Virtual Private Network - TNVPN)**

ஏற்பு நேரம் மற்றும் ஒளிவு மறைவு அற்ற தன்மையை மேம்படுத்துவதற்காகவும் குடிமக்களுக்குச் சேவை வழங்குவதில் முன்னேற்றம் உண்டாக்கவும் ஒலி, எழுத்துரை மற்றும் ஒளிப்பட இணைப்புக்காகவும் மெய்நிகர் தனி வலை அமைப்பு ஒன்றினை அனைத்து அரசுத் துறைகளிலும் நிறுவ எல்காட் நிறுவனம் திட்டமிட்டு வருகிறது.

தனியார் தொலைத் தொடர்பு வழங்குபவர்களிடம் (Private Communication Providers - PCPs) இலவச 2 Mbps Band width தடத்தைப் பெற்று அதனைப் பயன்படுத்தி சென்னையுடன் 29 மாவட்டங்களையும், பிற வட்டங்களையும், தொகுதிகளையும் இணைக்கும் பணியை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 11]

**C) மின் ஆளுமைத் திட்டங்கள்**

பதிவுத் துறை, வருவாய்த் துறை, கல்வித் துறை போன்ற பெரும்பாலான துறைகளின் மின் ஆளுமை முயற்சிகளில் எல்காட் (ELCOT) நிறுவனம் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளது.

**1. மின் சேவைகள் வழங்கல் (Electronic Delivery of Services - EDS)**

குடிமக்களுக்கான மின் சேவைகள் வழங்கல் திட்டம் மேம்படுத்தப்படும். சேவைகள் வழங்கல் மையத்தில், தமிழ்நாடு மின் வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டு பட்டுவாடாச் (Utility Payment) சேவைகள் எந்நேரமும் எவ்விடத்திலும் எடுத்துக்கொள்ளப்படும்.

**2. அழைப்பு மையங்கள் (Call Centres)**

பயனாளர்களுக்கு (Clients) விரைவாகவும் திறமையாகவும் சேவை செய்யும் கோட்பாட்டைக் கொண்டது அழைப்பு மையம். இது செலவைக் குறைப்பது மட்டுமன்றி பயனைக் கூட்டும். மேலும், வாடிக்கையாளர் உறவு மேம்படவும், ஆட்களை விரைவாக சரியான இடத்தில், சரியான நேரத்தில் பணிமாற்றம் செய்யவும் உதவும். குடிமக்களுக்கு அரசினர் சேவைகள் கிடைக்கும்பொருட்டு அழைப்பு மையம் அமைக்க தகவல் தொழில்நுட்பத் துறை உதவி செய்யும்.

**3. தகவல் தளம் (DATA WAREHOUSE)**

பல்வேறு அரசுத் துறைகள் மக்களுக்கு சேவை செய்கின்றன. பல்வேறு துறைகளும் அதே மக்களிடம் தகவல்களைப் பெறுகின்றனர். இத் துறைகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு துறையும் தனது தரவுத் தளங்களை உருவமைக்கின்றன. ஒவ்வொரு துறையும் தங்களின் தகவல் தளங்களை காலம் கருதி புதுப்பிக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு துறை தகவல் தளங்களும் ஒன்றோடொன்று தொடர்பு அற்றவையாக உள்ளன. தரவுகளை துறைகளுக்கிடையே பரிமாற்றம் செய்துகொள்வதும் இயலுவதில்லை. ஒரு துறையின் தரவுத் தளத்தில் செய்கின்ற மாற்றம் பிற துறையின் தரவுத் தளத்தில் தானே மாற்றம் நிகழுவதில்லை. எனவே குடிமக்களுக்கு சீரிய முறையில் சேவை செய்யும்பொருட்டு ஒருமுகப்படுத்தப்பட்ட தரவுத் தளக்கிடங்கு (DATA WAREHOUSE) ஒன்றினை எல்காட் நிறுவனத்தின் மூலம் உருவாக்கி பாராமரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது பல்வேறு துறைகளின் தகவல்களை பயனுள்ள முறையில் பல துறைகளும் பயன்படுத்தும்வண்ணம் அமைக்கப்படும்.

[2003 ஏப்ரல் 11

### 4. அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

கிட்டத்தட்ட 1200 உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி நிகழ்ச்சியை தமிழக அரசு செயலாற்றி வருகிறது. இது ஒரு தேசிய முன்மாதிரி மட்டுமல்லாமல், பல்வேறு நாடுகளும் இதுபோன்று திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக இத்திட்டத்தின் செயலாக்கம் மற்றும் ஆய்வுப் பணிக்கான முகமை எல்காட் நிறுவனமாகும்.

### 5. தொடு திரை கீயோசக்:

முன்னோடி அடிப்படையில் ஆண்டிப்பட்டி தொகுதியில் (குறை தீர்ப்போம்) என்ற வலையத்தள கீயோசக் ஒன்று நிறுவப்பட்டது. இது வெற்றிகாமாக இயங்குகிறது. இத்திட்டத்தை பல்வேறு நிலைகளில் ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. 2003-2004 வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டது போல் மாநிலத்திலுள்ள பிற சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஸ்டார் திட்டத்தை விரிவுபடுத்தும் பணியை எல்காட் நிறுவனம் எடுக்கவுள்ளது. அனைத்து இந்திய முன்மாதிரியாயுள்ள தமிழக அரசின் இம்மின் ஆளுமை முயற்சியை ஒரு தலைசிறந்த மின் ஆளுமை முயற்சியாக இந்திய அரசு தெரிந்தெடுத்துள்ளது.

7. வரவு-செலவுத் திட்ட 2003-2004 உரையில் அறிவிக்கப்பட்டது போல் வரும் ஆண்டுகளில் 206 வட்டங்களில் உடனடித் தொடர்பு (ON LINE) சேவைகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

(D) வன்பொருள் மற்றும் மென்பொருள் கொள்முதல் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக மாநில அரசு, அரசு ஆணை எண் எம்.எஸ்.58 நிதி (BPE) துறையின்கீழ் விருப்பக் கொள்முதல் முகமையாக எல்காட் நிறுவனத்தை நியமனம் செயதுள்ளது. 2002-2003-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 100 துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான தகவல் தொழில் வன்பொருள் மற்றும் மென்பொருட்களை எல்காட் நிறுவனம் வெற்றிகாமாகக் கொள்முதல் செய்து முடித்துள்ளது. குறிப்பிடும் வண்ணம், உள் துறை, வருவாய்த் துறை, வனத் துறை, பொதுத் துறை மற்றும் வணிக வரித் துறை, மேலும் நில அளவை மற்றும் நிலத் தீர்வை ஆணையர் அலுவலகம், தமிழ்நாடு மின் வாரியம், மாநில போக்குவரத்துக் கழகங்கள், அரசு அருங்காட்சியகம் மற்றும் பிற ஆகும்.



2003 ஏப்ரல் 11]

## தமிழ் இணைய பல்கலைக்கழகம்

**முன்னுரை:**

உலகு தழுவி வாழும் தமிழ்மக்கட்கும், தமிழில் ஈடுபாடுள்ள மற்றையோருக்கும் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்துகொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு, கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் தமிழக அரசு தமிழ் இணைய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியது.

**குறிக்கோள்கள்:**

உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் மற்றும் தமிழில் ஈடுபாடுடையோர்க்கு தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாடு குறித்த கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் மூலமாக அளித்தல்.

உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைக்கேற்ப பாடத்திட்டங்களை உருவாக்கி அளித்தல் மற்றும் அவர்கள் தங்கள் பாரம்பரியத்தின் தொடர்போடு வாழத் துணைபுரிதல். உலகு தழுவி பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் தமிழ்க் கல்வி அறிவுச் சாதனங்களைத் தொகுத்து அவற்றைப் பரவலாக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு போன்றவற்றினைத் தெரிந்து கொள்ள அல்லது கற்க விரும்புபவருக்கு பாடத்திட்டங்களை வகுத்து இப்பாடங்களைக் கற்க வாய்ப்பளித்தல்; அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கேற்ப, வரையறுக்கப்பட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தோருக்கு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலமாக சான்றிதழ்/பட்டயம்/பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

2002-2003ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

**கல்விப் பணி:**

ஆறாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் கல்வித் திட்டங்களின் திறன்களை அடிப்படை, இடைநிலை, மேல்நிலை என்ற மூன்று நிலைகளில் வழங்க வடிவமைக்கப்பெற்றது. இதில் அடிப்படை மற்றும் இடைநிலைப் பாடங்கள் முழுமை பெறப்பட்டு த.இ.ப.வின் மைய பாடங்கள்

சேவையகத்தில் இடப்பட்டுள்ளது. மேல்நிலைப் பாடங்கள் உருவமைக்கப்பட்டு வருகின்றன.

பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டங்கள் வரையறுக்கப்பட்டு தஞ்சை தமிழ்ப பல்கலைக்கழகத்திடமிருந்து ஒப்புதலும் பெறப்பட்டது. 696 பாடங்களில் 120 பாடங்கள் த.இ.ப.வின் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. மீதமுள்ள பாடங்களை இணைய தளபபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சான்றிதழ், பட்டப் படிப்புகளுக்கான திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002 ஜூன் திங்கள் 22ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இதுவரை 40 நாடுகளில் இருந்து 2,500 மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பட்டக் கல்வித் திட்டங்களில் பதிவு செய்துள்ளனர்.

இலங்கை, மலேசியா, மொரிசியஸ் மற்றும் கலிஃபோர்னியா ஆகிய நாடுகளில் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் கல்வித் தொடர்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சான்றிதழ்க் கல்வித் திட்டத்தின் கீழ், முதற்பிரிவு மாணவர்கள் கலிஃபோர்னியா தமிழ்க் கழகத்தின் மூலம் அடிப்படைக் கல்வியைக் கற்று அதற்கான சான்றிதழை 2003 ஜூன் திங்களில் பெறவுள்ளார்கள். இப்பொழுது சேர்ந்துள்ள முதல் பிரிவு பட்ட மாணவர்கள் ஜூன் 2005-ல் பட்டம் பெறுவர்.

**மின் நூலகம்:**

மின் நூலகத்தில் இலக்கியம், உரைகள், அகராதிகள், கலைச் சொற்கள் ஒலி-ஒளிப் படக்காட்சிகள், படக்காட்டியகம் ஆகியன உருவமைக்கப்பட்டு இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. இதுவரை 76,192 பக்கங்களை உள்ளடக்கிய 169 புத்தகங்கள் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. 54,127 பக்கங்களை உள்ளடக்கிய 180 புத்தகங்களை இணையதள உள்ளீடு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. இது தவிர, தமிழ்நாட்டிலுள்ள 126 சைவ மற்றும் வைணவக் கோயில்களின் ஒலி-ஒளிப் படக்காட்சிகளின் தொகுப்புகளும் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன.

**தமிழ்த் தகவல் தொழில்நுட்பப் பணிகள்:**

தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின்கீழ், கீழ்க்கண்ட தமிழ் மென்பொருள்கள் உருவமைக்கப்பட்டுள்ளன:



1. பொன்விழி - ஒளி வழித் தமிழ் எழுத்துரு அறிவி (Tamil OCR)
2. தமிழ் தேடு பொறி (Tamil Search Engine)
3. தமிழ் இணையதள உலாவி ( Tamil Web Browser)
4. தமிழில் விண்டோஸ் 95,98
5. இதம் 2000 - தமிழ் சொற்செயலி (Tamil Word Processor)
6. தமிழ் அச்சு எழுத்திலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள் (Tamil text to Voice Synthesizer)

'பொன்விழி' - தமிழ் OCR என்னும் தமிழ் மென்பொருள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002 ஜூன் திங்கள் 22ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.

கீழ்க்காணும் தமிழ் மென்பொருள்கள் உருவமைக்கப்பட்டு வருகின்றன:

1. ஜாவா மொழி மூலம் தமிழ்ச் சொல்லை உச்சரித்தல் (Java based Tamil Text to Speech Synthesizer)
2. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்தல் (Machine Aided English - Tamil Translation)
3. தமிழ்த் துறைத்தள மேலாண்மை (Tamil Database Managemen Package)
4. தமிழ்ச் சொல்வலை (Tamil Wordnet to enhance machin Translation)
5. தமிழ் MS Access (Tamil MS Access)
6. தமிழ் லினெக்ஸ் (Tamil Linux)
7. தமிழ் 'ஜாவா' மற்றும் தமிழ் 'சி' (Tamil 'Java' and Tamil C

**தமிழ் மென்பொருள்களுக்குச் சான்று வழங்கல்:**

மென்பொருள் நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட கீழ்க்காணும் தமிழ் மென்பொருள்களுக்கு TAM/TAB தரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா எனச் சோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளன:

1. சுரபி (Surabi Tamil Interface)
2. சங்கப் பலகை - தமிழ் விசைப் பலகை ('Sanga Palagai' Tamil Keyboard)
3. தமிழ்ச் சொல் 2001 (Tamil Word 2001)
4. ஆங்கூர் - தமிழ் சொற்செயலி (Ankur - Tamil 99 Word Processor)
5. பொன்விழி - Tamil OCR
6. இன்டோவேர்ட் - Tamil Word Processor

கீழ்க்காணும் தமிழ் மென்பொருள்கள் சான்றிதழ் தகுதிக்கு சோதிக்கப்பட்டு வருகின்றன.

1. சக்தி
2. ஐ.எஸ்.எம்.2000
3. விண்டிக் 2000





## இணைப்பு III

[306ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண் 32—சட்டத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**முன்னுரை**

சட்டம் சமுதாயத்திற்கு நீதி வழங்குவதற்கானதாகும். இவ்வரசின் சட்டத் துறை, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப சட்டங்களை இயற்றுகிறது.

சட்டத் துறையின் முக்கிய பணி சட்ட ஆலோசனை வழங்கும் தன்மையானது. சட்டத் துறையானது சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளில் இருந்தும் கேட்கப்படுகிற சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்கி வருகிறது. அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவளித்து, சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர் ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி

ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும் பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது.

(1) சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும் நீக்கமும்.

(2) மாநில ஆட்சி மொழிப் பிரிவு

(3) மாநிலச் சட்ட ஆணையம்

(4) சட்டக் கல்வி

(5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

(6) சட்டங்களை மறுபடியும் வெளியிடுதல் மற்றும் மீண்டும் அச்சிடுதல்

**சான்றுறுதி அலுவலர்களின் அமர்த்துகையும் நீக்கமும்**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். சான்றுறுதி அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படும்போதெல்லாம் வழக்கறிஞர் தொழிலில் போதிய பயிற்சி அனுபவம் பெற்றவர்களைச் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்துமாறு மாவட்ட நீதிபதிகள் வழக்குரைஞரின் பெயர்களை அரசின் சட்டத் துறைக்கு பரிந்துரை செய்வர். சட்டத் துறை மாவட்ட நீதிபதியின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு சட்டத் துறைச் செயலாளரின் கையொப்பத்துடனான இலச்சினையுடன் வழக்குரைஞர்களை சான்றுறுதி அலுவலராக அவர்கள் தொழிலாற்றுவதற்கான சான்றுறுதியினை அளிக்கிறது. இவர்களின் தவறான நடத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, சட்டத் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களது பெயர்களைப் பட்டியலிலிருந்து நீக்கும். 31-3-2003 வரையுள்ள கணக்குப்படி இம்மாநிலத்தில் 1,779 சான்றுறுதி அலுவலர்கள் உள்ளனர்.



**மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு**

1965ஆம் ஆண்டு முதன்முதலாக அமைக்கப்பட்டு மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து, சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும் மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும் அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 1989ஆம் ஆண்டில் மீண்டும் அமைத்துருவாக்கப்பட்டது.

2. மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத் துறை கூடுதல் செயலரின் தலைமையிலும் சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழிபெயர்த்து வருகிறது.

3. மைய மற்றும் மாநிலச் சட்டங்களின் மொழிபெயர்ப்பினைத் துரிதப்படுத்துவதில் அரசு அக்கறை கொண்டிருப்பதன் காரணமாக சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் பணியுடன் கூடுதல் பணியாக அவர்களிடம் மொழிபெயர்ப்புப் பணியினையும் அளிக்க அரசு முன் வந்துள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களின் மொழி பெயர்ப்புப் பணிக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்பட உள்ளது. சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு சட்டத் துறையின் அரசுக் கூடுதல் செயலாளர் மற்றும் சட்ட ஆட்சி மொழிப் பிரிவில் அனுபவம் மிக்க அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்படும். மையச் சட்டங்களை மொழி பெயர்த்து அச்சிடும் செலவுகளை மைய அரசு ஏற்கிறது. அரசு மைய அச்சகத்தில் புத்தக வடிவில் அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டிருந்த 103 மையச் சட்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வாண்டில் 60 மையச் சட்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு புத்தக வடிவில் இருமொழிப் பதிப்பாக (தமிழ்-ஆங்கிலம்) அச்சிடப்பட்டு அரசு மைய அச்சகத்திலிருந்து வரப்பெற்றுள்ளன. ஏனைய 13 சட்டங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு மேற்கொள்கிறது.

## மாநில சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையம் பின்வருபவர்களைக் கொண்டிருக்கும்:

(1) தலைவர்

(2) இரண்டு முழு நேர உறுப்பினர்கள்

(3) இரண்டு பகுதி நேர உறுப்பினர்கள்

(4) ஒரு முழு நேர உறுப்பினர்-செயலாளர்

ஆங்கிலேயர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களையும், அதற்குப் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களையும் நன்கு ஆய்வு செய்து, அவை தற்போதைய சூழலுக்கு ஒத்து வருமா என்பதையும் கண்டறிந்து, அவற்றில் செய்யக்கூடிய மாற்றங்களையும் திருத்தங்களையும் அரசுக்குப் பரிந்துரைப்பது இதன் பணிகளாகும். மாநிலச் சட்டங்கள், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் வழக்குகளில் முடிவு செய்யப்பட்ட தீர்ப்புகளுக்கு இணங்கிய வகையில் அவை இருக்கின்றனவா என்பதனை மேலும் ஆய்வுசெய்து அச்சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களையும் பரிந்துரை செய்யும்.

மேலும், மாநில சட்ட ஆணையம்,

(1) தற்போதுள்ள சட்டங்களுக்குத் தகுந்த மாற்றமைவுகள் மற்றும் திருத்தங்கள் குறித்து ஆலோசனை கூறுதல்;

(2) தகுந்த சமூக மற்றும் பொருளாதார சட்டமியற்று நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

(3) மாநிலங்களுக்கிடையேயான மற்றும் மைய மாநிலங்களுக்கிடையேயான நல்லுறவுகளுக்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

(4) நீதி மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் தொடர்பாக உகந்ததும், விரைவானதுமான நடைமுறைகளுக்காக ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கூறுதல்;

(5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாது, இந்த மாநிலத்திற்கும் பொருந்துகிற மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகள் குறித்து ஆலோசனை கூறுதல்;

ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.



மாநிலச் சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த ஏழு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது:—

| வரிசை எண் | பொருள் |
|---|---|
| (1) | ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின்போது இயற்றப்பட்ட "நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்". |
| (2) | தமிழ்நாடு மாநிலத்திற்கும் பொருந்துகிற மையச் சட்டங்கள். |
| (3) | 1884ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி "கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்". |
| (4) | 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம். |
| (5) | 1867 மற்றும் 1891ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம். |
| (6) | 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச்சட்டம். |
| (7) | 1960ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடுச்) சட்டம். |

## சட்டக் கல்வி

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1953ஆம் ஆண்டு மாநிலத்தில் சட்டக் கல்வித் துறை உருவாக்கப்பட்டது.

தற்போது, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் உள்ளன. அக்கல்லூரிகள் தற்போது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை பெங்களூரில் உள்ள இந்திய தேசிய பள்ளியின் தரத்திற்கு, அரசு உயர்த்தியுள்ளது. 2002-2003 கல்வியாண்டு முதல் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) தொடங்கி செயல்பட்டு வருகிறது.

சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் நிலை இவ்வாறு உயர்த்தப்பட்டது. சட்டக் கல்வியில் வழக்கமான சேர்க்கையை பாதிக்கக்கூடாது என்ற நோக்கத்தை உறுதி செய்ய, பிற

[2003 ஏப்ரல் 11

சட்டக் கல்லூரிகளில் உள்ள 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டக் கல்வி சேர்க்கைக்கான இடங்களை அரசு கூடுதலாக்கியுள்ளது. தற்போதுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

**பி. எல். எனும் சட்ட இளங்கலைப் பட்டம்:**

| கல்லூரி | 3 ஆண்டுகள் | 5 ஆண்டுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| அரசு சட்டக் கல்லூரி, திருச்சி | 200 | 160 | 360 |
| அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் | 200 | 160 | 360 |
| அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி | 200 | 160 | 360 |
| **மொத்தம்** | **600** | **480** | **1080** |

ஐந்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் (3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் மற்றும் முதுநிலைப் பட்டம்) படிக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| சென்னை | — | 1806 |
| மதுரை | — | 1128 |
| திருச்சி | — | 936 |
| கோயம்புத்தூர் | — | 936 |
| திருநெல்வேலி | — | 680 |
| **மொத்தம்** | — | **5786** |

2002-2003 ஆம் கல்வி ஆண்டில் 3 ஆண்டு சட்டப் படிப்பு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பிற்கு உள்ள 1132 இடங்களுக்கும் மொத்தம் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 21,188.



2003 ஏப்ரல் 11]

பல்வேறு அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் நீதிமன்ற வழக்கு வாதப் பயிற்சி (Moot Court) போட்டிகளில் பங்கேற்கும் வண்ணம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாணவர்களின் நலனுக்காக, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் நடைமுறையில் உள்ளது.

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் கணினிக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை மற்றும் எளியோர் பயன்பெறும்வகையில் அரசு சட்டக் கல்லூரிகளில் இலவசமாக சட்ட உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, மதுரை அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம் கட்ட ரூ. 71.75 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டு, அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இவ்விடுதி விரைவில் செயல்படத் தொடங்கும். இதில் சுமார் 70 மாணவியர் தங்கிப் பயில இயலும்.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்:**

சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்படும் அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட இரு முழு நேர முதுகலைச் சட்டப்படிப்புகளை அறிமுகப்படுத்த உள்ளது:—

(1) வணிகச் சட்டம்

(2) அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் சட்ட ஒழுங்கு.

2003-2004 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் பின்வரும் தொலைதூரக் கல்வித் திட்டங்களை வழங்க உள்ளது:—

(1) பொதுக் காப்புறுதி பற்றிய முதுநிலை பட்டயப் படிப்பு

(2) அறிவு சார்ந்த சொத்துரிமை பற்றிய முதுநிலை பட்டயப் படிப்பு

(3) தொழிலாளர் சட்டங்கள் பற்றிய முதுநிலை பட்டயப் படிப்பு

(4) அறிவு செறிந்த சட்டங்களில் இளங்கலைப் பட்டம் (பி.ஏ.எல்.)

ஆசிரியர்கள் தங்கள் கற்பிக்கும் திறனை உயர்த்திக்கொள்ளவும் தங்கள் அறிவை காலத்திற்கு ஏற்ப உயர்த்திக்கொள்ளவும், பல்கலைக் கழகம் கருத்தரங்குகள், கருத்துக் கோவைகள் மற்றும் பயிலரங்குகள் ஆகியவற்றை காலந்தோறும் நடத்தி வருகிறது.

**சட்டங்களை மறுபடியும் வெளியிடுதல் மற்றும் மீண்டும் அச்சிடுதல்**

பொதுமக்களுக்காக அனைத்து மையச் சட்டங்கள், சட்ட வரைவுகளும், அவசரச் சட்டங்களும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகின்றன. அன்றைய தேதிவரையிலான திருத்தங்களுடன் தமிழ்நாடு சட்டங்கள், நிர்வாகத் துறையின் தேவைக்காகவும், பொதுமக்களுக்காகவும் சட்டத் துறை அவற்றைப் புத்தக வடிவில் வெளியிடுகிறது. அவை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.



**2003-2004 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்**

| தொடர் எண் | திட்டப்பணிகளின் விவரம் | இறுதிநிலைச் செலவு | | | 2003-2004-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய்க் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | சட்டத் துறையை கணினி மயமாக்குதல் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 | 0.00 | 0.00 | 5.00 |
| 2. | சட்டத் துறை நூலகத்திற்கு தற்போதைய சட்டப் புத்தகங்கள், அறிவிக்கப்படாத தீர்ப்பு வழிச் சட்டப் புத்தகங்கள் முதலியவற்றை வாங்குதல் | 0.00 | 1.50 | 1.50 | 1.50 | 0.00 | 0.00 | 1.50* |

* நிலை நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மொத்தத் தொகை ரூ. 2.00 இலட்சத்துடன் ஏற்பளிக்கப்பட்டது.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | மென்பொருள் வாங்குதல், அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல் முதலானவை | 0.00 | 5.00 | 5.00 | 5.00 | 0.00 | 0.00 | 5.00 |
| 4. | சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கணினி ஆய்வுக் கூடத்தை நிறுவுதல் | 0.00 | 7.50 | 7.50 | 7.50 | 0.00 | 0.00 | 7.50 |
| 5. | அனைத்து அரசு சட்டக் கல்லூரி நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 | 0.00 | 0.00 | 5.00 |
| 6. | கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியின் துணைக் காப்பாளருக்கு குடியிருப்புகளைக் கட்டுதல் | 0.00 | 8.00 | 8.00 | 0.00 | 8.00 | 0.00 | 8.00 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியின் துணைக் காப்பாளருக்கு குடியிருப்புகளைக் கட்டுதல் | 0.00 | 8.00 | 8.00 | 0.00 | 8.00 | 0.00 | 8.00 |
| 8. | பொது மக்களிடையே சட்டம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் | 0.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | 0.00 | 1.00 |
| 9. | [illegible]ட்டப் பல்கலைக் [illegible]கத்திற்கு [illegible]ட்டங்கள் [illegible]டுதல் | 0.00 | 55.00 | 55.00 | 0.00 | 55.00 | 0.00 | 55.00 |
| 10. | ச[illegible]டப் பல்கலைக் க[illegible]கத்திற்கு [illegible]த்தகங்கள் [illegible]ாங்குதல் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 | 0.00 | 0.00 | 5.00 |
| | மொத்தம் | 0.00 | 101.00 | 101.00 | 30.00 | 71.00 | 0.00 | 101.00 |
| | மொத்தம் நிலை நிதிக்குழு ஏற்பளித்தவாறு | 0.00 | 101.50 | 101 50 | 30.50 | 71.00 | 0.00 | 101.50 |

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.